
# ஆராய்ச்சி


**AARAICHI**

Research Quarterly Journal

April 1974



நா. வானமாமலை


மலர் 4

இதழ் 3

15

ஏப்ரல் 74

## உள்ளே....



## CONTRIBUTORS

1 N. Vanamamalai, Editor Aaraichi. Article based on a paper read at the Dravidian Folk lore seminar held under the anpices of the International Assn of Dravidian linguistics at Mysore.

2 S. Jeyapaul, M. A. Research student, Linguistics Dept, Anna malai University. Has contributed articles on ethnology of the South Indian tribal folks to learned Journals,

3 Thamby Ayya Fernando. A well informed amateur reseacher interestea in regional history of the south eastern coastal folks.

4 R. Nagaswamy — Directer of Archaeology. Has published learned articles and publicist writing on a variety of subjects related to history and its sources. Two books of his have been renewed in thls Journal — மாமல்லை, யாவரும் கேளிர். He is a prolific and versatile writer.

5 U. Minakshisundaram — Dept. of Tamil, V. O. C. College, Tuticorin. Has contributed articles to Aaraichi. Has also published popular articles on folk songs and translated stories from English.

6 A. V. Subramania Iyer, frequent contributor to Aaraichi and outhor of many books on history of literature anb literary criticism.

Reviews — N. Vanamamalai, Editor.
K. Subramanian — Regular contributor is Aaraichi.
T. Mangai — Editorial Asst. Aaraichi.

# ஆராய்ச்சி

மலர் 4 | ஏப்ரல் 1974 | இதழ் 3

வாசகர்கள் இதழ் மெலிந்திருப்பதைப் பார்த்து வருந்துவார்கள். மெலிந்திருந்தாலும் வழக்கமான அம்சங்களும் புதிய அம்சங்களும் இடம் பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள். பண்பாடு, இலக்கியம், வரலாறு, கல்வெட்டு, நாட்டுப்பாடல், இலக்கிய வரலாறு, முதலிய பல்வேறு துறை ஆய்வுகளை உள்ளடக்கிய கட்டுரைகள் வெளியாகின்றன. விஞ்ஞானம், கல்வெட்டு பற்றிய சில கட்டுரைகளை தாள் விலை உயர்வு, தாள் பற்றாக்குறை காரணமாக வெளியிட இயலவில்லை.

தமிழக வரலாற்றில் கி. பி. 3ம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் வடமொழியில் தமது பெருமையையும், தமது குலப் பெருமையையும விளக்கிக் கவிதைகள் எழுதுவித்து தமது செப்பேடுகளிலும், கல்வெட்டுக்களிலும் பதித்துக்கொண்டுள்ளார்கள். இவை 'பிரசஸ்தி' என்று வழங்கப்படும் ராஜராஜன் காலத்திலிருந்து தமிழ் மெய்கீர்த்திகள் ஆராயப்பட்டிருப்பது போல, வடமொழிப் பிரசஸ்திகளும், கிரந்த வரிவடிவ மெய்க்கீர்த்திகளும் ஆராயப்படவில்லை. இவ்வாராய்ச்சியில் ஈடுபட யாழ்ப்பாண கல்லூரி வரலாற்றுப்பேராசிரியர் சிவசாமியும், தமிழ்நாடு தொல்பொருள் துறை இயக்குநர் இரா. நாகசாமியும் முன்வந்துள்ளனர். பேராசிரியர் சிவசாமியின் கட்டுரையின் முதற்பகுதியை இவ்விதழில் வெளியிட எண்ணியிருந்தேன். பொருளாதாரம் தடைவிதித்துவிட்டது. அடுத்த இதழில் அதை வெளியிடுவேன்.

சென்ற இதழ் வெளிவந்த பிறகு மைசூரில் அனைத்துலக் திராவிட மொழியியல் ஆய்வாளர் கழகத்தின் ஆதரவில் ஒரு பண்பாட்டியல் கருத்தரங்கு நடைபெற்றது. பன்னிரண்டு கட்டுரையாளர்களும், இருபத்தெட்டு பங்காளர்களும் கலந்துகொண்டனர். முதல் கட்டுரை என்னுடையது. அது இவ்விதழில் வெளியிடப்படுகிறது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளிலும் நாட்டுப் பண்பாட்டியல் வெளியீடுகள் ஆய்வுகளைப் பற்றி விவரக் கட்டுரைகளும், மதிப்பீட்டுக் கட்டுரைகளும் படித்து விவாதிக்கப்பட்டன. கன்னடத்தில் தான இத்துறையில் அதிகமான வெளியீடுகளும், ஆய்வுகளும் நடந்துள்ளன. ஆடல்-பாடல்கள், கலைகள், வழிபாடுகள் பற்றிய பல துறைகளில் ஆய்வுகள் நடத்த கன்னட நிலையம் ஆதரவளிக்கிறது. அந்நிலையத்தின் உறுப்பாக ஒரு folk lore museum துவங்கப்பெற்றுள்ளது. அதற்கு என ஒரு கன்னட நிலைய விரிவுரையாளர் பொறுப்பேற்றுள்ளார். கன்னடமொழியில் எம்.ஏ. பட்டம் பெற கன்னட நாட்டுப்பாடல் இலக்கியம் ஒரு கட்டாய பாடமாகவுள்ளது. இத்துறையில் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மிகவும் பின்தங்கியுள்ளன.

இந்நான்கு மொழிகளிலும் நாட்டுப்பாடல்கள், கலைகளில் ஆய்வுகளை வளர்க்கவும், ஒப்பியல் இணைப்புகளை ஏற்படுத்தவும் 4 உறுப்பினர்களைக் கொண்ட இணைப்பு - நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதில் பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம் (கன்வீனர்) நா. வானமாமலை (தமிழ்) வெ. மன்னப்ப தாயக் (கன்னடம்) ராமாஜி (தெலுங்கு) ஆகியவர்கள் அங்கம் வகிப்பார்கள். இது நமது நாட்டுப் பண்பாட்டியல் ஆய்வுகளுக்கு ஊக்கமூட்டும் ஒரு நிகழ்ச்சி.

அடுத்த ஜுன் மாதம் அனைத்திந்திய கல்லூரித் தமிழாசிரியர் மாநாட்டுக் கருத்தரங்கு பாண்டிச்சேரியில் நடைபெறவிருக்கிறது. 15 ரூ. கட்டணமாகச் செலுத்தி கட்டுரையெழுதியனுப்பியவர்கள் தவறாமல் சென்று பங்குகொள்ளுமாறு வேண்டுகிறேன். பழம் பெருமை, செக்கு வட்ட ஆய்வுகள், கிணற்றுத்தவளைப் பார்வை, புதுமை வெறுப்பு, தற்காலத்தில் வளரும் தமிழ் இலக்கியத்தின் மீது குரோதம்; தமிழ் மக்களுடைய மொழியை அவர்களுக்குச் சொந்தமாக்கி அதன் வாயிலாகவே உலக வளர்ச்சிப் போக்கையும் அறிவையும் அறியவிடாமல் எழுத்துத் தமிழை ஒரு குழுஉக்குறியாக வைத்திருப்பது போன்ற போக்குகளிலிருந்து தமிழ் கற்ற நவீனக் கண்ணோட்டங்களை அறிந்த இளைஞர்கள், பரந்த ஆய்வுகள், பிறமொழிகளோடு ஒப்பிட்டு ஆய்வுகள், பிறமொழி இலக்கியங்களுக்கு மதிப்பு, பேச்சுத் தமிழ் - எழுத்துத் தமிழ் முரண்பாட்டைக் குறைத்தல், நவீன இலக்கிய ஆய்வுகள் ஆகிய புதிய போக்குகளுக்கு, இவ்வாய்வரங்குப் பணிகளை மாற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

# மொழியல்லாத நாட்டுப் பண்பாட்டுச் சான்றுகளை பொருள் கொள்ளும் முறை

நா. வானமாமலை

## 1·1 நாட்டார் வழக்காறும், நாட்டார் வாழ்க்கையும்:-

ஒஹியோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிரான்ஸிஸ் லீ உட்டீ, நாட்டார் வழக்காறு (Folk lore) என்ற சொல்லை, "வாய்மொழியாகப் பரப்பப்படும் இலக்கியம்" என்று வரையறுத்துள்ளார். இதனைப் 'பயன்பாட்டு வரையறை' என்று அவர் கூறுகிறார். வாய்மொழி இலக்கியம், எழுத்துருவ இலக்கியம் ஆகிய இரண்டையும் கற்ற தன் போன்ற அமெரிக்க ஆய்வாளர்களுக்கு இவ்வரையறை பயன்படுவதால் அவ்வாறு இச்சொல்லின் பொருளை வரையறுப்பதாக அவர் எழுதுகிறார். மானிடவியலாரும், தம்மைப் போன்ற மானிடவியல் அனுதாபிகளும் வாய்மொழியால் பரப்பப்படும் இலக்கியம் தவிர வேறு எதனையும் Folk lore என்று கருதவில்லை என்று கூறுகிறார்.

ஆனால் வில்லியம் பேஸ்கன் என்னும் மானிடவியல் ஆய்வாளர், இதனை மிகவும் குறுகிய வரையறையாகக் கருதுகிறார். ஏனெனில் Folk lore-இன் எல்லைக்குள் வருகிற பலதுறைகளை இவ்வரயைறை விலக்கிவிடுவதால் இது ஒடுக்கமான வரையறை என்று கருதுகிறார். முன்னர் இவ்வரையறையை அவர் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், Folk lore என்ற சொல்லிற்குப் பதிலாக Verbal Art — வாய்மொழிக்கலை என்ற சொல்லைப் பயன்படுத்துவது பொருத்தமானது என்று அவர் தற்பொழுது நம்புகிறார்.

இச்சொற்றொடர் வாய்மொழியாகப் பரப்பப்படும் இலக்கியத்தையும், கலைகளையுமே குறிப்பிடும். நாட்டார் நம்பிக்கைகள், (folk beliefs) ஆடல்கள், சடங்குகள், அலங்காரக் கலைகள் மருத்துவம், விளையாட்டுகள், சித்திரம், ஓவியம், வைக்கோல் பொம்மைகள், கைத்தொழில் படைப்புகள், பொம்மை, பாய்ச் சித்திரங்கள் ஆடைகளின் சித்திர வேலைப்பாடுகள் போன்ற நூற்றுக்கணக்கான நாட்டுக் கலைகளை, இவ் வரையறை ஒதுக்கிவிடுகிறது.

1·2 Folk lore என்ற சொல் எவற்றையெல்லாம் சுட்டுகிறதோ, அவையனைத்தையும் குறிப்பிடும் கருத்துக்கு பொருத்தமான ஒரு வரையறை, நாட்டார் வாழ்க்கை (Folk life) என்றுடான்பாயர் கருதுகிறார். Folk life என்னும் இச்சொற்றொடர் 'வோக்ஸ் லீபன்' (Volks leben) என்ற ஜெர்மானியச் சொல்லின் மொழி பெயர்ப்பாகும். "இது ஒரு புதிய ஆங்கிலமொழிச் சொல், இது இன்னும் அமெரிக்க அகராதிகளில் காணப்படவில்லை" என்று அவர் எழுதுகிறார்.

1·2·2 1960வரை அமெரிக்காவில் இவ்வியல் வளர்ச்சி பெற்றிருந்த அளவிற்கு, "தேசிய அல்லது மண்டல அளவில் வளர்ந்துள்ள பண்பாட்டின் எழுத்தறியாத நாட்டார் மட்டத்திலுள்ள பண்பாட்டு நிலையின் முழுமையான ஆராய்ச்சியாக" உள்ளது. "நாட்டார் வாழ்க்கை பற்றிய ஆராய்ச்சி நாட்டார் பண்பாடு முழுவதையும் ஆராய்கிற நோக்கமுடையதாக வளர்ச்சியடைந்துள்ளது" நாட்டார் பண்பாடு என்பது அடிப்படையில் மரபு வழியாகத் தொடர்ந்து, மரபாக நிலைத்திருப்பது. இது கிராமியப் பரப்புள்ளதாகவும், இயந்திரத் தொழில் வளர்ச்சிக்கு முந்தியதாகவும் உள்ளது. இக்கூற்றிற்கு மிகச் சில விதிவிலக்குகளே உள்ளன. இருபதாம் நூற்றுண்டின் இயந்திரமயமான, மொத்தமாக உற்பத்தி செய்யப்படும் பொதுஜனப்பண்பாட்டிற்கு, அது முற்றிலும் வேறானது. பொருத்தமானதோர் சொல்லைப் பற்றிப் பெரிதும் சண்டையிட்டுக்

கொள்ளவேண்டியதில்லை. ஆயினும் பயன்படுத்தப்படும் எந்தச் சொல்லும் எக்கருத்துத் தொகுப்பைக் குறிக்கிறது. அதன் மூலப்பகுதிகள் எவை என்பதையறிந்து கொள்ளுவது நாட்டுப் பண்பாட்டியல் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் முக்கியமானது.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் நாட்டார் வாழ்க்கை (Folk life) என்ற சொல்லை ஆராச்சியாளர்கள், "வாய்மொழி, பொருளாயதம், மானசீகம் ஆகிய அனைத்துச் செயல்பாடுகளையும் குறிப்பிடும் பொருளில் அறிந்து கொள்ளுகிறார்கள்.

131 டான்யோடர் என்னும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள், Folk lore என்பது ஒரு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இயக்கத்தைக் குறிப்பிடுவது என்றும், அவ்வியக்கம் ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் இவ்வியலின் ஒரு பகுதியின் ஆய்வுகளைக் குறிப்பதென்றும் கூறுகிறார். நாட்டார் நிலையிலுள்ள ஒரு பண்பாட்டுக் கூறுகளை, சில துறைகளில் மட்டும், நாட்டுப்பாடல், நாட்டார் கதைகள், நாட்டார், நம்பிக்கைகள் போன்ற துறைகளில் ஆராய்ந்து கண்டார்கள். இது ஒரு பகுதி ஆய்வு மட்டுமே; முழுமையான ஆய்வு அன்று."

'நாட்டார் வாழ்க்கை' என்ற சொற்றொடர் நாட்டார் பண்பாட்டின் முழுமையான எல்லைக்குட்பட்ட அனைத்துத் துறைகளை ஆராய்வதைக் குறிப்பிடும் இருபதாம் நூற்றாண்டின் கண்டு பிடிப்பாகும்.

இவ்வியக்கம் நாட்டார் வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்க அவர்களது வாழ்க்கையை முழுமையாக ஆராய்வதாகும். நாட்டார் வாழ்க்கையின் சகல அம்சங்களும், சொல்லிலும், செயலிலும், படைப்பிலும் அவற்றின் வெளியீடுகளும், இக்கருத்தை வரையறையாக ஏற்றுக்கொண்டவர்களால் ஆராயப்படுகின்றன. இங்கு வாழ்க்கையின் தனிஅம்சங்கள், ஆராயப்பட்டு, வாழ்க்கையின் முழுமையோடு இணைத்துக் காணப்படுகின்றன. இவ்வியலின் துவக்ககாலத்தில் ஆய்வாளர்கள், மொழியோடு புணர்ந்த பாடல், கதை, கதைப்பாடல், விடுகதை, பழமொழி முதலியனவற்றை ஆராய்ந்தார்கள். தற்பொழுது இத்துறையின் ஆய்வுக்களம் விரிவாகியுள்ளது. உழவுத்தொழில், உழவுத்தொழில் வரலாறு, நாட்டார் சமையல் கலை, நாட்டார் உடைகள், நாட்டார் வழிபாடுகள், நாட்டார் விழாக்கள், நாட்டார் பேச்சுமொழி, நாட்டு வைத்தியம், நாட்டுக் கைத் தொழில்கள்,, லட்ரினில் (கழிப்பிடம்) எழுதப்பட்டுள்ள சொற்கள், தீட்டப்பட்டுள்ள சித்திரங்கள், பூவேலைப்பாடுகள் முதலிய எண்ணற்ற துறைகளில் இன்று நாட்டுப் பண்பாட்டு ஆராய்ச்சியாளர்கள், ஆய்வுகள் செய்துள்ளார்கள்.

1·2·3 "ஐரோப்பிய நாடுகளில் 'நாட்டார் வாழ்க்கை' பற்றிய ஆய்வுகள் பெரிதும் முன்னேறியுள்ளன. ஐரோப்பாவில் நாட்டார் பண்பாடுகளைப் பற்றி நிகழ்ந்துள்ள ஆராய்ச்சிகளைக் கண்டு அமெரிக்க ஆய்வாளர்கள் வியப்படைகிறார்கள். ஐரோப்பிய ஆய்வாளர்கள், அமெரிக்க ஆய்வாளர் களைவிட அதிகமாக நாட்டுப் பண்பாட்டுச் சான்றுகளை சேகரிப்பதிலும், வகைப்படுத்தி பதிவு செய்வதிலும் வெகுவாக முன்னேறியுள்ளார்கள்."

இதனை அமெரிக்க ஆய்வாளர் ஒருவரே ஒப்புக்கொண்டுள்ளார். தங்களுடைய குறுகிய ஆய்வுமுறைகளின் குறைபாடுகளை அமெரிக்க ஆய்வாளர்கள் உணர்ந்துவருகிறார்கள்.

1·3·3 மேற்கூறியவற்றால் நாட்டு பண்பாட்டியல் ஆய்வாளர்கள், ஒரு போக்கான, குறுகிய சில துறை நாட்டுப் பண்பாட்டுப் படிமத்தினின்றும் விலகி அனைத்துப் போக்கான பரந்த, பல்துறைப்பட்ட நாட்டுப் பண்பாட்டுப் படிமத்தை நோக்கித் தமது ஆராய்ச்சியைத் திருப்பியுள்ளார்கள் என்ற உண்மை விளங்கும். இப்படிமம்தான் 'நாட்டார் பண்பாடு' என்ற கருத்தமைப்பாகும். ஒருநாடு அல்லது சமூகத்தில் இணைந்துள்ள மானிடக்குழுவின் முழுமையான பண்பாட்டை இக்கருத்தமைப்புக் குறிப்பிடும்.

## 2·1 இந்திய நாட்டார் பண்பாட்டு ஆய்வுகளின்மீது அந்நிய ஆய்வாளர்களின் கருத்துக்களின் தாக்கம்:-

இந்தியாவில் இவ்வியலின் ஆய்வுகள் அந்நிய அறிஞர்களால் துவக்கப்பட்டன. அவர்களுடைய கருத்துக்களும், ஆய்வுமுறைகளும்

நமது ஆராய்ச்சியாளர்களது சிந்தனைகளைத் தாக்குவது இயற்கையே. அந்நிய முன்னோடிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளுவது தவறு என்று கூறமுடியாது. ஆனால் அவர்களுடைய கருத்துக்களையும், ஆய்வுமுறைகளையும் முழுமையாகக் கடன்பெறுவது, நமது ஆராய்ச்சியை வறண்டதாகவும், பயனற்றதாகவும் ஆக்கிவிடும். அமெரிக்க சமுதாயத்தின் சமூக, பண்பாட்டுச் சூழல், நமது சூழல்களைவிட வேருனது. அமெரிக்க நாட்டுப் பண்பாட்டு வளர்ச்சி, அந்நாட்டின் சமூக வரலாற்றுப் போக்கை அடியொற்றியதாகும். அவர்களுடைய முறையியலிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல இருந்தபோதிலும், அவர்களுடைய முறையியலையும், கருத்துக்களையும் நாம் முழுமையாக நம்முடைய பண்பாட்டுப் பொருள்களுக்கும், நிலைமைகளுக்கும் யாந்திரீகமாகப் பொருத்திவிட முடியாது.

## 2·2 அமெரிக்க நாட்டுப் பண்பாட்டின் வளர்ச்சி:-

அமெரிக்கப்பண்பாடு இந்திய பண்பாட்டைப் போல பழமையானதன்று. ஆனால் அதன் நாட்டுப் பண்பாடுகள் மிகப்பல சக வேறுகளைக் கொண்டது. அமெரிக்காவின்மா பெரும் நிலப்பரப்பில், பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்விடிஷ், ஸ்பானிய, இத்தாலிய மக்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் குடியேறினர். ஐரோப்பாவின் பல நாடுகளினின்றும் குடியேறிய மக்கள் தங்களது தேசியப் பண்பாடுகளையும் (national culture) நாட்டுப் பண்பாட்டையும் தம்மொடு கொணர்ந்தனர். இப்புதிய நாட்டிற்கு குடியேறியவர்கள், ஏழை உழவர் குடிமக்களும், உழைக்கும் மக்களும் ஆவர். இவர்கள் தங்கள் நாட்டுப் பண்பாட்டையும் இங்கு கொணர்ந்தனர். அவர்கள் வருகையின்போது, அமெரிக்காவில் இனக்குழு பண்பாட்டு நிலையிலிருந்த சிவப்பு இந்தியர்களே, அமெரிக்காவின் சில பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து, அடிமைகளாக அமெரிக்காவிற்கு வந்த ஆப்பிரிக்க மக்களிடையே ஒரு தனியான பண்பாடு இருந்தது.

ஒவ்வொரு ஐரோப்பியப் பண்பாடும், அதனையுடையவர்கள் வாழ்ந்த பகுதியில் இனக்குழுப்பண்பாட்டுக் கலப்பின் காரணமாக புதிய மண்டலப் பண்பாடுகள் தோன்றின. ஒவ்வொரு ஐரோப்பியப் பண்பாடும், இனக்குழுப் பண்பாட்டை மாற்றியமைத்தது. 20வது நூற்றாண்டில் அமெரிக்கா தொழில்மயமாயிற்று. கிராமிய சமுதாயம் தொழில்மயமாயிற்று. கிராமிய சமுதாயம் தொழில்மய சமுதாயமாக மாறியது. ரேடியோ, பத்திரிக்கைகள் முதலிய பிரச்சாரக் கருவிகளின் செயல்பாட்டினால் அமெரிக்கப் பண்பாடு என்ற தேசியப்பண்பாடு உருவாயிற்று. பண்பாட்டினால் இணைக்கப்பட்ட 'அமெரிக்க நாடு' என்ற இயக்கம் வளர்ச்சி பெற்றது. ஐரோப்பியப் பண்பாடுகள் நிலைகொண்டிராத மலைப்பகுதிகளில் சிவப்பு இந்தியர்களது பண்பாடு மாறுதல் அடையாமல் இனக்குழு நிலையிலேயே இருந்தது. ஒரே தேசியப் பண்பாடு உருவாகும் இயக்கத்தில் பங்கு பெருமல் சில திட்டுக்களில் பழைய நாகரிகம் தேக்க நிலையில் இருந்தது. இப்பொழுதும் ஐரோப்பிய உழவர் குடிமக்களின் பலவகைப்பட்ட நாகரிகங்கள் சிறிது மாற்றமடைந்து நிலவின. ஒரு பண்பாட்டுக்குழுவை, மற்றைய வற்றிலிருந்து வேறுபடுத்திக்காட்டும் பண்பாட்டு கூறுகள் மறையாமல் நிலவியிருந்தன. இதில் ஐரோப்பிய நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளும், இந்திய, நீகிரோவ இனக்குழுப் பண்பாட்டுக் கூறுகளும் வெவ்வேறு அளவில் கலந்திருந்தன. தேசியப் பண்பாட்டின் அடிநிலையில் இப்பண்பாடுகள், நாட்டுப்பண்பாட்டுக் கீழ்மட்ட நிலையில் நிலவியிருந்தன. எனவே அமெரிக்க நாட்டுப் பண்பாட்டு ஆய்வாளர்கள் அமெரிக்கப் பண்பாட்டின் கீழ் நிலைப் பண்பாடாகவே, (Sub culture) அமெரிக்க நாட்டுப் பண்பாட்டை ஆராய்கிறார்கள்.

## 2 3 இந்திய நாட்டுப் பண்பாட்டின் நிலை:-

இந்தியப்பண்பாடு (நாட்டுப்பண்பாடு உட்பட) வளர்ச்சியுற்ற நிலைமைகள் அமெரிக்கப் பண்பாடு வளர்ச்சிபெற்ற நிலைமைகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டதாகும்.

இந்தியப் பண்பாடுகள் மிகவும் புராதமானவை இவை தமக்குள்ளும், வெளிநாட்டுப் பண்பாடுகளோடும் கலப்பு அடைந்துள்ளன. மேல் மட்டத்திலும், கீழ் மட்டத்திலும் கலப்பு நிகழ்ந்துள்ளது. மேல்மட்டத்தில் உயர்நிலைப் பண்பாடுகளும், கீழ்மட்டத்தில் நாட்டார் பண்பாடு

களும் கலப்படைந்துள்ளன. விவசாயிகள், கிராமங்களில் வாழும் உழைக்கும் மக்கள், தொழிலாளிகள், கைத்தொழிலாளிகள், மாதர் முதலிய எழுத்தறிவற்ற மக்களின் பண்பாடாயிருப்பதால், இந்திய நாட்டுப் பண்பாடு பெரும்பான்மை மக்களின் பண்பாடாகும். அமெரிக்காவில் 'நாட்டார்' எனப்படுவோர் (folk) உழவுத்தொழில் புரிவோர் 5 சதவிகிதத்திற்கும் குறைந்தவர்களே. கிராமங்களில் வாழ்வோரும் மிகக் குறைவானவர்களே. ஆனால் இந்தியாவன் ஐந்தரை லட்சம் கிராமங்களில் நமது மக்களில் 85 சதவிகிதம் வாழ்கின்றனர். படிப்பில் 75 சதவிகிதம் எழுதப்படிக்கத் தெரியாதவர்களே. எனவே 'நாட்டார்' என்போரே நம் நாட்டில் பெரும்பான்மை மக்கள். எனவே அவர்களது பண்பாடே பெரும்பான்மை இந்தியர்களின் பண்பாடு. அமெரிக்க நாட்டுப்பண் பண்பாட்டிற்கும், இந்திய நாட்டுப் பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு — அமெரிக்காவில் அது அமெரிக்கப் பண்பாட்டின் உப பண்பாடாகும்; 5 சதவிகிதம் மக்களின் பண்பாடாகும். இந்தியாவில் அது பிரதானப் பண்பாடாகும்; பெரும்பான்மை மக்களின் பண்பாடாகும். இதனுள் உயர்பண்பாட்டின் தாக்கம் உள்ளது. ஆனால் அதனை உருத்தெரியாமல் மாற்றும் அளவு இரண்டாயிரம் ஆண்டுகளாக அதன் தாக்கம் இருக்கவில்லை. இந்நூற்றுண்டில் துரிதமான சமுதாய மாறுதல்கள், எழுத்தறிவு மிகுதல், நகரங்களை நோக்கி மக்கள் பெயர்ச்சி முதலிய காரணங்களால் நாட்டில் பண்பாடுகள் விரைவாக மாறுதல்களடைந்து வருகின்றன. மேல்நிலை மட்டங்களின் இந்தியப் பண்பாடுகள் ஒன்றையொன்று பாதித்துள்ளன. இப்பாதிப்பின் முக்கியமான சமய நம்பிக்கைகள். கீழ் மட்டத்திலும் அண்டை நாட்டுப் பண்பாடுகள் ஒன்றையொன்று பாதித்துள்ளன. தாய்த்தெய்வ வணக்கம், செழிப்புச்சடங்குகள் திருமணச் சடங்குகள், பலபகுதிகளின் முட நம்பிக்கைகள் முதலியன பண்பாடுகளுக்கிடையே ஊடுருவியுள்ளன. இதுபோலவே விரைவாக ஒன்றுகியுள்ள உயர்நிலைப்பண்பாடும், நாட்டுப் பண்பாட்டைப் பாதித்துள்ளன. "இதனை பிராமணியமாதல், ஆரியமயப்படுத்தல்" என்ற பெயராலும், "Sanskritisatin" என்ற மொழிப் பெயராலும் அழைக்கிறுர்கள். நமது நாட்டுப் பண்பாட்டின் ஒரு கூற்றை, இச்சொற்கள் குறிப்பிடுமேயன்றி, இந்தியா முழுமையிலும் நிகழ்ந்துள்ள பண்பாட்டு மாறுதல்களின் இயக்கப்போக்கை இச்சொற்கள் சரியாக வெளியிடவில்லை ஒரு நிலப்பரப்பினுள்ளேயே நாட்டார் பண்பாடும் பரஸ்பரத் தாக்கங்கள் பெற்றுள்ளன. சமயச் சடங்குகள், இசை, பக்தி இயக்கத்தில் கலந்துள்ள நாட்டுப்பண்பாட்டுக் கூறுகள், காவிய இலக்கியத்தில் கிரகிக்கப்பட்டுள்ள நாட்டுக் கதைப் பாடல்கள், நாட்டுப்பாடல் அம்சங்கள், இவை உயர்நிலைப் பண்பாட்டில் நாட்டுப்பண்பாட்டின் ஊடுருவல்களுக்குச் சில உதாரணங்களாகும்.

நம் நாட்டின் ஒவ்வொரு பிரதேச பண்பாட்டிலும், ஒரு அடித்தள நாட்டுப் பண்பாட்டியல் மட்டம் உள்ளது. இரண்டுமே தம் இயக்கப் போக்கிலும், பரஸ்பரப் பாதிப்புப் போக்கிலும் வளர்ச்சி பெறுகின்றன. உலக சமுதாய இயக்கம், பண்பாட்டு இயக்கம் இவற்றின் வளர்ச்சி விதிகளுக்கு ஏற்ப இரு பண்பாடுகளும் வளர்ச்சி பெறுகின்றன. காலப்போக்கில் எழுத்தறிவும், சமுதாய இயக்கமும், நகரத் தொழில் வளர்ச்சியும், ஒருமொழி பேசுவோரின் பண்பாட்டை ஒன்ருக ஆக்கிவிடுகிற திசையில் மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு பிரதேச பண்பாட்டின் வரலாற்றில் அதன் நாட்டுப் பண்பாட்டின் தற்கால நிலையை பழமையோடு பொருத்தி இயக்க நிலையில் காண வேண்டும்.

**3·1 கிடைமட்டப் பார்வை, செங்குத்துப் பார்வை** என்ற இருவகையான ஆய்வு நோக்குகள் சமூகவியல் ஆய்வுகளில் உள்ளன. இவை நாட்டுப் பண்பாட்டியலிலும் பின்பற்றப்படுகின்றன. கிடைமட்டப் பார்வை என்பது தற்காலத்தில் நிலவியுள்ள ஆய்வுப் பெருள்களைச் சேகரித்து அவற்றின் இயல்புகளை முழுமையாக வருணிப்பதாகும். இது தற்காலப் பொருள்களின் ஆய்வு. அவற்றின் தற்கால நிலையிலிருந்து அவற்றின் முற்கால நிலைகளை அறியவும், முடிவாகத் தோற்றத்தை அறியவும் கால ஏணியின் பின்னேக்கிச் செல்லும் வரலாற்று ஆய்வு செங்குத்துப் பார்வையாகும்.

இவையிரண்டையும் பயன்படுத்தி ஒரு நாட்டுப் பண்பாட்டுப் பொருள், நிகழ்ச்சி, கலை, இலக்கியம் முதலியனவற்றை முழுமையாக அதன்படிமுறை வளர்ச்சிப்போக்கில் அறியலாம். இவ்வாறு அறியும் முறையால் நமது சான்றுகளைப் பற்றி பொதுவிதிகளை கருத்தமைத்துக் கொள்ளவும் முடியும்.

இம்முறைகளால், நாட்டுப் பண்பாட்டுப் பொருள்களுக்கு பொருள்காணும் முறையியலை விளக்க, நான் மேற்கொண்ட ஒரு ஆய்வில் நான் பயன்படுத்திய முறையியலை உதாரணமாகக் காட்டுவேன். எனது நோக்கம் 'நடுகற்களை நட்டவர்கள் எந்த நம்பிக்கையில் அவற்றை நட்டு வழிபட்டார்கள்?'' என்பதை அறிவதாகும் இன்று வழிபடுபவர்களின் நம்பிக்கையை நேரில் கேட்டறிந்து கொள்ளலாம் (direct interrogation observation in the local context) ஆனுல் பல நூற்ருண்டு காலமாக 'நடுகற்களை நட்டு வழிபட்டு வந்தவர்கள் எந்த நம்பிக்கைகளைக் கொண்டு அவற்றை வழிபட்டார்கள் என்பதை அறிய வரலாற்று நோக்கில் காலவாரியாக நடுகற்களை ஆராய்ந்து செங்குத்து நோக்கில் காலத்தில் பின்னேக்கிச் சிந்தனையைத் திருப்ப வேண்டும்.

முதன் முதலில் நான் தென்காசி அருகில் சதிக்கற்கள் நடப்பட்டிருந்த தலத்தில் சதிக்கற்களல்லாத சில நடுகற்களைக்கண்டு இவையிரண்டிற்குமுள்ள வேறுபாடுகளைக்கண்டேன் அவற்றைவழிபடும் மக்களில் சிலரைப் பேட்டி முறையில் வினவி அவை சதிகற்களல்ல, வீரர்களது நினைவுகற்களென்றறிந்தேன். இவை சதி கற்களது வழிபாட்டு நாட்களல்லாத வேறு நாட்களில் வழிபடப்பட்டன. இவை தற்காலத்திலும் வழிபாட்டுக்குரியனவாக இருக்கின்றன. இது ஒரு நிகழ்காலப்பண்பாடு (living cult) மேலும்பல நடுகற்களைக் கண்டுபிடித்து, அவைபற்றிய தற்கால நம்பிக்கைகளை அறிய நான் முடிவுசெய்தேன் எனது நோக்கம்நடுகற்களை நட்டவர்களின் நம்பிக்கைகளை அறிவதாகும். தற்கால நம்பிக்கைகளிலிருந்து பின்னேக்கிச் சான்றுகளின்மீது சிந்தனையைத் திருப்பினுல் நட்டவர்களது நம்பிக்கையை அறிய இயலும் என்று நான் நம்பினேன். இக்கற்களை நட்டவர்கள் பல நூற்ருண்டுகளாக பல்வேறு காலங்களில் இவற்றை நட்டு வழிபட்டு வந்துள்ளார்கள். கற்களை நட்டவர்கள், வழிபட்டவர்கள் நம்பிக்கைகளில் காலாகாலமாக எவ்வித மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அறியவேண்டும். எனது தற்கால அறிவு நோக்கு (harizontal orientation) ஒரே இடத்தில், நூற்றுக்கணக்கான கற்களைக் காணவும், அவற்றைக் காலவரையறை செய்யவும் தூண்டியது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட வீரக்கற்களைப் பற்றித் தெரிந்துகொண்டு, மிக அதிகமாக ஒரே இடத்தில், பலகாலமாக நடப்பட்ட தலத்தில் உள்ள ஆய்வுப்பொருள்களின் மீது கவனம் செலுத்துதல் வேண்டுமென நான் முடிவு செய்தேன்.

கிடைத்த சான்றுகளை வரலாற்று நோக்கில் காண முயன்றேன். அவ்வாறு நான் கண்ட கற்களில் எழுத்துக்கள் இல்லை. வீரர்களின் புடைச் சித்திரங்களே இருந்தன. எனவே இலக்கியச் சான்களின் மூலம் நடுகற்களைப்பற்றிய சடங்குகளைப் பற்றியும், நம்பிக்கைகளைப் பற்றியும் அறிய முயற்சியை மேற்கொண்டேன். கற்களின் மீதே காலம் பற்றியும் நம்பிக்கைபற்றியும் எவ்விதக் குறிப்புகளும் கிடைக்காததால் காலவாரியாக இலக்கியங்களில் காணப்படும் செய்திகளைத் தொகுத்து அறிந்தேன். சங்க இலக்கியங்கள் தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை முதலிய காலத்தால் வேறுபட்ட நூல்களில் நடுகற்களை நட்டபோது செய்யப்பட்ட சடங்குகளையும், நம்பிக்கைகளையும் பற்றி ஒவ்வொரு நூலிலும் இவற்றில் காணப்படும் வேறுபாடுகளையும் அவற்றினுல் காலப்போக்கால் நிகழ்ந்த நம்பிக்கை மாற்றங்களை அறிந்துகொண்டேன் சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு எடுத்த நடுகல் விழாச் செய்திகளைக் குறித்துக் கொண்டேன். கண்ணகி வீரபத்தினியாதலின் வீரக்கல்லாகவும், சதிக்கல்லாகவும் அந்நடுகல் விழாவை இளங்கோவடிகள் வருணிப்பதால், அதன் வீரக்கல் கூறுகளை மட்டும் அறிந்து கொள்ள அப்பகுதிகளைக் கற்றுக் குறித்துக் கொண்டேன். எனவே இலக்கிய மூலங்களிலிருந்து வீரக்கற்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியவற்றை போதுமான அளவிற்குத் தெரிந்துவிட்டதாகத் தோன்றியது. ஆயினும் அவை நடுகற்காலச் சான்றுகளா, எந்த நூல் செய்தி, எக்கால நடுகற்களுக்கு உரியவை என்பது முடிவுசெய்யப்பட முடியாமலே இருந்

தது. ஏனெனில் நடுகற்களில் எழுத்துச் சான்றுகள் இல்லை. காலத்தை வரையறுக்க முடியவில்லை.

நான் இம்முயற்சி தொடங்கிய பின் பல வாண்டுகளுக்குப்பின், சேரநாடும் செந்தமிழும் என்ற நூலில் பாண்டியர்கால வீரக்கல் பற்றியும் அதன்மீதுள்ள கல்வெட்டு பற்றியும் படித்தேன். இது மிக முக்கியமான செய்தி. அதன்பின் சிலவாண்டுகளுக்குப் பின் புலப்பள்ளி நடுகல் பற்றி அறிந்தேன். அதிலும் கல்வெட்டும், புடைப்புச் சிற்பமும் உள்ளன. இவ்விரண்டினுல் தாமே தம்மைப்பற்றி அறிவிக்கக்கூடிய வீரக் கற்கள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுண்டாயிற்று. நடுகல்லை நட்ட காலத்திலேயே அவற்றில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் தரும் செய்தி, இலக்கியச் செய்திகளைவிட முக்கியமானவையாதலால் அத்தகைய கல்வெட்டு கண்டுபிடிக்கப்படுகின்றனவா என்று எதிர்பார்த்திருந்தேன். பலவாண்டுகளுக்குப்பின் செங்கம் தாலுகாவில் (வட ஆற்காடு மாவட்டம்) நூற்றுக்கு மேற்பட்ட நடுகற்கள் கண்டு பிடிக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்டது. "செங்கம் நடுகற்கள்" என்ற நூலைப் படித்தேன். தமிழ்நாடு தொல்பொருள் துறையினர் எடுத்து வந்த கல்வெட்டுப்படிகளைப் (estampage) பார்த்தேன். இவை நேரடிச் சான்றுகள் என்பதை படிமங்களும் எழுத்துச் சான்றுகளும் விளக்குகின்றன.

(**From** horizantal — Contemparary — Tenkasi Stones — Inver view with modem worshippers — Hero Stones — **To** historical literary studies **Compined knowledge**, Inscribed stones — Contemparary Chengam Stones (Contemparary) All together Hypothesis about rituals and belief of the worshippers — So for study limited to Tamil region.)

இவ்வீரக் கற்கள், வெட்சி, கரந்தைப் பூசல்களில் மாண்ட நாட்டார்-வீரர்களுக்காக எழுப்பப்பட்டவை. மாண்ட வீரர்களின் உறவினர் தங்களுக்கு நற்பயன்கள் விளையவும், ஆற்றல் அதிகமாகவும், எதிரிகளை எதிர்த்துப் போராட வலிமையேற்படவும், மாண்டவர்களாது ஆவிகளின் துணை நாடி அவர்கள் அவற்றிற்கு வழிபாடு நேர்ந்தனர். ஒரே விதமாக நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாட்டுச் சடங்குகள் முறைப்படுத்தப்பட்டன. இறந்தபின் வீரர்கள் செல்லும் உயர்ந்த உலகம் 'மேலோர் உலகு' 'வானோர் உலகு' எனக் கருதப்பட்டது. சைவ சமயம் தமிழ்நாட்டில் பரவியபின் வீரர்செல்லும் உலகம் பற்றிக் கருத்து மாற்றம் ஏற்பட்டது. அதன்பின்னர் அவர்கள் சென்றடையும் உலகம் சிவலோகம் என்று கருத்து மாற்றம் பெற்றது. இறந்த வீரனது ஆவி நெடுந்தூரத்திலுள்ள ஒரு உலகத்திற்குச் சென்றுவிட்ட பின்னரும், தனக்கு கல்நட்ட இடத்திற்குத் திரும்பிவந்து அதனோடு தொடர்புகொள்ள முடியும். நடுகல்லில் வீரனது ஆவியின் ஒருபகுதியிருக்கும்."

தற்கால உலக இனக்குழு மக்களின் நம்பிக்கைகள் இவ்வனுமானத்தை வலுப்படுத்துகிறதா என்று நான் ஆராய்ந்தேன். இது கிடைக்கோட்டு நோக்கு ஆய்வாகும். இந்திய ஆப்பிரிக்க, சாரவாக் இனக்குழு மக்களிடையே இந்நம்பிக்கையுள்ளது என்பதை மானிடவியலார் கண்டு பதிவு செய்துள்ளார்கள். அதுபோலவே கிரேக்க, ரோமானிய வரலாற்று முற்கால மக்களுக்கும் இத்தகைய நம்பிக்கைகளும், அந்நம்பிக்கைகளின் வெளிப்பாடுகளான சடங்குகளும், வழிபாடுகளும் இருந்துள்ளன என்பதை புராதன சமய வழிபாட்டின் வரலாற்றிலிருந்து அறியமுடிகிறது. இத்துறைகளில் நாம் அறியும் உண்மைகள், எனது அனுமானத்தோடு ஒத்து இருக்கின்றன.

இதன் பின்னரே எனது அனுமானம், நாட்டார் நடுகற்களைப் பற்றிய சடங்குகள், நம்பிக்கைகளை திருப்திகரமாக விளக்குகிறது என்ற முடிவுக்கு வந்தேன். இந்த நம்பிக்கை உலகமுழுவதிலுமுள்ள இனக்குழு மக்களிடையே பொதுவாக நிலவுகிறதென்றும், புராதன நாகரிக மக்களிடையே நிலவியிருந்ததெனவும், பொதுவான நம்பிக்கைகளின் புறவெளிப்பாடுகளில் சில வேறுபாடுகள் இருப்பினும் நம்பிக்கைகள் பொதுவாக இருந்ததெனவும்காண, இவ்வனுமானம் உறுதிப்பட்டது.

இலக்கியச் சான்றுகளைவிட முதன்மையான வரலாற்று மதிப்புடையவையென்றும் மதித்து, அவற்றை அடிப்படையாகவும், இலக்கியச் சான்றுகளை உபசான்றுகளாகவும் கொண்டு காலத்தில் பின்னோக்கிச் சிந்தனைசெலுத்தி செங்குத்து நோக்கில், நடுகல் சான்றுகளையும் நம்பிக்கைகளையும் வரலாற்றுப் போக்கில் அறிந்து கருத்தமைக்க முயன்றேன். இது நடுகற்சான்றுகளைஒன்று படுத்தி, இலக்கியச் செய்திகளோடு ஒப்பிட்டு நடுகல் நம்பிக்கைகளை அனுமானித்தேன். இவ்வாறு தற்கால ஆய்வில் தொடங்கி இலக்கியத்தின் மூலம் வரலாற்று ஆய்விற்குச் சென்று மீண்டும் செங்கம் நடுகற்கள் என்ற தற்கால ஆய்விற்குத் திரும்பி - இவையனைத்தும் அளித்த அறிவின் வெளிச்சத்தில் மீண்டும் வரலாற்று நோக்கில் திரும்பினேன்.

### 3·3 முறையியல் விளக்கம்:-

இப்பண்பாட்டுப் பொருள்களை ஆராய நான் மேலே கையாண்ட முறையியலை இப்பொழுது வரையறுத்துக் கூற முயலுவேன்.

1) ஆய்வுப் பொருளின் சில உதாரணங்களைக்கண்டு ஆய்வு நோக்கை வரையறுத்துக் கொண்டேன். தென்காசியில் சில கற்களைக் கண்டு, பேட்டி முறையில் அவைபற்றித் தகவல் சேகரித்து, ஆய்வு நோக்கை வரையறுத்துக் கொண்டேன்.

2) இதுபோன்ற வேறு உதாரணங்களைத் தேடினேன். இவைபோன்ற வேறு கற்கள் பல ஆண்டு காலத்திற்குக் கிடைக்கவில்லை. தகவல்கள் கிடைப்பதற்காக காத்திருக்கவேண்டியதாயிற்று. கன்யாகுமரி மாவட்டத்தில் இரணகீர்த்தி என்ற வீரனுடைய 8-ம் நூற்றுண்டுக் கல் பற்றிச் "சேர நாடும் செந்தமிழும்" என்ற நூலில் படித்தேன். உடனே அதை பத்மனுபபுரம் தொல்பொருள் கூடத்தில் பார்த்தேன். அது தென்காசிக் கற்களோடு ஒத்திருக்கும் கூறுகளையும், வேறுபடும் கூறுகளையும் நோக்கினேன். இதன் மீது தென்காசி கற்களைக் போல் உருவம் செதுக்கியிருந்தது. தென்காசிக் கல்லில் இல்லாத, கல்வெட்டு எழுத்துக்கள் இருந்தன.

3) இப்புதிய வேறுபட்ட உதாரணம், புதிய உதாரணங்களை மேலும் கண்டறியத் தூண்டியது. ஐந்தாண்டுகளில் கல்வெட்டுள்ள உருவம் செதுக்கப்பட்ட சில கற்களைப்பற்றிப் படித்தறியத்தான் முடிந்தது. நூற்றுக்கணக்கான உதாரணங்களைச் சேகரிக்க முடியவில்லை. டாக்டர் எம். ஜி. எஸ். நாராயணன் புலப்பள்ளி வீரக்கல்லைப்பற்றி எழுதிய கட்டுரை வெளிவந்தது. அதில் ஒரு புதுமையைக் கண்டேன் பல நடுகற்களில் இரண்டு ஒன்றின்மேல் ஒன்ருன இரண்டு கட்டங்களில் புடைச் சிற்பங்கள் இருக்கும். புலப்பள்ளியில் மூன்று ஒன்றின்மேல் ஒன்ருன கட்டங்கள் இருந்தன. மற்ற நடுகற்களில் அடிக்கட்டத்தில் ஒரு மனிதன் அம்பு அல்லது வேல் பாய்ந்து நிற்பது போலச் சித்திரம் இருக்கும். மேற் கட்டத்தில் இரு தேவ மாதர் மலர் மாலைகளோடு அவனை வரவேற்கத் தயாராக இருப்பவர்கள்போல நடனம் செய்து கொண்டிருப்பது போலச் சித்திரிக்கப்பட்டிருக்கும். ஆனால் புலப்பள்ளியில் இவையிரண்டோடு, மூன்ருவது கட்டத்தில் இறந்தவனது ஆவி சிவலிங்கம், நந்தி ஆகிய உருவங்களின் முன்னால் வணங்கி நிற்பதுபோலச் செதுக்கப்பட்டிருந்தது. இந்த முக்கியமான வேறுபாடு வரலாற்று நோக்கில் (செங்குத்து நோக்கில் எனது சிந்தனையைச் செலுத்தியது,) ஆனால் ஒரே தலத்தில் நூற்றுக்கணக்கான உதாரணங்கள் பல காலகட்டங்களைச் சேர்ந்தவை கிடைத்தால் தான் நமது அனுமானத்தின் ஒருபகுதியை உறுதிப்படுத்த இயலும். எனவே செங்குத்தாகச் செல்வதற்குமுன் தற்காலத்தில் அகப்படும் நூற்றுக்கணக்கான சான்றுகளை அறிய வேண்டும். செங்கம் நடுகற்களை சென்னை தொல்பொருள் துறையினர் கண்டுபிடித்து, அவற்றின் மீதுள்ள கல்வெட்டுகளை வெளியிட்டதும், நடுகற்களின் மைப்பதிவுகளை காட்சிப் பொருள்களாக வைத்தும், நான் தேடிக்கொண்டிருந்த சான்றுகளை அளித்தன. அச்செய்திகள் ஒரு தங்கச்சுரங்கத்தைக் கண்டுபிடித்தது போன்ற வாய்ப்பை எனது ஆராய்ச்சிக்கு அளித்தது.

4) இச்சான்றுகளைப் பயன்படுத்தி நான் பயன்பாட்டு அனுமானங்களை செய்து (Working hypothses) சான்றுகளோடு அவ்வப்பொழுது ஒப்பிட்டும், இலக்கியச் சான்றுகளோடு இணைத்தும் ஆராய்ந்தேன்.

5) வீரக்கற்களை நட்ட மக்களின் நம்பிக்கைப் படிமத்தை தடுத்தமைப்பதுதான் இவ்வாராய்ச்சியின் இறுதிக்கட்டமாக இருந்தது. இதற்கு வரலாற்றில் இத்தகைய நம்பிக்கைகள் இருந்ததையும், பண்டையச் சமய நம்பிக்கைகளில் இவை போன்றவை இருந்ததையும் கண்டறிந்து ஒப்பிட்டு நோக்கவேண்டும்.

6) அவ்வறிவின் ஒளியில் நமது சான்றுகளை, ஒரு குழுவின் நம்பிக்கைக் கருத்தமைப்பின் அடிப்படையில் ஒரு குழுவின் பண்பாட்டமைப்பாகக் காண முடிந்தது.

7) மானிடவியல், பண்டையப் பண்பாட்டு வரலாறு ஆகிய துறை வளர்ச்சியால் நமக்குக் கிடைத்த அறிவு இச்சான்றுகள் அளிக்கும் அறிவோடு ஒப்பிட்டு ஆராய உதவிற்று. உலகப் பரப்பான ஒரு நம்பிக்கையே, நடுகல் நம்பிக்கையில் வெளிப்படுகிறது என்பதை அனுமானிக்க ஒப்பீட்டு ஆய்வு உதவிற்று. இவ்வாறு ஒரு நம்பிக்கையின் தோற்றமும், வரலாறும், அதன் வெளிப்பாட்டு முறையும் கருத்தமைப்பாக உருவாக்கப்பட்டது. இக்கருத்தமைப்புப் படிவம், உலக வியாபகமான இனக்குழு — நாட்டார் நம்பிக்கை பற்றிய கருத்தமைப்புப் படிவத்தின் பல வெளிப்பாடுகளில் ஒன்றாகக் காணப்பட்டது.

## 4·1 பழமை பற்றிய அறிவும், தற்காலத்தின் பிரச்சினையும்.

"பழமை முழுவதற்கும் குறைந்த எதனாலும் தற்காலத்தை விளக்க இயலாது" என்று எஸ்லின் இவான்ஸ் கூறுகிறார். நாட்டார் பண்பாட்டுப் பொருள்களைப் பொருள் கொள்ளவும், அப்பொருள்களை எவ்வெந் நம்பிக்கைகள் கருத்துக்களின் அடிப்படையில் படைத்தார்கள் என்ற பிரச்சினைகளுக்கு விடைகாண, பழைமைப் பற்றிய அறிவு முழுவதையும் பயன்படுத்த வேண்டும். இவ்வாறுதான் ஒரு நம்பிக்கைக் கருத்தமைப்பு, முழுமையான நம்பிக்கைக் கருத்தமைப்போடு இணைக்கப் பட்டுள்ளதைக் காணமுடியும். நாட்டுப் பண்பாட்டியல் ஆராய்ச்சி, சமூக, பண்பாட்டு வளர்ச்சி வரலாற்றோடு நெருங்கிய உறவுடையதாக மாறி வருகிறது.

எனது முறையியல், நம்பிக்கை பற்றிய நாட்டுப் பண்பாட்டுச் சான்றுகளை, கடந்த கால முழுவதும், அனைத்து விஞ்ஞானத்துறைகளிலும், ஆராய்ச்சியாளர்கள் பெற்றுள்ள அறிவு முழுவதையும் பயன்படுத்துகிறது. ஒவ்வொரு துறையிலும் கிடைத்த அறிவொளிக் கதிர்கள், ஆய்வுக்குரிய நாட்டுப்பண்பாட்டுப் பொருளின் மீது செலுத்தப்பட்டு, அதன் முழுத்தன்மையையும் ஆய்வாளனுக்கு வெளிப்படுத்துகிறது.

## 5·0 சில ஆய்வுத் திட்டங்கள்:-

இனி தென்னிந்தியமொழிகள் பேசும் மாநிலங்களில் எவ்வித ஆராய்ச்சிகள் நாட்டுப்பாட்டியலின், மொழி முனைப்பில்லாத துறைகளில் (non-Verval) செய்ய வேண்டுமென்பது பற்றி எனது யோசனைகளைக் கூறவிரும்புகிறேன். தென்னிந்தியா மட்டுமல்லாமல் இந்தியா முழுவதற்குமே எனது யோசனைகள் பொருந்தும். ஒவ்வொரு பகுதியின் சமூக வரலாற்றிற்கும், இந்தியா முழுவதினுடைய சமூக வரலாற்றிற்கும் தேவையான பல சான்றுகளைத் தரும் வகையில் இவ்வாராய்ச்சிகள் அமைய வேண்டும் என்ற கருத்தோடு நான் எனது யோசனைகளை உருவாக்கியுள்ளேன்.

5·1 தென்னிந்தியாப் பெண் தேவதைகள் பற்றிய ஆய்வு மேற்கூறிய ஆய்வுத்திட்டத்தில் முக்கியமானதொன்றாகும். தேவதைகளின் சிற்பங்கள், உருவகங்கள், தோற்றப் புனைகதைகள், கதைப் பாடல்கள் முதலிய சான்றுகளை தற்கால கிடைமட்ட நோக்கில் சேகரித்து, தாய்த் தெய்வ வணக்கம், செழிப்புத் தேவதை வணக்கம், கிராம தேவதை வணக்கம் பற்றிய மானிடவியல், இலக்கியத் துறைகளின் அறிவைப் பயன்படுத்தி ஒப்பிட்டு வரலாற்று வழியாக ஆராயவேண்டும்.

இவ்வாறு பல்துறை ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி பொருள்கொள்ளப்பட்டால் நாட்டுப் பண்பாட்டியல் பொருள்கள் நமது நாட்டுப் பண்பாட்டு வரலாற்றின் வளர்ச்சிப் போக்கை அறிய உதவும்.

5.2. 'பிள்ளைப்பேறு விருப்பம்' அனைத்து மக்களுக்கும் பொதுவானதொன்று. இப்பொருள் குறித்து சான்றுகளைச் சேகரித்து பகுப்பாய்வு

செய்து, சான்றுகளுக்குப் பொருள் காணல் வேண்டும். இவ்விருப்பத்தை, பயனுடையதாக்க மனிதன் செயல் புரிகிறான் இப்பயன்பெற சில சடங்குகளையும், வழிபாட்டுக்குரிய பொருள்களையும் மனிதன் படைக்கிறான் இவையாவும் ஒருநம்பிக்கைக் கருத்தமைப்பின் அடிப்படையில் நிகழ்கின்றன. "கருத்தரிப்பு, கர்ப்பகாலம்" முதலியவற்றைக் குறித்த சடங்குகளைப்பற்றிய செய்திகளைச் சேகரித்து அவற்றின் அடிப்படையான நம்பிக்கைகளை அறிய முற்படவேண்டும். பிள்ளைப்பேறு, வளைகாப்பு, சீமந்தம், குழந்தைக்குக் காதுகுத்துதல் முதலிய சடங்குகள் பற்றிய விவரங்களை இடம், சாதி, காலவாரியாகச் சேகரிக்கவேண்டும். இவற்றிற்கு தொடர்புடைய மொழித் தொடர்புடைய, தொடர்பில்லாத சான்றுகளைச் சேகரித்து ஆராய்தல் வேண்டும். உலக மக்களனைவருக்கும் பொதுவான இந் நம்பிக்கைக் கருத்தமைப்பை ஆராய்ந்து முடிவுகள் காண்பது பண்பாட்டு வரலாற்றிற்குப் பெரிதும் பயனளிக்கும் இந்நம்பிக்கையைப் பற்றிய ஆய்விற்கு, தாலாட்டு, பிள்ளைப்பாட்டு, பிள்ளைச் சடங்குகள்பற்றிய பாடல்களை ஆராய்வது துணை ஆய்வாக இருக்கும்.

5·3 ஆர்வமூட்டும் மற்றுமோர் ஆய்வு திருமணச் சடங்குகள் பற்றியதாகும். செழிப்புச் சடங்குப் பொருள்கள், குறியீடுகள் சடங்குச் செயல்கள், நீரோடு தொடர்புடைய சடங்குகள் பாலுணர்வுக் குறியீடுகள் (Sexual symbolism) முதலியன திருமணச் சடங்குகளில் இடம்பெறுகின்றன. மந்திரவாதத்தோடு தொடர்புடைய பலசடங்குகள் குடும்ப இன்பத்தை விரும்பியும் பிள்ளைப்பேற்றை விரும்பியும் செய்யப்படுகின்றன. அவை ஆய்வுக்குரியன. திருமணம், குடும்ப இன்பம் பற்றிய நமது மக்களின் நம்பிக்கைக் கருத்தமைப்புப் படிமத்தை உருவாக்க, சடங்குச் செயல்கள், சடங்கில் பயன்படும் பொருள்கள், மந்திரங்கள் தோத்திரங்கள் முதலியனவற்றைச் சேகரித்து ஆராய்தல் வேண்டும்.

5·4 நாட்டார் வாழ்க்கையில் மூட நம்பிக்கைகள் (Superstition) பெரிதும் தாக்கம் உடையன. அவற்றைப் பொதுவாக விவசாயத் தொடர்புடையது, விவசாய தொடர்பில்லாதது என இருவகையாகப் பிரிக்கலாம். அலன்டன்டி இவையிரண்டுற்கும் ஒரு பொதுக் குறியீட்டை வரையறுத்துள்ளார். "If A then B, if not C" (A நடந்தால் B நடக்கும்—C நடக்காவிட்டால்) A என்பது தற்காலத்தில் ஒரு நிகழ்ச்சி A நடந்தால் B என்ற மற்றோர் நிகழ்ச்சி வருங்காலத்தில் நடைபெறும். ஆனால் C என்ற நிகழ்ச்சியை நீங்கள் நடத்தினால் B யை நடக்காமல் தடுத்துவிடலாம். (இதனை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்குவேன்)

நீங்கள் குறிப்பிட்ட காய்கறிகள் வாங்கச் சந்தைக்குச் செல்லும்பொழுது ஒரு காக்கை உங்களுக்கு இடப்புறமாகப் பறந்து செல்லுகிறது இது A. அப்படியானால் நீங்கள் விரும்பும் காய்கறிகள் சந்தையில் கிடைக்காது இதுB. நீங்கள் வீட்டுக்குள் திரும்பிப்போய் செருப்பை அவிழ்த்து மறுபடி மாட்டிக் கொண்டு மீண்டும் தெருவிற்கு வந்து சந்தைக்குப்போனால் விரும்பும் காய்கறி கிடைக்கும் இது C. சகுனம், நன் முகூர்த்தம் விலங்குகள், பறவைகள், பல்லி முதலிய ஜந்துக்களால் ஏற்படும் நன்மை தீமை பற்றிய நம்பிக்கைகள் ஆராயப்படுதல் வேண்டும்.

விவசாயத் தொழில் செயல்களோடும், விவசாயக் கைத்தொழில்களோடும் தொடர்புடைய பல நம்பிக்கைகள் உள்ளன. "கண்திருஷ்டி" "கொள்ளிக் கண்" போன்ற நம்பிக்கைகள் இத்துறைகளிலும், பிற துறைகளிலும் உள்ளன. எல்லா மூடநம்பிக்கைகளையும், தற்கால நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் ஆராய வேண்டும்.

அந்நம்பிக்கைகளை தோற்ற காலத்திற்குப் பின்னோக்கிச் சிந்தித்து ஆராய்வது கடினமாகும். இருப்பினும் பழமையின் முழுமையான அறிவைப் பயன்படுத்தினால் (மானிடவியல், குழுவருணனை, விவசாய வரலாறு, கைத்தொழில்கள் வரலாறு முதலிய பலதுறை அறிவை)ப் பயன் படுத்தினால் தோற்றத்திலிருந்து தற்காலம்வரை நம்பிக்கைகளின் வரலாற்றை அறியலாம். இது சமுதாய பண்பாட்டு வரலாற்றின் ஒரு முக்கியமான பகுதியாகும்.

"அனுதாப மந்திரவாதம், தொடர்பு மந்திர வாதம்" என்ற இருவகை மந்திர வாதங்கள் (Sympathetic magic, Contagions magic) பல மூடநம்பிகைகளுக்கு அடிப்படையாகவுள்ளன.

இவை நாட்டார் வாழ்க்கையில் பெரிதும் காணப் படுவதால் இவற்றை நாம் ஆராய்தல்வேண்டும். J. G. Frazer இருவகை மந்திரவாதச் சடங்கு களைப் பற்றி விவரித்துள்ளார். அனுதாப மந்திர வாதம். நான் A ஐச் செய்தல், B இயற்கையில் நிகழும். தொடர்பு மந்திரவாதம். Aக்கு ஒரு இயல்பு உள்ளது. அதன் தொடர்பால் Bக்கு அவ்வியல்பு ஏற்படும். (இதனை ஒரு உதாரணத் தால் விளக்குவோம். நீர் புனிதமானது. ($A^1$) நான் பிணத்தைத் தொட்டாலோ, வெகு தூரத் தில் வாழ்ந்த உறவினர் ஒருவர் இறந்ததைக் கேள்விப்பட்டாலோ, தீட்டு ஏற்படுகிறது ($A^2$) நான் குளித்துவிட்டால் அல்லது சிறிது நீரை ஒரு மந்திரம் சொல்லித் தலை மீது தெளித்துக் கொண்டாலோ, அத்தீட்டுப் போய்விடும். (B). $A^1$ $A^2$ தொடர்பு மந்திர வாத நம்பிக்கை. Bயும் $A^1$ $A^2$ போன்றே தொடர்பு மந்திர வாதமே. இந்த நம்பிக்கைகளும், மந்திரவாதச் சடங்குகளும், நாட்டார் வாழ்க்கையில் பரவ லாகக் காணப்படுகின்றன. இவற்றால் விவசாயத் தில் விஞ்ஞானப் புதுமைகள் பரவுவது தடைப் படுகிறது. விவசாயிகள் மனத்தில் நிகழ்ச்சி களுக்கிடையே உள்ள இணைப்பு மந்திரவாத நம்பிக்கைகளாக இருப்பதால், விஞ்ஞான விதித் தொடர்களைக் காண இயலவில்லை.

விஞ்ஞான விவசாயம் பரவுவதும், பசுமைப் புரட்சி நிறைவேறுவதும், இந்நம்பிக்கைகள் விவசாய நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என மனம் பற்றிக் கொண்டிருக்கும் வரை சாத்தியமில்லை. எனவே விஞ்ஞானிகள், சமூகப் புரட்சிவாதிகள் எல்லோருக்கும் இவ்வாராய்ச்சிகளில் ஆர்வம் இருத்தல் வேண்டும். உலக நிகச்சிகளுக்குக் காரணம் எனக்கருதப்படும் நம்பிக்கைப் பிணைப்பை ஆய்வாளர்கள் கண்டறிந்து கூற வேண்டும். மாநிலந் தோறும் விவசாயத் தொழில் பற்றிய மந்திரவாத நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகளையும், அதனடிப்படையில் நிகழும் சடங்குகள், செயல்கள், முதலிய வற்றையும், நாட்டுப்பண்பாட்டியலார் ஆராய் தல் வேண்டும். இவற்றை இரு நோக்குகளை யும் பயன்படுத்தி ஆராயமுடியும். ஃபிரேயன், ரிவர்ஸ், மாலினுவ்ஸ்கி போன்ற மானிடவியல் ஆய்வு முறைகள் நமக்குப் பயன்படும். வெரியர் எல்வினது முறைகள் இநதிய நாட்டு நம்பிக்கை களை அறியப்பயன்படும்.

5·5 மற்றுமோர் முக்கியமான ஆய்வு, நோய்கள் பற்றிய நம்பிக்கையாகும். சில நோய்களின் அதிதேவதைகளாகச் சில தேவதை கள் உள்ளன என்று நாட்டார் நம்புகிறார்கள். வைசூரி நோயின் தேவதைகள் என ஆயிரத் தாள், மாரியம்மன், முத்தாரம்மன் முதலிய கிராமதேவதைகள் நம்பப்படுகின்றனர். காலரா வின் தேவதை என சீதலதேவி வங்காளத்தில் நம்பப்படுகிறாள். சில வியாதிகள், கடந்த காலப் பிறப்புகளில் செய்த வினைகளின் பயனால் இவை தோன்றுகின்றன என்று நாட்டார் நம்பு கிறார்கள். விஞ்ஞான மருத்துவம் நம் கிராம மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் இந்த நம்பிக்கைகளுக்கு அடிப்படையில்லை என் பதை இந்த நம்பிக்கைகள் பற்றி ஆய்வுகள் நிரூபிக்கும். இவ்வாய்வில் இனக்குழு மக்க ளின நோய்த் தேவதைகளுக்குரிய நம்பிக்கை களும், சடங்குகளும், நாட்டார் நம்பிக்கைகளோ டும், சடங்குகளோடும் ஒப்பிடப்பட்டு ஆராயப்படு தல்வேண்டும். மொழித் தொடர்பற்ற சான்றுகளும் மொழித் தொடர்புடைய, மந்திரங்கள், தோத்தி ரங்கள் யந்திரம் என்ற எழுத்து மந்திரங்கள், தேவதைகள் பற்றிய தோற்றப் புனைகதைகள், இத் தேவதைகளுக்குக் கொடை விழாக்கள், ஊட்டு விழாக்கள் நடைபெறும் பொழுது நிகழ்த்தப்படும் சடங்குகள், ஆட்டங்கள், பாடப் படும் பாடல்கள் முதலியனவற்றைச் சேகரித்து ஆராய்தல் வேண்டும். மொழித் தொடர் பில் லாத சிற்பங்கள், கும்ப ஆட்டம், கோமர ஆட்டம், பலிகள் முதலியவற்றோடு எழுத்துத் தொடர்புடைய மேற்கூறிய சான்றுகளையும் சேர்த்து ஆராய்ந்தால், நமதுநாட்டாரின் பண் பாட்டு நம்பிக்கைகளின் ஒருகூறு தெளிவாகும்.

5.6 நாட்டார் வாழ்க்கை ஒரு கூற்றைப் பற்றி நவீன ஆராய்ச்சிகள் பல துவங்கியுள் ளன. அவை விவசாயம், கைத்தொழில், வீட்டில் பயன்படும் கருவிகள், கதவுப் பிடிகள், கோப்பை கள், சமையற் பாத்திரங்கள், வீட்டுக் கதவு அலங்காரங்கள், உட்புற அலங்காரங்கள், விழாக் கால அலங்காரங்கள், முதலிய முக்கியமற்றவை எனத் தோன்றும் பொருள்கள் இப்பொழுது அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் ஆராயப்படு கின்றன. அவற்றின் உற்பத்தி, இப்பொருள் கள் பற்றிய தோற்றப் புனைகதைகள் (craft lore

and myths) அவற்றின் பயன்பாடு பற்றிய நம்பிக்கைகள், அவை பற்றிய மந்திர நம்பிக்கைகள் சேரிக்கப்பட்டு ஆராயப்படுதல் வேண்டும். யோடர் என்னும் அமெரிக்கப்பண்பாட்டாய்வாளர் கீழ்வருமாறு கூறுகிறுர். "ஒரு முறம் அல்லது ஒரு கலப்பை, மனிதனைப் பற்றி ஒரு அமெரிக்க உள்நாட்டுப் போரில் பயன்பட்ட வாளைவிட அதிகமாகத் தெரிவிக்கவல்லது"

நோய்த்தேவதைகளின் மீதுள்ள நம்பிக்கையால் சுட்டார் சாந்தி பூசைகள், சாந்திச் சடங்குகள் நடத்துகிறுர்கள். இவற்றில் விலங்குப்பலி, மனிதப்பலி, தானியப்பலி முதலியன கொடுக்கப்படுகிறது. சைவ - வைணவ - சைன பௌத்த சமயத்தாக்கத்தால் உயிர்க்கொலை கைவிடப்படுகிற பொழுது, இத்தேவதைகளுக்கு நடைபெறும் கொடைகளில், உயிர்பலியின் எச்சங்கள் காணப்படும். உதாரணமாக ஆட்டின் காதைக் குத்துதல், மனிதனது முடியைச் சிறைத்தல், சுணியானது பெருவிரலை ஊசியால் குத்தி இரத்தத்தை அர்ப்பணித்தல், அலகு குத்துதல், தீ மிதித்தல், சப்பரத்தில் கொக்கியால் தொங்குதல், தன்மீது தானே சாட்டையால் அடித்துக்கொள்ளுதல் முதலியன. இவை நாட்டுத் தேவதைகளின் வழிபாட்டோடு தொடர்புடையன. இச்சடங்குகளில் பிராம்மணப் பூசாரிகளுக்குப் பங்கு இல்லை.

நான் முற்கூறிய திட்டங்கள் நாம் ஆராய வேண்டிய துறைகளில் மிகச் சிலவே.

### 6·1 இந்திய நாட்டுப் பண்பாட்டியல் ஆராய்ச்சியாளர் முன்புள்ள கடமைகள்:-

இந்திய நாட்டுப் பண்பாட்டியலாய்வாளர்கள் முன்புள்ள பணிகள் மகத்தானவை. ஆனல் வருங்காலக் கடமைகளுக்கும், அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான பயிற்சி பெற்ற ஊழியர், அரசாங்க ஆதரவு, நிதி, கருவி - நூல் நிலைய - நாட்டுப் பண்பாட்டுப் பொருள் கருவூல (folk lore museum) வசதிகள் முதலியனவற்றிற்குமுள்ள இடைவெளி மிகப் பெரிது. இத்தகைய இடைவெளியை நிரப்பினுல் அல்லது ஆராய்ச்சிகளில் முன்னேற்றம் ஏற்படமுடியாது.

### 6·2 இந்திய நாட்டுப் பண்பாட்டு ஆய்வுகளின் தற்கால நிலை.

இந்திய நாட்டுப் பண்பாட்டு ஆராய்ச்சி என்னும் அநாதைக் குழந்தை தனது வாழ்க்கைத் தேவைகளுக்காக அங்குமிங்கும் நோக்குகிறது. சில வேளைகளில் அதன் பணக்கார உறவினர்களான மானிடவியல், மொழியியல், வரலாற்றுத் துறையினர், இதனை தாங்கள் உண்டு மிஞ்சிய எச்சத்தை உண்ண அனுமதிக்கின்றனர். அமெரிக்க, ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களைப் போலல்லாமல், நமது பல்கலைக்கழகங்கள், நாட்டார் பண்பாடு, கலை — இலக்கியங்களைக் கற்பதற்குரியதோர் இயலாகவே கருதவில்லை. தனியார், தனி நிறுவனத்தார் முயற்சிகளே தற்பொழுது நாட்டுப்பண்பாட்டியலை ஆய்வாளர்களது ஆர்வத்திற்கு உரிய தகுதியுடையதாகச் செய்திருக்கிறது.

### 6·3 நம்பிக்கைக்குரிய வருங்காலம்:-

இத்தகைய இடர்பாடுகளின் ஊடேயும் இந்திய நாட்டுப் பண்பாட்டியல் பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது. இத்துறையில் ஆராய்ச்சி, ஆழ்ந்தும், அகன்றும் முன்னேறுகிறது. இலக்கியம், வரலாறு, மானிடவியல், மொழி இயல் துறைகளின் ஆய்வாளர்கள், தங்கள் துறைகளுக்கு உகந்த உப ஆய்வாக நாட்டுப் பண்பாட்டு ஆய்வுகளை மேற்கொண்டு உள்ளார்கள். பல்கலைக்கழகங்கள் இவ்வாராய்ச்சியின் அவசியத்தை இப்பொழுதுதான் உணர்ந்துள்ளன. இந்திய நாட்டுப்பண்பாட்டுச் சுழகம் அதன் நூல் வெளியீட்டுப் பகுதி, அதன் பத்திரிகை Folk lore இவை குறிப்பிடத்தக்க பணிகள் புரிந்துள்ளன. அதனேடு தொடர்புடைய இந்திய — வெளியீட்டுக் சழகம், ஆய்வாளர்களுக்குப் பயன்படும் தரமான நூல்களை வெளியிட்டுள்ளது. மாநில நாட்டுப் பண்பாட்டு ஆய்வுகளை இக்கழகம் ஊக்குவித்துள்ளது. இந்திமொழிகளின் மத்திய ஆய்வு நிலையம் (Central Institute of Indian Languages) இந்திய மொழிகளில் நாட்டார் இலக்கியம் பற்றி அக்கரை கொண்டுள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். தற்பொழுது இந்தியமொழிகளில் நாட்டார் இலக்கியம் பற்றிய 7000 நூல்களின் விவர அட்டவணைத் தயாரிப்பதில் இக்கழகம் ஈடுபட்டுள்ளது. இந்நிலையத்தின் டைரக்டர்

திருபட்ட நாயக் அவர்களும், நாட்டுப்பாடல் துறைப் பொறுப்பாளர் ஜவஹர்லால் ஹண்டே அவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இலக்கியம், மானிடவியல், வரலாறு, மொழியியல் முதலிய பலதுறை வல்லுநர்கள் தங்கள் சிறப்பான ஆய்வு முறைகளையும் திறமைகளையும் இத்துறையை வளப்படுத்தக் கொணர்ந்துள்ளார்கள். தங்கள் தங்கள் துறையில் வளர்த்துக்கொண்ட திறமைகளைப் பயன்படுத்தியும், பலதுறை நோக்குடைய ஆய்வுமுறைகளைப் பயன்படுத்தியும் பலதுறை ஆய்வாளர்கள் இந்திய நாட்டுப் பண்பாட்டியலை வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கை தோன்றியுள்ளது.

———

## SELECT BIBILIOGRAPHY


1. William Brooke
Religion and Folk lore of North India.
S. Chand & Co. (Pvt.,) Ltd., Ramnagar, New Delhi.

2. Voice of America Forum Lectures.
American Folk lore. Higginbothams (P) Ltd., Madras.
(Part I Folk lore as a field for study. Read especialy.
A definition of Folk lore — Franciss Lee vittey
Folk life - Don yoder. Ways of studying folk life.

3. Dr. K. N. Kurup, Calicut University.
The cult of Theyyam and hero worship in Kerala [Read Introduction] – Indian Publications, Calcutta India.

4. J. G. Frazer
The Golden bough - Adbridged edition, Penguin Series.

5. Verrier Elwin - The religion of a tribe

6. Edited by Sankar Sengupta.
Studies in Indian Folk Culture

7. Edited by Sankar Sengupta - Rain in Indian life and lore.

8. Edited by Sankar Sengupta.
Folk lore research in India. Official Proceedings of the All India Folklore Conference, Calcutta 1964.

9. Sanker Sengupta
Bibiliography of Indian Folk lore

10. P. K. Mahapatra
Folk cults of Bengal.

11. Collected papers:-
Essays in Indian Folklore.
Sl. Nos. 6 to 11: Indian Folk lore Series, Indian Publications.
3, British India Sttreet, Calcutta - 1.

**மானிடவியல்**

# பெட்ட குறும்பர்கள்

**எஸ். ஜெயபால்.**

[தமிழ் நாட்டின் இனக்குழு மக்கள் 23 வகையினர் உள்ளனர் என்று 1961 மக்கள் தொகைக் கணக்கிலிருந்து தெரிகிறது. இவர்கள் பெரும்பாலும் மலைவாசிகள் அல்லது வனவாசிகள். இவர்கள் பல நூற்றாண்டுகளாக மலைச் சூழ்நிலையை மாற்றியமைத்து, அங்குகிடைக்கும் பொருள்களைக் கொண்டே வீடும், உணவும், உடையும் பெற்று வாழ்ந்தனர். இவற்றை இயற்கையின்றும் பெற அவர்கள் தமது கருவித் தொகுதிகளை வளர்த்துக் கொள்ள இயலவில்லை. பிற மக்கள் குழுவினர்களின் தொடர்பின்றியும் கருவித்தொகுதிகளில் முன்னேறி இயற்கையின்மீது பல வெற்றிகள் பெற்று, பெருந் தொகையினராக சமுதாயமாக முன்னேறி, தங்களுக்கென்று சமுதாய, அரசியல் அமைப்புகளை உருவாக்கிக் கொண்டுள்ள மக்களைப்போல இவர்களது சமுதாய முன்னேற்றம் இல்லை. இவர்கள் இன்னும் உணவு தேடும் குழுக்களாகவோ, அல்லது முன்னேறாத கருவிகளைக் கொண்டும் அனுபவ அறிவைக் கொண்டு மலை வேளாண்மை செய்தும், மலை விலங்கு வேட்டை ஆடியும் உணவு பெற்று, சிறு சிறு பாடிகளில் வாழ்கிறார்கள்.

ஆனால் சமுதாய முன்னேற்றம், அதனால் ஏற்பட்டுள்ள வர்க்கப் பிரிவினைகள், இங்குள்ள வியாபாரிகள், தோட்ட முதலாளிகள் முதலியவர்களது ஊடுருவல் அவர்களது வாழ்க்கையை மாற்றிவிடுகிறது அவர்களில் பலர் தமிழக சமுதாய உறவு நிலைகளில் தொழிலாளராகவும், விவசாய கூலித் தொழிலாளராகவும் மாறிவருகிறார்கள்.

தமிழ்நாட்டின் சமுதாய வரலாறு, பண்பாட்டு வரலாறு, மொழி வரலாறு, நாட்டுப் பண்பாட்டு வளர்ச்சி வரலாறு இவையனைத்தின் பண்டைய நிலைகளை அறிய இவர்களது வாழ்க்கை, பண்பாடு, மொழி முதலியனவும், இவை யாவற்றிற்கும் அடிப்படையான இவர்களது உற்பத்தி முறைகளும், அவற்றில் பயன்படுத்தப்படும் கருவித் தொகுதிகளையும் ஆராய வேண்டும். இவர்களது தற்கால வாழ்க்கையும், பண்பாடும், நாகரிகம் பெற்ற தமிழ் மக்களின் முற்கால நிலைகளை வேறெந்தச் சான்றுகளைவிடவும், அதிகமாக அறிவிக்க வல்லது. எனவே இவர்களது வாழ்க்கை முற்றிலும் மாறிவிடுமுன், இவர்களது வாழ்க்கை ஆராயப்படுதல் வேண்டும்.

அத்தகைய முயற்சியில் ஆராய்ச்சி தன் சக்திக்கேற்ற வகையில் பங்கு கொண்டு வருகிறது. அண்ணாமலை மொழியியலாளர் தாம் தமிழக இனக்குழு மக்களின் வாழ்க்கைப் பற்றி ஆராய்ந்து ஆராய்ச்சியில் எழுதியுள்ளார். சக்திவேல் ஒருவர் மட்டுமே ஆராய்ச்சியில் எழுதிய மானிடவியலாளர், தத்தம் சிறப்புத்துறைகளை, அவ்வத்துறை ஆய்வாளர் கைவிடுவதும், வேறுறையினர் அத்துறைகளில் நுழைந்து ஆராய்வதும் தமிழகத்தில் நடைபெறும் வியப்பான நிகழ்ச்சி. சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி புள்ளி இயல் ஆய்வாளர்கள் Gift Siromony தலைமையில் ஆராய நுழைந்திருக்கும் துறைகள் மிகலப்பல. தத்தம் துறைகளில் பிறர் ஆர்வத்தோடு புகுந்து ஆராய்வது கண்டு அவ்வத்துறையினர் விழிப்புப் பெற்று, புதிதாக நுழைந்தவர்களையும் அணைத்துக்கொண்டு பெருஞ் சாதனைகள் புரிய முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

நா. வானமாமலை]

உலகம் முழுவதும் காடாகவும், மலையாகவும் இருந்த காலம் ஒன்று உண்டு. அந்தக் காடுகளிலும், மலைகளிலும்தான் மனிதன் வாழ்ந்தான். கண்டதை உண்டு காலம் கழித்தான். இவர்களைத்தான் 'பழங்கற் கால மனிதர்கள்'' என தொல்பொருளாய்வாளர்கள் (Archaeologist) குறிப்பிடுவர். காலப்போக்கில் இவர்களது வாழ்க்கையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது, அதன் பயனாக "புதிய கற்கால மனிதர்கள்'' பிறந்தனர். நாளடைவில் இவர்கள் உலோகங்களைப் பயன்படுத்தத்தொடங்கியதால் "உலோக கால மனிதர்கள்'' என அழைக்கப்பட்டனர். இன்று நாம் உலோகங்களின் பயனை மட்டுமல்லாது, அனைத்துப் பொருள்களின் பயன்களை அறியும் அப்போலோ யுகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். காடுகளை அழித்து நகரங்களாக மாற்றிக் கொண்டு இருக்கின்றோம். நல்ல வசதிகளுடன் ஆடம்பரமான வாழ்க்கையை நடத்திக்

கொண்டே இருக்கின்றோம். ஆனால் இந்த நல்ல வசதிகளைப் பற்றியோ, ஆடம்பரமான வாழ்கை முறைகளைப் பற்றியோ, அல்லது அண்மைக் கால விஞ்ஞான வளர்ச்சியைப் பற்றியோ அறியாமல் அன்றுபோல் இன்றும் மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் மக்கள் வாழ்ந்துகொண்டு தான் உள்ளனர். இவர்கள் தங்களது பழமையான வாழ்க்கையைக் கைவிடாமல் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளனர். எனவே "பழங்குடி மக்கள்" எனவும் பெயர் பெற்றுள்ளனர். மற்ற நாகரிக மக்களைப் போன்றே, இவர்களிடையே சமூக அமைப்பு உண்டு. (Social Organisation) இவர்களுக்கென்று சில சமூகக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. நாகரிகமான உலகத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாததாலோ என்னவோ, இப் பழங்குடி மக்கள் திருடவோ, பொய் சொல்லவோ, பிறரது வாழ்க்கையைக் கெடுத்து, தங்களது வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளவோ, தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். இப்பழங்குடி மக்களது வாழ்வும் வரலாறும், இன்றைய மக்களின் வாழ்வையும், வரலாற்றையும் அறிவதற்கு பெருந்துணையாக உள்ளது. இத்தகைய பழங்குடி மக்கள் இந்தியா முழுவதும் ஏறத்தாழ மூன்று கோடி மக்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களை 427 இனங்களாக பகுக்கின்றனர். இவ்வினங்களின் சில எண்ணுடைய ஒரு சில மக்களையே கொண்டுள்ளன. இன்னும் சில பல ஆயிரம் மக்களைக் கொண்டவை. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 23 பழங்குடியினர் வாழ்வதாக 1961-ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணிப்பு கூறுகின்றது. இவ்வினங்களைச் சார்ந்த மக்களின் தொகை 1,60,595, இவர்கள் தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர்.[1] அவர்களுள் பெட்டக் குறும்பர்கள் முக்கியமானவர்கள் .

தமிழக பழங்குடி மக்களுள் ஒருவராக கருதப்படும் குறும்பர்கள் மைசூர் மாநிலத்தின் ஒரு சில பகுதிகளிலும், கேரள மாநிலத்தில் வயநாடு, கள்ளிக்கோட்டை, எர்ணாகுளம் போன்ற பகுதிகளிலும், தமிழகத்தில் நீலகிரி மாவட்டப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் தோடர், கோத்தர், கசவர், இருளர், பணியர் போன்ற மற்ற பழங்குடி மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் பெட்டக் குறும்பர்களது வாழ்க்கை, மற்ற பழங்குடி மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பல சிறப்பியல்புகளையும், சிறப்பான சில சமூகக் கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ள காரணத்தினால் தனியே தெரிகின்றது. கன்னட மொழியில் "பெட்ட" என்பது மலை (அ) குன்று என்பதனைக் குறிக்கும். இவ்வகை குறும்பர்கள் மலைப்பகுதியில் வாழ்வதால் "பெட்ட குறும்பர்கள்" என அழைக்கப்படுகின்றனர்.

குறும்பர்களுக்குள் பல பிரிவுகள் காணப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்தில் வாழும் குறும்பர்களுக்குள் "முள்ளுக் குறும்பர்கள்" எனவும் "பெட்ட குறும்பர்கள்" எனவும் "ஊராளி குறும்பர்கள்" எனவும் "தேன் குறும்பர்கள்" எனவும், "தச்ச நாடான் மூப்பன் எனவும்" பல உட்பிரிவுகள் காணப்படுகின்றனர். இந்த உட்பிரிவுகளுக்கேற்ப இவர்களுடைய பழக்க வழக்கங்களும், வாழ்க்கை அமைப்புகளும், தொழில் முறைகளும், மொழியும் மாறுபட்டே விளங்குகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் பெட்ட குறும்பர்கள் கார்குடி, தெப்பக்காடு, தேவர் சாலை, நிலக்கோடு, பிதிர்காடு, மாயார் போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். கார்குடி, தெப்பக்காடு, ஆகிய இடங்களில் வாழ்பவர்கள் காட்டு இலாக்காவில் வேலை செய்பவர்களாகவும், யானை மாவுத்தர்களாகவும், தங்களது வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கின்றனர். மற்றப் பகுதிகளில் வாழ்பவர்கள் தேயிலைத் தோட்டங்களில் நிலையான வேலையையும்கூலி வேலையையும் செய்து, வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

இவர்களுடைய வீடுகள் யாவும் காட்டுப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன. ஒரு ஊரில் இருப்பவர்கள் ஒரே இடத்தில் சேர்ந்து வாழ்வது இல்லை. சிதறினாற் போல இரண்டு (அ) மூன்று இடங்களில் தங்களது வீடுகளை அமைத்துக் கொண்டு இருக்கின்றனர். இவர்கள் வாழும் இடங்களை "பாடி" என்று அழைக்கின்றனர். ஒவ்வொரு பாடியிலும் பத்து வீடுகளுக்கு குறையாமல், வீடுகள் இருக்கின்றன, இந்தப் பாடிகள் சாலைப்பகுதியில் இருந்து, குறைந்தது

½ கி. மீ. தூரத்தில் காட்டுப் பகுதியிலேயே காணப்படுகின்றன. சாலையில் இருந்து பார்த்தால் நமது கண்களுக்கு சரியாக புலனாகாத வகையில் காட்டுக்குள் மேலே கூறப்பட்ட பாடிகள் காணப்படுகின்றன. இவர்கள் தங்களது வீடுகளை சாலை ஓரப்பகுதிகளிலோ, திறந்த வெளியிலோ அமைத்துக்கொள்ள விரும்பவில்லை.

இந்தப் பாடிகளின் உள்ள வீடுகளின் அமைப்பு வியத்தற்குரியது. வீடுகளை வரிசை வரிசையாக பல வரிசைகளாக கட்டாமல், ஒரு பக்கத்திற்கு மூன்று (அ) நான்கு வீடுகள் வீதம் நான்கு பக்கங்களிலும் சதுரமாக கட்டி வைத்து இருக்கின்றனர். பாடியின நடுப்பகுதியில் சுவரில்லாமல் உயர்ந்த திண்ணையுடன் கூடிய வீடு போன்ற அமைப்பு உள்ளது. இதனை அவர்கள் கோயிலாகவும், அந்த பாடியில் மக்கள் கூடுகின்ற மன்றமாக பயன்படுத்துகின்றனர். வீடுகளின் சுவர்களை மூங்கில் பட்டையினால் செய்யப்பட்ட ஒரு தட்டியினைக் கொண்டு அமைக்கின்றனர். பின்னர் தட்டியின் உள்ளும் புறமும் சேற்றைக் குழைத்து பூசி விடுகின்றனர். பெரும்பாலான வீடுகளின் மீது சேறு பூசப்படாமல் இருக்கின்றது. சில வீடுகளின் சுவற்றின் மீது சிவப்பு காவியை தடவி வைத்து இருக்கிறனர். வீடுகளின் கூரை அப்பகுதியில் கிடைக்கும் ஒரு வகைப் புல்லைக் கொண்டே கூதவு அமைத்து இருக்கின்றனர். எந்த வீட்டிலும் பின்புறத்தில் வழி கிடையாது. இவர்களுடைய பாடிக்குள் செல்லும்பொழுது, வரும் விருந்தினராக இருப்பினும் (அ) அங்கேயே வாழ்பவராக இருப்பினும் செருப்பு அணியாமல் தான் செல்லுதல் வேண்டும். அப்படி காலணி எதுவும் அணிந்து இருந்தால், அவைகளை பாடிக்கு வெளியே விட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு பாடியிலும் தலைவர் என்று ஒருவர் இருக்கின்றனர். அவர் சொற்படியே மற்றவர்கள் கேட்கிறார்கள்.

பெட்ட குறும்பர்களில், ஆண்கள் நடுத்தர உயரமுள்ளவர்களாகவும், கறுப்பு நிறம் கொண்டவர்களாகவும், பரந்த முகம் கொண்டவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆண்களில் பெரும்பாலானவர்களுக்கு தலைமுடி சுருள் சுருளாக இருக்கின்றது எனலாம். கார்குடி, தெப்பக்காடு போன்ற பகுதிகளில் வாழ்பவர்கள் பெரும்பாலும் காட்டிலாக்கவில் வேலை செய்வதனால் அரைக்கால் டிராயரையும் சட்டையையும் அணிந்துள்ளனர். மற்ற பகுதிகளில் வாழ்பவர்கள் நான்கு முழ வேஷ்டியும், மேலே ஒரு துண்டும் அணிந்துள்ளனர். ஆண்களில் பெரும்பாலானவர்கள் காது குத்திக்கொண்டு உள்ளனர். ஆனால் அவர்களுக்கென்று காதணிகள் ஏதும் இல்லை.

பெண்கள் மாநிறம் உடையவர்களாகவும், நடுத்தரமான உயரம் உடையவர்களாகவும் விளங்குகின்றனர். வேஷ்டி போன்ற பெரிய வெள்ளையான துணியைக் கொண்டு மார்புமுதல் கால்வரை மறைத்துக் கொண்டுள்ளனர். மற்றபடி நமது பக்கத்தில் வாழும் பெண்களைப் போல் புடவையோ, ரவிக்கையோ அணிந்து பழக்கம் இல்லாதவர்கள். பெண், குழந்தையாய் இருப்பினும் இதே உடையையே அணிகின்றனர். பெண்களுடைய தலைமுடி பெரும்பாலானவர்களுக்கு நேரை முடியாகவே உள்ளது. தலையில் வகிடு எடுதது, சீவி கொண்டை போடுகின்றனர். சடைபோடும் பழக்கம் ஏதோ ஒரு சில பெண்களிடம் மட்டுமே காணப்படுகின்றது. பெண்களின் கழுத்தில் எந்தவிதமான மணியோ, அணிகலன்களோ காணப்படவில்லை. பெண்கள் அனைவரும் காதுகுத்திக் கொண்டுள்ளனர். மூக்கும் குத்திமூக்குத்தியும் அணிந்துள்ளனர்.

இவர்களில் ஒரு சிலர் தங்கள் வீடுகளில் மாடுகளை வளர்த்து வருகின்றனர். ஒரு சிலர் காட்டு மிருகங்களின் வருகையைத் தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் வகையில் நாய்களை வளர்த்து வருகின்றனர். இவர்கள் வீட்டுத் தோட்டங்களில் தோட்டப் பயிர்கள் என்று எதுவும் போடுவது கிடையாது.

இந்தப் பகுதியில் அரசாங்கத்தினரால் நடத்தப்படும் அரசாங்க உறைவிடப் பள்ளியில் (Government Tribal Residential School) இருக்கின்றன. பெரும்பாலான பள்ளிகளில் 5-ஆம் வகுப்புவரை (வகுப்புகள்) இருக்கின்றன. இப்பள்ளிகளில் மற்ற பழங்குடி மக்களின் குழந்தைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது குறும்பர்களின் குழந்தைகள் மிக மிகக் குறைவாகவே படிக்கின்றனர் எனலாம். அந்த

அளவுக்கு கல்வியின் அவசியம் தெரியாமல் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். வேறு சிலர் பள்ளியில் உள்ள உணவும், உடுக்க உடையும் தருகின்ற காரணத்தினுல்தான் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புகின்றனர்.

சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்களும், இரவு உணவை மட்டுமே முழுமையாகச் சாப்பிடுகின்றனர். மற்றநேரங்களில் காட்டில் கிடைக்கும் காட்டுக் கருணை என்ற ஒரு கிழங்கை கொண்டுவந்து வேக வைத்து உப்பிட்டுச் சாப்பிடுகின்றனர். கிடைத்தபொழுது, மூங்கிலரிசியையும் கொண்டு சமைத்து சாப்பிடுகின்றனர். இப்பொருள்களை யாவும் பெரும்பாலும் பெண்களே கொண்டுவந்து சேர்க்கின்றனர். இந்த அளவுக்கு இந்த பழங்குடி மக்களின் பொருளாதார சூழ்நிலை மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது. (Food gathering stage)

தற்போதுள்ள சூழ்நிலையில் இவர்கள்கூட ஓட்டுப்போட உரிமைப்பெற்றவர்கள் என்ருலும் இங்குள்ள அரசியல் கட்சிகளைப் பற்றியோ, அரசியல் தலைவர்களைப் பற்றியோ இவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. இவர்களுக்கெல்லாம் தெரிந்த ஒரே தலைவர் மகாத்மா காந்திதான்.

இவர்களுடைய திருமண நிகழ்ச்சிகள் மிகவும் எளிதான முறையிலேயே நடக்கின்றன. ஆனுல் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சமுக கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே, திருமணங்கள் நடக்கின்றன. பருவமடைந்த பின்னரே, திருமணங்கள் பெற்ருேர்களால் நிச்சயிக்கப்படுகின்றன. மற்றபடி ஒரு ஆணும் பெண்ணும் பெட்ட குறும்பர்கள் பிரிவுக்குள்ளேயே விரும்பினுல், அவர்களுக்கு எந்தவித தடையுமின்றி திருமணம் செய்து வைக்கப்படுகின்றது. வெவ்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்களாயிருந்தால் அவர்களிடையே திருமண உறவு இராது. அதையும் மீறி அவர்கள் திருமணம் செய்து கொண்டால், ஜாதியினின்று விலக்கப்படுவார்கள். பாடியில் உள்ள வீட்டில் குடியிருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். இவர்கள் தங்கள் சொந்த அக்காளின் மகளை திருமணம் செய்து கொள்வது கிடையாது. தாய்வழி மாமன் மகளையும், தந்தைவழி அத்தையின் மகளை மட்டுமே திருமணம் செய்து கொள்கின்றனர். திருமணத்திற்கு முதற்படியாக மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் தங்கள் பாடியில் உள்ள தலைவனுடன் பெண் வீட்டிற்குச் செல்லுகின்றனர். பெண்ணைப் பார்த்த பின், பெண் வீட்டுக்காரர்களுடன் பேசி திருமணத்தையும், திருமணத் தேதியையும் வெற்றிலைப் பாக்குக் கொடுத்து நிச்சயம் செய்து கொள்கின்றனர். திருமணச் செலவு முழுவதும் மாப்பிள்ளை வீட்டாராலேயே செய்யப்படுகின்றது. இந்த திருமணம் அவர்கள் பாடியின் நடுவே உள்ள பொதுஇடத்தில் நடைபெறுகின்றது திருமணத்தன்று மணமக்களும், மணமக்களது பெற்ருேர்களும் புத்தாடை உடுத்திக் கொள்கின்றனர். பிறகு மணமகன் சாதாரண ஒரு மணியை நூலில் கோத்து, "தாவுலு", "கொவாலு" போன்ற இசைக்கருவிகள் இனிதே முழங்க மணமகள் கழுத்தில் கட்டிவிடுகின்ருன். திருமணத்திற்குப் பிறகு அந்த மணி, மணமகளின் கழுத்தில் அப்படியே இருக்கவேண்டும் என்பது கட்டாயமில்லை. திருமண வீட்டுக்காரர்கள் பொருளாதாரத்தில் சற்று உயர்ந்து இருந்தால், திருமணத்தன்று விருந்து படைக்கின்றனர். இல்லையேல் வெற்றிலைத் தாம்பூலத்துடன் திருமணம் இனிதே முடிவடைகின்றது. இவர்களிடையே ஆணுக இருப்பினும், பெண்ணுக இருப்பினும் மறுமணம் செய்துகொள்ள உரிமை உண்டு. கணவனே (அ) மனைவியோ இறந்து விட்டால் மறுபடியும் அவர்கள் வேருெரு ஆடவனை கணவனுகவோ (அ) வேரொரு பெண்ணை மனைவியாகவோமணம் செய்துகொள்கின்றனர். நம்மிடையே மனைவி இறந்தபின் கணவன் மட்டுமே மறுமணம் செய்துகொள்ளும் உரிமை பெற்று இருக்கின்ருன். ஆனுல் இந்த பழங்குடி மக்களில் பெண்களும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை பெற்று இருக்கின்ருர்கள். அண்ணன் இறந்துவிட்டால், அண்ணன் மனைவியை தம்பி திருமணம் செய்து கொள்ளுதல் கூடாது. வெளியில் உள்ளவர்கள் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு இவர்களிடையே இருக்கின்றது. ஆனுல் தம்பி இறந்துவிட்டால், அவன் மனைவியை அண்ணன் விரும்பினுல் திருமணம் செய்துகொள்ளலாம்.

பெட்ட குறும்பர்கள் முள் குறும்பர்களை, தங்களைவிட உயர்ந்தவர்கள் என்றும், மற்ற பிரிவில் உள்ள குறும்பர்கள் தங்களைவிட தாழ்ந்தவர்கள் என்றும் கூறிக்கொள்கின்றனர். மற்ற பிரிவில் உள்ள குறும்பர்களும் இதை ஒத்துக் கொள்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. முள் குறும்பர்களுடன் திருமணம் போன்ற சம்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்வதில் இவர்கள் தடை ஏதும் சொல்வதில்லை. ஆனால் தங்களுடைய தங்களைவிட தாழ்ந்தவர்கள் என்று கருதப்படும் மற்ற பிரிவினர்களுடன் திருமணம் போன்ற தொடர்பு வைத்துக்கொள்வதையே வெறுக்கின்றனர்.

இவர்கள் காட்டில் கிடைக்கும் இலைகளை யும், வேர்களையும் மருந்துகளாகப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் மருத்துவ நிலையங்களுக்கு போவதே கிடையாது. மற்றவர்கள் கொடுக்கும் மருந்துகளை வாங்கி சாப்பிடுவதும் இல்லை. அரசாங்கத்தினரால் அனுப்பப்பட்ட சுகாதார இலாக்காவினர் இவர்களுக்கு அம்மை குத்துவதற்காக (vaccination) பாடிக்குள் நுழைந்த போது எல்லோரும் சேர்ந்து அவர்களை தாக்க முற்பட்டதை நேரடியாகக் கண்டேன். மருத்துவ நிலையங்களில் கொடுக்கப்படுகின்ற மருந்தையோ (அ) உடலில் ஊசியையோ (injection) போட்டுக்கொண்டால் அவர்களுடைய கடவுள் அவர்களை மன்னிக்காது என்று நம்புகின்றனர். இவர்கள் தங்கள் தெய்வங்களாக "பூமிதேவனை யும்", "மேராவு" என்ற தெய்வத்தையும், "கொடுஞ்சாத்தான்", "முளன்" போன்ற தெய்வங்களையும் வணங்குகின்றனர். இவைகளில் "பூமிதேவனையும்", "மேராவு" என்ற தெய்வத்தையும் குறும்பர், இருளர், பணியர் போன்ற எல்லோரும் பொதுவாக வழிபடுகின்றனர். "கொடுஞ்சாத்தான்" "முளன்" போன்ற தெய்வங்கள் குறும்பர்களால் மட்டுமே வழிபடப் படுகின்றது. மொழி இயல் சண்ணோட்டத்தில் அவர்களின் கடவுளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டு இருப்பதைப் போன்று திரிந்து இருக்கலாம் என கொள்ளத் தோன்றுகிறது.

| | |
|---|---|
| பொம்மைத் தேவன் | பூம்தேவன் |
| மாரியாய் | மேராவு |
| கருஞ்சாத்தான் | கொடுஞ்சாத்தன் |
| முனி | முளன் |

கடவுளிடம் வைத்து இருக்கும் நம்பிக்கையைப் போன்றே, இறந்தவர்களின் ஆவி மீதும் நம்பிக்கை வைத்து இருக்கின்றனர். ஒரு வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால், பெரும்பாலும் அன்றைய தினமே காட்டுப்பகுதிக்கு எடுத்துச் சென்று ஏதாவது ஒரு இடத்தில் புதைத்து விடுகின்றனர். இடுகாடு என்ற எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியும் அவர்களுக்கு இல்லை. எரிக்கின்ற பழக்கம் இவர்களிடையேகிடையாது. பிறகு அன்றைய இரவு வீட்டுக்குவந்து, இறந்த இடத்தில் ஒரு பாத்திரம் நிறைய சோறு வடித்து வைத்துவிடுகின்றனர். அதன் பக்கத்தில் ஒரு குவளை நீர் நிறைத்துவைத்து படைக்கின்றூர்கள். பிறகு அந்த இடத்தில் இருந்து, வெளிப்பக்கம் வரை சிறுமணல்கொட்டி பரப்பி வைக்கின்றனர். பிறகு மறுநாள் காலை எழுந்து பார்க்கும்பொழுது பரப்பி வைத்த மணற்பரப்பில், சிறுசிறு காலடிகள் தெரிய வேண்டும்; குவளையில் இருந்த நீர் குறைந்திருக்க வேண்டும்; பாத்திரத்தில் உள்ள சோற்றின்மீது கைரேகை போன்று ஏதாவது அடையாளங்கள் தெரிய வேண்டும். அப்படி இருந்தால், இறந்தவர்களுக்கு இருப்பவர்கள்மீது அன்பு இருக்கிறதென்றும், அதன் காரணமாகவே அவர்கள் ஆவி திரும்பிவந்து அவைகளை எல்லாம் சாப்பிட்டு சென்று இருக்கின்றது என நம்புகின்றனர். அந்த ஆவியால், குடும்பத்திற்கும்,குடும்பத்தில் உள்ளவர்கட்கும் நல்வழி ஏற்படும்என்று நம்புகின்றனர். அப்படி வந்துசென்ற அடையாளங்கள் எதுவும் தெரியவில்லை என்றூல் இறந்தவர்கட்கு குடும்பத்தின் மீது நாட்டம் இல்லை என்றும், அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்கட்கு தீமையே விளையும் என்றும் கருதுகின்றனர். இத்தகைய நம்பிக்கை இந்தியாவில் உள்ள பல பழங்குடி மக்களிடையே காணப்படுகிறது என்பதனை மற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை நோக்கத் தெரிய வருகின்றது. சங்ககால இலக்கியங்களை நோக்கும் பொழுது சங்ககால தமிழர்களிடையேயும் இத்தகைய நம்பிக்கை இருந்து வந்திருக்கின்றது என்பது தெரிய வருகின்றது. கருவுற்ற நிலையில் பெண்கள் இறந்துவிட்டால், காட்டில் நினைத்த இடத்தில் புதைக்காமல், ஆற்றின் ஓரமாக சவக்குழி ஏற்படுத்தி, அதில் கால்களை மடக்கி வைக்காமல், நீட்டி வைத்துள்ள நிலையில் உட்கார வைக்கின்றூர்கள். பிறகு தலையை

கீழ்நோக்கி குனிய வைத்து மண்ணிட்டு மூடி விடுகின்றனர். மற்ற எந்தநிலையிலும் யாராவது இறந்துவிட்டால் படுக்க வைத்தே அடக்கம் செய்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. இறந்த ஒன்பதாம் நாள், இறந்தவர்களுக்கு நினைவுநாள் கொண்டாடுகின்றார்கள். மற்றபடி ஒவ்வொருவருடமும் இதை கொண்டாடுவதில்லை. ஒரு வீட்டில் சிறு குழந்தைகள் தவிர, மற்ற பெரியவர்கள் யாராவது இறந்து விட்டால், உடன் அந்த வீட்டைக் காலிசெய்து புதிய வீடு கட்டி அதில் குடிபுகுந்து விடுகின்றனர்.

மற்றப்படி பெரியோர்களுக்கோ, குழந்தைகளுக்கோ ஜுரம் போன்ற வேறு நோய்கள் பிடித்து இருந்தால், முதலில் அவர்களுக்குத் தெரிந்த காட்டுமூலிகைகளை மருந்தாகக் கொடுக்கின்றனர். அதிலும் நோய் திரவில்லை என்றால் உடனே பாடியில் உள்ள பொதுவான இடத்தில் எல்லோரும் ஒன்றுகூடி, சாமியை ஒருவர்மேல் வரவழைக்கின்றனர். இது போல சாமி வரக்கூடியவர்கள் ஒவ்வொரு பாடியிலும் இருவர்(அ) ஒருவர்தான் இருக்கின்றார்கள். சாமி வருவதற்கு முன் இவர்கள் கையில் "மிஞ்சி" என்ற ஒரு பொருளை கொடுத்து விடுகின்றனர். இது மிகச் சிறிய முறம் போலவும், அதன் நுனியில் சிறிய மணிகளும் கட்டப்பட்டு இருக்கின்றன. சாமி வந்தவுடன் கையில் உள்ள "மிஞ்சியை" குலுக்க ஆரம்பிக்கின்றனர். எந்த அளவுக்கு வேகமாக குலுக்குகின்றார்களோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு சாமி வந்துவிட்டது என்று அர்த்தமாம். அந்த சமயத்தில் பாடியின் தலைவனை, அந்தப் பாடியின் தலைவன், அந்தப் பாடியில் உள்ளவர்கள் நோயுற்று இருப்பதில் காரணத்தைக் கேட்கின்றான், உடனே "தமக்கு ஒரு குறை இருக்கின்றதென்றதென்றும், அதைச் செய்தால் நோய் தீர்ந்துவிடும்", என்றும் சாமி வந்தவர் கூறுகின்றார். உடனே அன்று இரவே, சாமிக்கு படையல் போட்டு, ஆட்டையோ (அ) கோழியையோ பலி கொடுத்து குறையை தீர்த்து விடுகின்றனர். இத்துடன் நோய் தீர்ந்துவிடும் என்று நம்புகின்றனர்.

சில சமயங்களில் சாமி வந்தவர்கள் "நோய் வந்தவர்களில் ஒரு சிலரை பலி வாங்கிக்கொண்டு தான் நோயைச் சரியாக்குவேன்" என்று கூறி விட்டால், அதற்கும் ஒன்றும் செய்யாமல் இருந்து விடுகின்றனர். காரணம் கடவுளே கூறிவிட்டபின் வேறு ஒன்றும் செய்யஇயலாது என்ற நம்பிக்கைதான். இதன் காரணமாக இங்கு இருப்பவர்களின் மரண எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

இவர்களுக்குள்ளே, கீழே கொடுக்கப்பட்டிருப்பதைப் போன்று, ஆண்களாயினும், பெண்களாயினும், மொத்தம் எட்டுவகையான பெயர்கள்தான் இருக்கின்றன.

| ஆண் | பெண் |
|---|---|
| மாண்பன் | மாண்பி |
| பொம்மன் | பொம்மி |
| காளான் | காளி |
| மாறன் | மாறி |
| மாதன் | மாதி |
| கேத்தான் | கேத்தி |
| சடையன் | சடைச்சி |
| சோமன் | சீர்த்தி |

இந்த எட்டு வகையான பெயர்களைத் தவிர வேறு பெயர்களைக் கேட்க முடியவில்லை. ஒரே குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு ஒரே பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. பரம்பரையாக வந்த பெயர்களையே வைக்கவேண்டும் என்றும், வேறு பெயர்கள் வைத்தால் கடவுள் அவர்களை மன்னிக்கமாட்டார் என்றும் நம்புகின்றனர்.

இவர்கள் ஒரு இடத்தில் நிலையான வாழ்க்கை வாழாதவர்கள் என்பதற்கு முக்கியமான சில சான்றுகள் காணப்படுகின்றன. இதில் சி. ஆர். ரங்கநாதன் அவர்கள் குறும்பர்கள் குடியிருந்த இடங்களாக சில ஊர்களைக் குறிப்பிட்டுள்ளார். தற்போது அவர்கள் அந்த ஊர்களில் வாழவில்லை.[2] மானிடவியல் பேரறிஞர் தெர்ஸ்டன் அவர்கள் குறும்பர்களைப்பற்றிக் கூறும்பொழுது ஒரு பெண் பல ஆண்களை மணக்கின்றார்கள் என்று கூறியுள்ளார்.[3] ஆனால் இந்தப் பழக்கம் தற்போது இவர்களிடையே இல்லை. ஒரு பெண் கணவனை விடுத்து மாற்றான் ஒருவனுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுகின்றாள் என்று தெரிந்தால் உடனே "பாடியில்" உள்ளவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, அதை உறுதி செய்த பின்னர், அவளை அவர்கள் இனத்தில் இருந்து உடனே ஒதுக்கி விடுகின்றனர். குறும்பப்பெண்

ஒருத்தி புடவையையோ, ஜாக்கெட்டோ உடுத்தினால் உடனே அவளையும் இனத்தில் இருந்து உடனே ஒதுக்கிவிடுகின்றனர். இவர்கள் 'ஆகஸ்ட்' மாத இறுதியில் "ஓணம்" பண்டிகையை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். "பிதி" என்ற மற்றொரு பண்டிகையும் இவர்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இவர்களது மொழியில் பல சிறப்புக்கள் காணப்படுகின்றன. இவர்கள் தந்தையை "amman" என்றும், தாயை "abbe" என்றும் அழைக்கின்றனர். "Pronoun"ல், Human Pronoun, non-Human pronoun என்ற இருவகைகளே உள்ளன.

EXAMBLE:

| | |
|---|---|
| அவன் சாப்பிட்டான் | — agu tindage [அகு திண்டகே] |
| அவள் சாப்பிட்டாள் | — agu tindage [அகு திண்டகே] |
| அவர்கள் சாப்பிட்டார்கள் | — agu tindage [அது திண்டகே] |
| அது சாப்பிட்டது | — adu tindnge |

குறும்பர்கள் பேசும் மொழிகளில், பெட்ட குறும்பர்கள் பேசும் மொழி தனிமொழி (distinct language) என திராவிட மொழிஇயல் பேரறிஞர் டாக்டர் "எமெனோ" அவர்கள் தனது கட்டுரையொன்றில்[4] குறிப்பிட்டுள்ளார்கள்.



பெட்டக் குறும்பர் பெண்கள் <–

என் மொழியியல் கள ஆய்வின் போது, கார்குடி, முதுமலை வனப்பகுதியில் தங்கி, குறும்பர்களைச் சந்தித்துப் பேச உதவியாக இருந்த அதிகாரிகளுக்கும், நண்பர்களுக்கும் குறிப்பாக திரு. ஏ. விக்டர் (Forest Range Officer, Wild Life No. 1) திரு. ஜே. மங்களராஜ் ஜான்சன் (Forest Range officer, Upper Gargudi). திரு. செல்வராஜ் (Forester-Elephant in charge) திரு. கே. எஸ். பொன்னுசாமி (Forester) அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. எனது ஆய்வின்போது ஒருமாத காலம் தங்கி இருப்பதற்கு, தங்களுடைய பள்ளியில் எல்லா வசதிகளையும் செய்துகொடுத்த, கார்குடி ஆதிவாசிகள் உறைவிட பள்ளித் தலைமை ஆசிரியர் திரு பி. மாதன் அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றி உரித்தாகும். தெப்பக்காடு பகுதியில் தகவலாளர்கள் (Informants) பலரைச் சந்திப்பதற்கு உதவிகள் பல நல்கிய நண்பர் திரு. பி. ராமானுஜம் (Jr. Assistant, wild life range 1, Karagudi) திரு. ராஜகோபாலன் அவர்களுக்கும், இவர்கள் எல்லோரையும் சந்தித்துப் பேச முன்னோடிகளாக இருந்து உதவிசெய்த உதகை நண்பர்கள் திரு. சரவணபவானந்தம், திரு. அந்தோணி, திரு. வீரய்யா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்கள் எல்லோருடைய உதவியையும் பெறுவதற்கு மூலகாரணமாக இருந்து எல்லாவகையிலும் உதவிசெய்த அன்பு நண்பர் திரு. எஸ். சக்திவேல், எம். ஏ., எம். ஏ., மொழியியல் ஆராய்ச்சித் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

பெட்ட குறும்பன் –>



## Bibliography

1. Dr. S. Agesthialingom [Ed.] ... "தமிழகப் பழங்குடி மக்கள்" "Tamilaga palangudi Makkal", Annamalainagar, 1972, Page viii–ix.

2. C. R. Ranganathan, I. F. S. ... "Working plan for the Nilgiris - division." - 1941

3. Edgar Thurston, C. I. F. & K. Rangachari, M. A. ... "Castes and Tribes of South India."

4. Prof. M. B Emeneau. ... "Non-literary Dravidian Languages" - Current Trends in Linguistics - Vol. V, Page 342, 1969.


-----

# பாண்டிய நாட்டுக் காயல் துறை

தம்பி ஐயா பர்னுந்து

[நெல்லை மாவட்டத்தின் கிழ்கடற்ப் பகுதியில் பண்டைக்காலத்தில் கொற்கை ஒரு பெரிய துறைமுகமாயிருந்து பிறநாட்டு வாணிபமும், பிறநாட்டுப் பண்பாடுகளும் தமிழகத்தினுள் நுழையத் தலைவாசலாயிருந்தது. பண்டைய இலக்கியங்களும் பிறநாட்டார் குறிப்புகளும், இன்றைய அகழ்வாராய்ச்சியும் இதனைக் குறிக்கின்றன. ஆனால் அந்தப் பழமை இன்றைய வாழ்க்கையைச் சிறிதும் பாதிக்கவில்லை. ரோம நாணயங்களும், கோப்பைகளும் கிடைப்பது தவிர, இன்று வாழ்கிற பண்பாட்டில் அந்தப் பழைய கொற்கையின் பாதிப்பு எதுவுமில்லை.

ஆனால் காயல் 12ம் நூற்றாண்டு முதல் முக்கியத்துவம் பெற்று பிற்கால கீழ்த்திசை வாணிபம், அராபிய வாணிபம் இரண்டிற்கும் தமிழகத்தின நுழைவாயிலாகி, பல பண்பாடுகளின் தாக்கம் தமிழகத்தில் ஏற்பட வழி செய்தது. சுந்தரபாண்டியனுடைய படைகளின் வேகத்தை அதிகரிக்கச் செய்த குதிரைப் படைகளுக்கு அராபியக் குதிரைகள் வந்திறங்கியது இத்துறைமுகத்தின் வழியேதான். ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும் பரவியிருந்த அராபிய நாகரிகம் படைத்த பல பண்பாட்டுக் கூறுகள், இங்கும் கொணரப்பட்டன. இப் புதியவர்கள், சீனத்திற்கும், கிழ்த்திசை நாடுகளுக்கும் சென்று வாணிபத்தை வளர்த்தனர். இவ்வாறு வளர்க்கும்போது அவர்கள் ஒரு வர்க்கமாக ஆயினர். அவர்கள் கடற்கரையில் வாழ்ந்த மக்களோடு, பொருளுற்பத்தி செய்வதிலும் மீன்பிடிப்பதிலும், உப்புக்காய்ச்சுவதிலும், சங்கு, முத்துக்குளிப்பதிலும், படகோட்டுவதிலும், கப்பல் சரக்கேற்றுவதிலும் தொடர்பு கொண்டனர். இவர்கள் உள்நாட்டில் விற்ற பொருள்களும், வெளிநாட்டில் விற்ற பொருள்களும், வெளிநாட்டிலிருந்து இங்கு கொணர்ந்த பொருள்களும் தமிழக மக்களுக்கு, வெளிநாட்டு மக்கள் படைத்த பயன்பாட்டுப் பொருள்களோடும் கலைப்பொருள்களோடும் தொடர்பை ஏற்படுத்தியது. பின்னர் இக்கடற்கரைக்கு வந்த அயல்நாட்டு கத்தோலிக்கச் சாமியார்கள் பண்பாட்டுத் தொடர்புகளை மேநாட்டுப் பண்பாட்டிற்கும் தமிழக நாட்டார் பண்பாட்டுற்குமிடையே உண்டாக்கி அதன் மூலமாக சமுதாய பண்பாட்டு மாறுதல்களுக்கு அடிகோலினர். சமுதாயத்தின் அடிநிலைமட்டத்தில் வாழ்ந்த மக்களிடையே எழுத்தறிவு பரவ அச்சுத் தொழிலை நிறுவி தமிழில் உரைநடை நூல்களை வெளியிட்டனர். இத்தகைய பல முக்கியத்துவம் வாய்ந்த சமுதாய, பண்பாட்டு, அரசியல் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் களமாக காயலும், அதன் சுற்றுப்புறக் கடற்கரை நிலப்பகுதிகளும் விளங்கியுள்ளன.

இவற்றை நாமறிவதற்குரிய சான்றுகள் காயல் மண்ணில் புதைந்து கிடக்கிறது. அகழ்வாராய்ச்சியின் தோண்டுகருவிகளும், வரலாற்றாய்வாளரின் அறிவும் சேர்ந்தால், காயலில் புதையுண்டு கிடக்கும் பொருள்களின்மூலம் தமிழக வரலாற்றில் பிற்காலம் பற்றிய சித்திரம் தெளிவாகும். திரு தம்பி ஐயாவின் இக்கட்டுரை உரிய இடங்களில் ஊக்கத்தை உண்டாக்குமென நம்புகிறேன்.

நா. வா.]

"திரைகடலோடியுந் திரவியம் தேடு" என்னும் முதுமொழி, முற்காலத்தில் தமிழர் கடல் கடந்து அயல்நாடுகளுடன் வாணிபம் செய்து வந்த மரபை உணர்த்துகின்றது. இக் கூற்றை பேரறிஞர்கள் மொழி, வரலாறு, தொல்பொருள் ஆய்வு என்னும் பலவிதகோணங்களிலிருந்தும் ஆராய்ந்து உண்மையை வெளியிட்டிருக்கின்றனர்.

சான்றாக; இஞ்சி, அரிசி, தோகை, தேக்கு, அம்மா, வீடு, யாழ் முதலிய சொற்கள் பாபிலோனியர் மொழிகளில் காணப்படுவதாகவும் அவர்களின் ஊர்ப்பெயர்கள்; நிப்பூர், எருதூர், ஊர் என்னும் தமிழ்ச் சொற்களாகவேயிருந்தன என்றும் மொழிநூல் அறிஞர் தெரிவிக்கின்றனர்.

பின்னர், வரலாற்றறிஞர் கூற்றின்படி; தமிழை வளர்த்த பாண்டிய மன்னர் வாணிகத்-தையும் வளர்த்துவந்தனர். ஏறத்தாழ கி. மு. 1500இல் வாழ்ந்த அத்தீனிய அரசர்கள் கடல் வாணிபத்தினுல் பாண்டிய மன்னர்களுடன் தோழமைகொண்டு "பாண்டியோன்" என்ற பெயரைத் தங்களுக்குள் சூட்டிக்கொண்டனர். கருங்கடல் ஓரத்தில் அமைந்திருந்த பட்டினங்களும், பாண்டியனது துறைமுகமான 'கொற்கை" என்னும் பெயரேற்று "கொல்கில்" என வழங்கப்பட்டன.

அடுத்து, தொல்பொருள் ஆய்வாளரின் கண்டுபிடிப்பின்படி பூர்வீக காலத்தில் பிறநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேக்கு மரத்தின் சிதைவற்ற பாகங்கள் மெசபட்டோமியாவில் அகழ்வாராய்வின்போது கிடைத்ததாகக் கூறுகின்றனர்.

இவ்விதமாக கடல் வாணிபம் வளர்ச்சியுற்ற காலங்களில் அதற்கு அநுகூலமாயமைந்த துறைமுகப் பட்டினங்களும் செழிப்புற்றிருந்தன கொற்கையில் கிடைத்த முத்தின் சிறப்பைப் பற்றியும் அந்நகரின் அமைப்பைப் பற்றியும் அகநாநூறு, நற்றிணை, மதுரைக்காஞ்சி; சிலப்பதிகாரம் முதலிய சங்கநூல்கள் குறிப்பிடுகின்றன.

தொல்பொருள் ஆய்வாளர் கொற்கைத் துறைமுகம் இருந்த இடத்தை ஆராய்ந்து அவ்விடத்தில் அக்காலத்தில் கடல் மட்டம் ஏறத்தாழ எட்டடி ஆழத்தில் இருந்ததற்கு அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவித்தனர். மேலும் முத்துச் சிப்பிகள் (கிழிஞ்சல்கள்) சங்குத் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருட்கள், பிராமி எழுத்துக்கள் எழுதப்பட்ட மட்பாண்டங்களின் ஓடுகள், சங்கு அறுக்கும் கருவிகள், சங்கு வளையல்கள், வர்ணப் பானை ஓடுகள், உறை கிணறுகள் பழைய நாணயங்கள் முதலியன அகப்பட்டன. இங்கு கிடைத்த கரியை டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையம் சோதனை செய்ததில் அதன் காலம் கி. மு. 785ஆம் ஆண்டாக இருக்கவேண்டும் என மதிப்பிடுகின்றது. C14test

அடிக்கடி தாம்பிரபரணியாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் கொற்கை நகர் தூர்ந்து கடலும் கரையும் ஏறத்தாழ ஐந்துமைல் தொலைவிற்கு பின்தங்கிவிட்டன. கொற்கை தூர்ந்த பின் காயல் நகரே பாண்டிய நாட்டின் சிறந்த துறைமுகமாயிற்று.

## காயல் நகர்:

காயல் எக்காலத்தில் துறைமுகமாக ஆயிற்று என்பதை திட்டவட்டமாகக் கூறுவது கடினம். பன்னெடுங்காலத்திற்கு முன்னரே கொற்கை பாண்டிய நாட்டுத் துறைமுகமாயிருந்தது. கி. பி. இரண்டாம் நூற்றுண்டுவரை கொற்கையே துறைமுகமாக இருந்ததாக "தாலமி" (Ptoemy) என்ற நிலநூல் ஆசிரியரின் குறிப்புகளால் விளங்குகின்றது. சங்க இலக்கியங்களுக்கு பின்னர் எழுந்த இலக்கியங்கள் கொற்கையில் முத்துத்தொழில் நடைபெற்றதாக குறிப்பிடவில்லையாதலால் சங்க காலத்திற்கு பின்னர் கொற்கை துறைமுகப்பட்டினமாக விளங்கவில்லையென ஊகிக்க முடியும்.

கி. பி ஐந்தாம் நூற்றுண்டில் தமிழ்நாடு வந்த "பாகேசின்" என்பவரும் கி. பி. ஆரும் நூற்றுண்டில் தமிழகம் வந்த "கோஸ்மாஸ் இண்டிகோ பிளஸ்டிஸ்" என்ற எகிப்திய முனிவரும் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் தென்னுடு வந்த 'யுவான்சுவாங்" என்னும் சீன நாட்டின் யாத்ரிகரும் பாண்டிய நாட்டில் முத்துத் தொழில் நடந்ததாக குறிப்பிடுகின்றுர்கள், இருப்பினும் எவ்விடத்தில் முத்தெடுக்கும் தொழில் நடைபெற்றது என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை. ஆனுல் கி. பி. பதின்மூன்ரும் நூற்றுண்டில் தமிழகம் வந்த மார்க்கோ போலர் காயல் துறைமுகத்தில் முத்தெடுக்கப் பட்டதாக தெரிவிக்கின்றுர். ஆதலின் காயல் கி. பி. பதின்மூன்ரும் நூற்றுண்டிற்கு முன்னரே சிறப்புற்றிருந்தது என்பது தெளிவு.

## மார்க்கப்போலரின் குறிப்புகள்:

காயல்துறை பற்றி மார்க்கப்போலர் எழுதி வைத்துள்ள குறிப்புகளிலிருந்து சில பகுதிகளைக் காண்போம் :-

"காயல் என்ற பெருமை சான்ற பெருநகரை அஸ்தியர் என்ற மன்னன் ஆளுகின்றுன். அவன் ஐவருள் முதல்வன். அம்மன்னனிடம் பொன்னும் மணியும் மல்கி விளங்குகின்றன. அவ

னுடைய நாடு அமைதியுடன் காணப்படுகிறது. அயல் நாட்டு வணிகர்களுக்கு உறைவிடம் உகந்த முறையில் அமைந்துள்ளது. அயல்நாட்டு வணிகர்களை மன்னன் அன்புடன் வரவேற்கிறான். வெளிநாட்டு வணிகர்களுக்கு வேண்டிய பொருள் உடனுக்குடன் கிடைக்கின்றன. மேலை நாட்டிலிருந்தும் ஹோர்மோஸ், கிஸ், ஏடன் முதலிய அரேபிய நாடுகளிலிருந்தும் வணிகர்கள் இங்கு வந்த வண்ணமாகவும் இருக்கிறார்கள். இங்கு குதிரை வாணிகம் சிறப்பாக நடைபெறுகிறது. இத்துறைமுகம் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது.''

''காயலை ஆளும் மன்னனும் அவனது தம்பியர் நால்வரும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள். இவர்களுடைய தாய் இன்னும் உயிரோடு இருக்கிறாள். இவர்கள் தங்களுக்குள் அடிக்கடி மாறு கொண்டு போர் விளைத்துக்கொள்வர். இவ்வேளைகளில் அவர்களது தாய் தடுத்து நிறுத்துவாள். அவள் கையில் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு நீங்கள் உங்களுக்குள் சண்டையிட்டால் உங்களுக்குப் பாலூட்டிய மார்பையும் உங்களைத் தாங்கிய மடியினையும் அறுத்தெறிவேன் என்று அச்சுறுத்துவாள். இதனால் அவர்கள் பகைமைகொள்ளமாட்டார்கள். எனினும் அவள் இறந்த பின்னர் அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டிருக்கவேண்டும்.''

மார்க்கப்போலர் அஸ்தியர் என்று குறிப்பிட்ட மன்னன் கி. பி. 1268 முதல் 1308 வரை ஆட்சி செய்த மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்பது வரலாற்று ஆசிரியர் கருத்து, காயல் நகர மக்களது பழக்கவழக்கங்களைப் பற்றி மார்க்கப்போலர் குறிப்பிடுவது:—

''இந்நாட்டு மக்கள் தாம்பூலம் என்ற இலையை வாயில் இட்டு மென்று ஒருவகையான மகிழ்ச்சிகொள்ளும் வழக்கத்தைக் கொண்டுள்ளார்கள். செல்வந்தர்கள் தாம்பூலத்தோடு பச்சைக்கற்பூரம், சாதிக்காய் முதலிய மணம் தரும் பொருள்களைச் சேர்த்து சுவைப்பர். அத்துடன் சுண்ணாம்பையும் சேர்த்துக்கொள்வர்.

''ஒருவன் மற்றொருவனை வெளிப்படையாக இகழ எண்ணினால் வாயிலுள்ள உமிழ்நீரை மற்றவன் முகத்தில் உமிழ்வான். உடனே நாடாளும் அரசன், வாளும், கேடயமும் கொடுத்து இகழ்ந்தவனையும் இகழப்பட்டவனையும் போர்புரியச் செய்வான். இப்போர் இருவருள் யாரேனும் ஒருவர் இறக்கும் மட்டும் நடைபெறும்.''

காயலில் குதிரை வாணிபத்தைப் பற்றி மார்க்கப்போலர் கூறுவது:—

''இந்நாட்டில் குதிரைவளர்ப்புக் கிடையாது. பெரும்பாலும் ஹோர்மோஸ், டோபர், சோர், ஏடன் முதலிய மேலைநாட்டு வணிகர்களிடமிருந்து குதிரைகள் வாங்கப் பெரும்பகுதியான தொகையை இம்மன்னன் செலவிடுகிறான். ஒரு குதிரையின் விலை ஏறத்தாழ 500 சக்கி (Saggi) ஆகின்றன. காயல் மன்னன் ஆண்டுதோறும் ஏறத்தாழ இரண்டாயிரம் குதிரைகள் வாங்குகிறான். இவ்வாறு வாங்கப்படும் குதிரைகளுள் பெரும்பகுதியானவை இறந்து விடுகின்றன. அவற்றைத் தக்கவாறு பாதுகாக்க காவலர் இன்றியும் அவைகளுக்குத் தக்க உணவும் மருந்தும் இன்றியும் அவைகள் இறக்க நேரிடுகின்றன. குதிரை வளர்ப்புக்கு இந்நாட்டின் மண்வளம் தக்கவாறு அமையவில்லை.''

காயல் கடற்கரையில் நடந்த முத்துத் தொழிலைப் பற்றி மார்க்கபோலர் விரித்துரைப்பதாவது:—

''முத்துக்குளிப்பவர்கள் கோடைநாட்களில் சிறிய படகுகள் பலவற்றுடனும் பெரிய கப்பலுடனும் கடலுக்குள் செல்வர். மன்னார்குடாக் கடல் ஏறத்தாழ பத்து அல்லது பன்னிரண்டு பாகம் அளவு ஆழம் (அறுபது அல்லது எழுபது அடி) இருக்கும். இக்கடலுக்குள் அறுபதுமைல் வரை சென்று முத்து இருக்கும் பகுதியை அடைந்தவுடன் கடலுக்குள் குதிக்கின்றனர். பின்பு தங்களது இடுப்பில் கட்டியிருக்கும் பைகளில் முத்துச் சிப்பிகளை அள்ளி நிரப்புகின்றனர். மூச்சுத் திணறும் பொழுது மேலே வந்து சிப்பிகளைக் கப்பலில் கொட்டிவிட்டு மீண்டும் கடலுக்குள் குதித்து முத்தெடுக்கின்றனர்.''

''இவர்கள் முத்துக்குளிக்கும் போது பெருமீன்களிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள மந்திரத்தால் அவைகளைக் கட்டுப்படுத்துகின்

றனர். மாலைக்காலத்தில் அவ்வாறு மந்திரத்தால் கட்டுப்படுத்திய மீன்களை மந்திரத்திலிருந்து விடுவித்துவிடுவர். இதனால் இரவில் திருட்டுத்தனமாக முத்தெடுக்கவரும் திருடர்களை மீன்கள் தாக்கிக் கொல்லும் என்பது இவர்களது நம்பிக்கை. இங்ஙனம் மந்திரம் கூறி மீனைக் கட்டுப்படுத்தும் மந்திரவாதிகளுக்கு எடுத்துவந்த முத்தில் ஒருபங்கும் கொடுக்கின்றனர்.

"அரசனிடம் ஆணை பெற்ற பின்னரே முத்துக் குளிக்கவேண்டும். அரசனுக்கு சேகரித்த முத்தில் பத்தில் ஒரு பங்கை கொடுக்க வேண்டும். உயர்ந்த முத்துக்கள் கிடைக்குமானால் அவற்றை அரசனுக்கே கொடுக்க வேண்டும். அரசன் உயர்ந்த முத்துமாலையைக் கொண்டிருந்தான். தனது ஒவ்வொரு தோளிலும் முத்தாலும், வைரத்தாலும் இழைக்கப்பட்ட பொன் வளையங்களை அவன் அணிந்திருந்தான். அவனது கைவிரல்களில் முத்து மோதிரங்கள் அணிந்திருந்தான். அவன் அணியும் முத்துக்களும், மாணிக்கங்களும் அவனது நாட்டில் கிடைக்கப் பெற்றமையால் அவற்றை அவன் பெருமையோடு அணிந்திருந்தான்.

மேற்கூறிய குறிப்புகளைத் தவிர தமிழ் நாட்டுப் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் ஆடை அணிகளையும் பற்றி மார்க்கப் போலர் எழுதிவைத்துள்ளார். இவருக்கு ஏறத்தாழ எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தென்னாடு வந்த அரேபிய நாட்டு அறிஞர் "வாசப்" (Wassaf) என்பவரும், கி. பி. 1498 ஆம் ஆண்டில் "வாஸ்கோடகாமா" (Vasco da Gama) என்னும் போர்ச்சுக்கல் வணிகரும், 1500ஆம் ஆண்டில் அரேபியா நாட்டிலிருந்து வந்த "லூடிபிகோ தி வர்தமா"(Ludobico-de-Varthama) என்பவரும் "பார்போசாவும்" (Barbosa) காயல் துறையில் முத்துத்தொழில் நடைபெற்றதைக் குறித்துள்ளார்கள்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் புதுச்சேரியில் வாழ்ந்த ஆனந்தரங்கம் பிள்ளை என்பாரின் குறிப்பேடு காயல் துறைமுகத்திலும் தூத்துக்குடி துறைமுகத்திலும் முத்தெடுக்கும் தொழில் நடைபெற்றது எனக்கூறுகிறது.

இவ்வாறாக, மார்க்கப்போலரும் அவருக்குப் பின்னர்வந்த வெளிநாட்டவர்களும் ஆனந்தரங்கம் பிள்ளையின் குறிப்பேடும் காயல்துறையின் முத்துத்தொழிலைக் குறிப்பதிலிருந்து கி. பி. 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை காயல் ஒரு பெரு நகராகத் திகழ்ந்தது எனலாம்.

### மார்க்கோபோலர் போந்த காயல்துறை:

மார்க்கோபோலர் குறிப்பிடும் காயல் இன்று எங்குள்ளது என்னும் பிரச்சினையில் வரலாற்றறிஞர்களின் கருத்துக்களில் வேற்றுமை காணப்படுகிறது. சிலர் காயல்பட்டினமென்றும் வேறு சிலர் புன்னைக்காயலென்றும் கூறுகின்றனர். ஆனால் டாக்டர் கால்டுவெல் அவர்களின் தொல்பொருள் ஆய்விற்குபின் மார்க்கப்போலர் குறிப்பிடும் காயல் இன்று பழயகாயல் என வழங்கும் சிற்றூர் என்பதாகத் தெரியவந்தது.

"காயல்" என்னும் சொல் கழிமுகம் அல்லது நீர்த்தேக்கங்களைக் குறிப்பதாகும். ஆறு கடலை மண்டுங்கால் கடற்கரையுடைந்து காயலெனப்படும் நீர்த்தேக்கங்கள் பல தோன்றின. "குட்டம்" என்னும் சொல்லும் காயலெனும் நீர்த்தேக்கங்களையே குறிப்பதாகும். குட்டங்கள் பல தங்கியிருப்பதால் சேரநாடு குட்டநாடு என வழங்கப்பட்டதென்னலாம். இவ்வாறாக தாம்பிரபரணி ஆறு கடலோடு கூடுமிடத்தில் அநேக நீர்த்தேக்கங்கள் அல்லது காயல்கள் இருந்தன (காயல் படம் பார்க்கவும்) அக்காரணத்தால் அங்கு எழுந்த ஊர் காயல் என்ற பெயரைப் பெற்றிருக்கவேண்டும்.

காயல்நகர் தன் சிறப்பை இழந்த பின்னர் அங்கு வசித்த முகமதியர் காயல்பட்டினத்திலும் பரதவரில் பெரும்பாலோர் புன்னைக்காயல் என்னும் ஊரிலும் சென்று குடிபுகுந்ததாகவும் தெரிகிறது. காயல்பட்டினத்திற்கு சோனகர் பட்டினம் என்பதே தொன்மையான பெயர், புதிதாக குடிபுகுந்தவர்கள் காயல்பட்டினமென வழங்கினரென கொள்வதில் தவறில்லை. இதே போன்று புன்னைக்காயல் என்னும் ஊர் உலாந்தருடைய (டச்சுக்காரர்) குறிப்பேடுகளில் புதுச்காயல் என்பதாக குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது. ஆதலின் இவ்வூரின் பெயர் பின்னைக்காயல் என்பதாக அக்காலத்தில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். எனவே முன்னை நாளில், அதாவது மார்க்கப்போலர் போந்த காலத்தில், சிறப்புற்றிருந்த காயல், அதை

யடுத்த ஊர்களும்காயலென்ற பெயரேற்று தோன்றிய காரணத் தால் பழையகாயல் எனப்பெயர் கொண்டது. கி. பி. 1544 இல் இயேசு சபையைச் சார்ந்ததூயர் சவேரியார் எழுதிய மடல் ஒன்றில் இவ்வூரை பழையகாயல் (old chael) என்பதாகவேகுறிப்பிடுவதால் கி. பி. பதினும் நூற்ருண்டிற்கு முன்னதாகவே காயல் பழையகாயலென வழங்கப்பட்டது எனலாம்.

ஆதலின், பதின்மூன்றும் நூற்ருண்டில் மார்க்கப்போலர் குறிப்பிடும் காயல்நகர் இன்று பழைய காயலென வழங்கும் சிற்றூர் என்பது தெளிவு. மேலும் கால்டுவெல் பெருமகனும் இவ்வூரில் கிடைத்த புராதன சின்னங்கள் காயல் பட்டினத்திலோ அல்லது புன்னைக் காயலிலோ காணிப்படவில்லையாதலாலும் அச்சின்னங்கள் மார்க்கப்போலர் போன்ற வெளி நாட்டினரின் குறிப்பேடுகளுக்கு ஒத்திருந்த படியாலும் பழைய காயல் என்னும் சிற்றூரே மார்க்கப்போலர் போந்த காயல் நகர் என முடிவு செய்தார்.

**பலழய காயல்:**

பழையகாயல் என்னும் சிற்றூர் தூத்துக்குடி யிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பாதையில் ஏறத்தாழ பத்துக்கல் தொலைவில் உள்ளது. மக்கள் தொகை ஏறத்தாழ ......என மதிப்பிடப் பட்டுள்ளது. விவசாயமும் மீன்பிடித்தலும் அவர்கள் தொழில்.

இவ்வூரில் இன்றும் புராதனச் சின்னங்களைக் காண்பது எளிது. அரேபியா, சீன முதலிய நாடுகளின் சாடிகள் அண்மையில் கண்டெடுக்கப் பட்டன. அவற்றின் உடைந்த பாகங்களையும் பீங்கான் ஓடுகளையும் சூரன்காடு என்னுமிடத்தில் மிகுதியாகக் காணலாம். பழைய நாணயங்கள் கடல்படு கிளிஞ்சல்கள் கிடைக்கின்றன. புராதன கட்டிடங்களின் இடிபாடுகள் காணப் படுகின்றன. ஊரின் நீர்ப்பாசனக் குளக்கரை யில் இரு சமண தீர்த்தங்கரர் படிமங்கள் உள்ளன. சித்திர வேலைப்பாடுகளைக் கொண்ட தூண்களையுடைய பழமையான பெருமாள் கோவில் ஒன்றும் சிவன் கோவில் ஒன்றும் இருக்கிறது. இவற்றின் அருகே முரசு மண்டபம் ஒன்றைக் காணலாம்.

இந்த முரசு மண்டபம், கட்டபொம்மன் ஆட்சியில் திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங் குறிச்சி வரை வழி நெடுகிலும் கட்டப்பட்ட அநேக முரசு மண்டபங்களில் ஒன்ருகும். திருச் செந்தூர் ஆலயத்தில் வழிபாடு நடப்பதை இம் மண்டபங்கள் வரிசையாக முரசொலித்து கடைசி யில் பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள மன்னர் வீடு வரை அறிவிக்கும். மன்னர் அதன்பின்னர் அவ் வூரிலுள்ள தெய்வத்தை வழிபட்டு உணவு அருந் துவது வழக்கமாம்.

பழையகாயலுக்கு வடக்கே சிறிது தூரத்தில் பெருமரம் ஒன்றுள்ளது. இது அரேபியர் காலத் தில் நடப்பட்டதாகக் கருதுகின்றனர். இதன் இலை கைவிரல் போல் (Digits) ஐந்து பிரிவைக் கொண்டிருத்தால் ''ஆடன் சோனியா டிஜிடாடா'' (Adan sonia Digitata) என வழங்கப்படுகிறது. இவ்வகை மரம் ஆப்பிரிக்க தேயத்தில் வளரும் ''பாபோப்'' (Babob) என்ற தாவர இனம் என்றும் அங்கு இதன் பெயர் ''குரங்கின் ரொட்டி'' (Monkey Bread) எனப்படுவதையும் டாக்டர் கால்டுவெல் திருநெல்வேலிச் சரிதை என்னும் நூலில் குறிப்பிடுகிருர். தூத்துக்குடியில் அக் காலத்தில் இருந்த பெருமரம் ஒன்றை அவ்வூர் மக்கள் ''பேரில்லா மரம்'' என அழைத்தனராம்.


முற்காலத்தில் இவ்வூரில் வாழ்ந்த அராபி-யர்களின் வழித்தோன்றல் எனக் கூறப்படும் மூசா என்பவரின் சமாதியைக் கொண்ட மகமதியர் மசூதி ஒன்றும் உள்து.

கி. பி. 1542-ஆம் ஆண்டு தென்னடு வந்து கடலோரப் பகுதிவாழ் பரதவரைக் கத்தோலிக்க மறையில் உறுதிப்படுத்திய தூயர் சவேரியார் (St. Francis Xavier) இவ்வூருக்கு வரும் நாட் களில் தங்கியிருந்ததாக கூறப்படும் இடம் ஒன்று உளது. பழைய காயல் கத்தோலிக்க மக்கள் அவ்விடத்தில் மணிக்கோயில் ஒன்றை அமைத்து அத்திருத்தலத்தை பாதுகாத்து வருகின்றனர்.

**முடிவுரை:**

கொற்கை ஆற்றுப்பெருக்கால் அழிவுற்றது போல் காயல் நகரும் தாம்பிரபரணியின் வெள்ளப் பெருக்கின் விளைவால் அழிந்தது. அந்நாளில் மார்க்கோபோலர் குறிப்பிட்ட "மேன்மை சான்ற பெருநகரமாகிய காயல்" இன்று கடலைவிட்டு மூன்று கல் தொலைவில் விலகிநிற்கும் ஓர் சிற்றூராக காட்சியளிக்கின்றது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை அண்மையில் கொற்கையை அகழ்ந்து ஆய்வு நடத்தியது போல் பழைய காயலையும் ஆராய்ந்தால் கிடைத்தற்கரிய பல வரலாற்றுச் சின்னங்களும் சான்றுகளும் கிடைக்குமென்பது எனது கருத்து.



# நெல்வேலி வென்ற நெடுமாறனின் வைகைக்கரைக் கல்வெட்டு

## பாண்டிய வரலாற்றில் தெளிவு

இரா. நாகசாமி

[பாண்டியர் அரசியல் வரலாற்றில் ஒரு பிரச்சினைக்கு விடைகாணும் கல்வெட்டு ஒன்று 1961ல் வைகைக் கரையில், மதுரையை யடுத்தோர் தலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன்மூலம் பாண்டியர் வரலாற்றில் முந்நூறு ஆண்டுகளில் ஆண்ட பாண்டியர்களது 'ராஜ்ய சம்வச்சர' காலங்கள் தெளிவடைகின்றன. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரிகள் இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் வரையறுத்துக் கூறிய பாண்டியர் ஆட்சிக் காலங்களே இதுவரை மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தன. அதில் சேந்தன்மாறன் நெல்வேலி வென்ற நெடுமாறன் அரிகேசரி என்ற பல பெயர்களால் அறியப்பட்ட பாண்டிய மன்னன் 30 ஆண்டுகள் ஆண்டான் என்று அனுமானிக்கப்பட்டிருந்தது. இக்கல்வெட்டு அவனது ஆட்சியாண்டு ஐம்பதைச் சேர்ந்தது. எனவே அவனது ஆட்சிக்காலத்தை இருபது ஆண்டுகள் நீடிக்க வேண்டும். அவன் செய்த ஹிரண்ய கர்ப்பம் துலாபாரம் முதலிய தானங்களை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. வேள்விக்குடிச் செப்பேடுகள் சேந்தன் மகன் அரிகேசரி, பராங்குச மாறவர்மன், இதே தானங்களைச் செய்ததாகக் குறிப்பிடுகின்றது. இவ்விரண்டும் குறிப்பிடும் அரசன் சேந்தன்மாறன் என்ற ஒருவனே என்பது தெளிவாகிறது.

நெல்வேலி வென்ற பாண்டியன் ஒருவனே கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுவதால், சம்பந்தர் குறிப்பிடும் தமது சமகாலத்தவனான பாண்டிய மன்னன் சேந்தன் மாறனேயாவான். இதனால் சம்பந்தர் காலம் உறுதியான சான்றின் மூலம் வலுப்பெறுகிறது.

மங்களபுரத்தை நகரமாக்கிய செய்திபற்றி, கே. ஜி கிருஷ்ணனது அனுமானத்தை ஆசிரியர் மறுக்கிறார். கிருஷ்ணனது அனுமானத்திற்கு சான்றுகள் அடிப்படையாக அமையவில்லை என்று நாகசாமி கூறுவது தருக்கத்திற்குப் பொருத்தமாகவே உள்ளது. ஆனால் மங்கலபுரம் மங்களூரா என்பதற்கு அவர் சான்றுகாட்டவில்லையே. சான்று 'கலிகடிந்து' என்ற தொடரை ஆராய்வதன் மூலம் கிடைக்கலாம். 'கலி'யரசர், 'கலிகுலம்', இவை களப்பிரரைக் குறிக்கும். சேந்தன் மாறன் அரிகேசரிக்கும், களப்பிரருக்கும் நடந்த போர்களைப் பற்றிய பாண்டிநாட்டில் கிடைக்கும் கல்வெட்டுக்களிலும், மேலக்கடற்கரை மங்களூர், மேலமைசூர் கல்வெட்டுக்களிலும் கிடைக்கும் செய்திகளை இக்கல்வெட்டோடு ஒப்பிட்டு முடிவு கட்ட முடியுமா என்று பார்க்க வேண்டும்.]

நா. வா.

1961-ம் ஆண்டு மதுரையில் வைகைக் கரையில் ஒரு பாண்டியர் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இது வரலாற்றுக்கு இன்றியமையாத புதிய செய்திகளை அளிக்கிறது. இப்பொழுது அக்கல்வெட்டு மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. இதை திரு. கே. ஜி. கிருஷ்ணன் அவர்கள் எபிகிராபியா இண்டிகா, வால்யூம் 38ல் பதிப்பித்துள்ளார். அதில் சில திருத்தங்களுடன் நான் அதை இக்கட்டுரையில் பதிப்பிக்கிறேன்.

கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:-

1. பாண்டிய குல மணி பிரதீபனுய்ப்ராதுர்பாவஞ் செ
2. ய்து விக்ரமங்களாலரை சடக்கி மறங்
3. கெடுத்தறம் பெருக்கி அக்ராஹாரம் பல
4. செய்த பரிமிதமாகிய ஹிரண்ய கர்பகோ
5. ஸஹஸ்ர துலாபாரத்து மஹாதாநங்களாற்
6. கலிகடிந்து மங்கலபுரந்நகரமாக்கி வீ
7. ற்றிருந்து செங்கோனடாவா நின்ற கோச்சே

8. ந்தன் மாறனே ம்பதாவது ராஜ்ய ஸம்வத்ஸர
9. ஞ் செல்லா நிற்க வைகை சொம் மதகு ப
10. டுத்தரிகேஸரியா(னெ)னப் பியரிட்டு காரெடு
11. வித்து காருண்தை இடை அடைத்து
12. ………………… ……

இக்கல்வெட்டின் மன்னன் கோச்சேந்தன் மாறன என்பவனுகும். சேந்தன் மாறன் எனில் சேந்தன் மகன் மாறன் என்பதாகும். இது-காறும் நாம் அறிந்துள்ள பாண்டிய வழியும், அவர்களுக்கு கொடுக் ப்பட்டுள்ள காலங்களும் அதில் இப்பொழுது ஏற்படும் மாற்றங்களும் வருமாறு:

| அரசன் பெயர் | பேராசிரியர் கே. ஏ. என். சாஸ்திரி தென்னிந்திய வரலாறு | இப்பொமுது நான் மாற்றப்பட்டுள்ள காலம். |
|---|---|---|
| கடுங்கோன் | (590 – 620) | (560 – 590) |
| மாறவர்மன் அவனி சூளாமணி | (620 – 645) | (590 – 620) |
| சேந்தன் | (645 – 670) | (620 – 650) |
| அரிகேசரி பராங்குச மாறவர்மன் | **(670 – 700)** | **(650 – 700)** |
| கோச்சடையன் ரணதிரன் | (700 – 730) | (700 – 730) |
| மாறவர்மன் இராஜசிமன் | (730 – 765) | (730 – 765) |
| பராந்தக நெடுஞ்சடையான் 762 (வரகுணன i) | (765 – 815) | (765 – 815) |
| ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லப வரகுணன் ii | (815 – 862) 862 | (815 – 862) 862 |

இங்கு குறிக்கப்பட்டுள்ள அரசர்களில் பராந்தக நெடுஞ்சடையனுடையதும், இரண்டாம் வரகுணனுடையதுமான காலங்கள் நமக்குத் திட்டவட்டமாகத் தெரியும். இவர்களது கல்வெட்டுகள் முறையே கலி வருடத்தையும், சக வருடத்தையும் குறிப்பதால் இதில் ஐயமில்லை. 765க்கு முன்னர் ஆண்ட பாண்டியர்களைப் பற்றித் தெளிவான காலவரையறை இதுவரை தெரியவில்லை. ஒரு குத்துமதிப்பாக கி. பி. 600ல் தொடங்கி இவர்கள் ஆண்டிருக்கக் கூடும் என வரலாற்று ஆசிரியர்கள் குறித்துள்ளனர். இந்த சுமாரான காலவரையறையை பின்பற்றி மற்ற வரலாறுகள் கணிக்கப்பட்டுள்ளன. நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலங்களும் இச்சுமாரான காலவரையைப் பின்பற்றி இவ்வாறு கணிக்கப்பட்டுள்ளன.

வைகைக்கரை கல்வெட்டு பாண்டிய வரலாற்றிற்குப் புதிய செய்திகளை அளித்துள்ளது. முற்காலப் பாண்டியர்கள் தங்களது தந்தை பெயரையும் தன் பெயரையும் சேர்த்து கல்வெட்டில் குறிப்பது மரபு பண்டைபாண்டிய கல்வெட்டுகளில் கோமாறஞ்சடைய (மாறன் மகன் சடையன்), கோச்சடையன் மாறன் (சடையன் மகன் மாறன்) என வருவதைக் காணலாம்.

ஆதலின் அம்மரபை பின்பற்றி இம்மன்னன் **சேந்தன் மாறன்** எனக் குறிப்பிடப்படுகிறுன் முற்காலப் பாண்டியர்களில் சேந்தன் என்று பெயர்பெற்ற மன்னன் ஒருவனே இருந்திருக்கிறன். அவன் கி. பி. 7ம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஆண்டான் என வரலாற்றுசிரியர்கள் கூறுவர். ஆதலின் இச்கல்வெட்டில் மன்னன் மாறன் சேந்தனின் மகனே எனலாம். இவனும் 7-ம் நூற்றுண்டில் ஆண்டிருக்க வேண்டும். இககல்வெட்டின் எழுத்தமைதியும் அக்காலத்ததாகவே உள்ளது.

இதுகாறும் கிடைத்துள்ள செப்பேடுகளிலிருந்து சேந்தனுக்குப்பின் அவன் மகன் ஆண்டான என்று அறிகிறேம். அவனுக்கு அரிகேசரி, அசமசமன், பராங்குசன் என்று வேள்விக்குடி செப்பேடும், சின்னமனூர் செப்பேடும் குறிக்கின்றன.

இக்கல்வெட்டில் மன்னன் வைகையாற்றில் ஒரு மதகு அமைத்தான் என்றும் அதற்கு **அரிகேசரியான்** எனப் பெயரிட்டான் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. தனது புகழ்வாய்ந்த பட்டப்பெயரான அரிகேசரியென்னும் பெயரை மதகுக்கு இட்டிருக்கிறன் எனறு இதிலிருந்து

அறிகிரேம். ஆதலின் இது சேந்தனின் மகனுகிய அரிகேசரி பராங்குச மாறவர்மனின் கல்வெட்டு என்பதில் ஐயமில்லை.

இக்கல்வெட்டில் மற்றுமொரு சிறப்பும் உண்டு இக்கல்வெட்டின் தலைவன் ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம், கோசாஹஸ்ரம் ஆகிய மகாதானங்களால் கலிகடிந்தான் என்று குறிக்கப்பட்டுள்ளது. வேள்விக்குடி, சின்னமனூர் செப்பேடுகளும் சேந்தன்மகன் அரிகேசரி, பராங்குச மாறவர்மன், ஹிரண்யகர்ப்பம், துலாபாரம், கோசாஹஸ்ரம் பல செய்தான் எனக் கூறுகின்றன.

செப்பேடுகளின் வாசகங்கள் பின்வருமாறு.

1. ஹிரண்யகர்ப்பமும், துலாபாரமும் தரணி மிசைப் பல செய்து. [வேள்விக்குடி 60-61]
2. தராசுரரது இடர் அகல தனவர்ஷம் பொழிதற்கு
வலாஹத்தின் விரதங்கொண்டு துலாபாரம் இனிதேறி
சரணியனுயுலகளித்து ஹிரண்யகர்ப்ப மிருகால்புக்கு
கோசஹஸ்ர துடக்கத்துக்கு குருதானம் பல செய்து
வாசவன் போல் வீற்றிருந்தான.
[சின்னமனூர் (சிறிய) செப்பேடுகள். வரி 19-22]

இக்கல்வெட்டும் செப்பேடுகளில் உள்ளதையே கூறுகின்றது. ஆதலின் இம்மன்னன் அரிகேசரி பராங்குச மாறவர்மனே என்பதில் ஐயமில்லை. இவன் ஐம்பது ஆண்டுகள் ஆண்டுள்ளான் என்பது இக்கல்வெட்டுத்தரும் மிகவும் அரிய புதிய செய்தியாகும்.

அரிகேசரி மாறவர்மனுக்கு, கோச்சடையன் இரணதீரன் என்ற மகனும், அவனுக்கு மாறவர்மன இராஜசிம்மனும் பிறந்தனர். இராஜசிம்மனின் மகனே புகழ்பெற்ற பராந்தக நெடுஞ்சடையன் என்றும் வரகுணன் என்றும் பெயர் பெற்றவன். அவன் கி. பி. 765ல் பட்டத்துக்கு வந்திருக்கவேண்டும் என்று மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலைக் கல்வெட்டில் இருந்து தெளிவாக அறிகிரேம்.

வரகுணனின் தந்தை இராஜசிம்மன் மிகவும் புகழ் மிக்கவன். அவனது தந்தை ரணதீரனும் சிறந்த வீரனுகத் திகழ்ந்துள்ளான். ஆதலின் வரகுணனுக்கு முன்னர் ரணதீரனும், அவன் மகன் இராஜசிம்மனும் 65 ஆண்டுகள் ஆண்டனர் (ஒவ்வொரும் முறையே 30, 35 ஆண்டுகள்) என்று கொள்வதில் தவறில்லை. ஆதலின் சேந்தன் மாறனின் ஆட்சி சற்றேறக் குறைய 700ல் முடிந்தது என்பது தெளிவு. அவன் 50 ஆண்டுகள் ஆண்டிருக்கிருன் என்று இக்கல்வெட்டால் அறிகிரேம். ஆதலின் அவன் ஆட்சியின் தொடக்கம் கி. பி. 650 என்பதும் தெளிவு. இவன் 650 முதல் 700 வரை ஆண்டான் என அறிகிரேம். (அவன் 670லிருந்து 700 வரை முப்பது ஆண்டுகள் ஆண்டிருக்கக்கூடும் என இதுகாறும் வரலாற்று ஆசிரியர்கள் கருதினர்.)

அரிகேசரி மாறவர்மனுக்கு முன்னர் சேந்தன், மாறவர்மன் அவனிசூளாமணி, கடுங்கோன் ஆகிய மூவரும் ஆண்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் சுமார் 30 ஆண்டுகள் ஆண்டனர் என்ருல் பாண்டியப்பேரரசு கி. பி. 560ல் தொடங்கியது எனக்கொள்ளலாம். சிம்மவிஷ்ணு பல்லவனும், பாண்டியன் கடுங்கோனும் சமகாலத்தவர் என்றே வரலாற்று ஆசிரியர் கொள்வர். அண்மையில் கிடைத்துள்ள நடுகற்களிலிருந்து சிம்மவிஷ்ணு ஆட்சியும் கி.பி. 560ல் தொடங்கியது என அறிகிரேம். ஆதலின் பாண்டிய பேரரசும் சற்றேறக் குறைய அதே காலத்தே தலை தூக்கியுள்ளது என்பது தெளிவு

765-ல் பட்டத்துக்கு வந்த பராந்தக நெடுஞ்சடையனுக்குப் பின்வந்த பாண்டியர்களைப்பற்றி முன்னரே வரலாற்றுசிரியர்கள் தெளிவாகக் குறித்துள்ளனர். ஆனுல் அவனுக்கு முன்னர் ஆண்ட அரசர்களின் காலவரையறை இதுவரை தெளிவாகஇல்லை. இக்கல்வெட்டு அவ்வரலாற்றைத் தெளிவாக்குவது மிகவும் இன்றியமையாத செய்தியாகும். ஆதலின் இக்கல்வெட்டின் அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்ட பாண்டிய அரசர்களின் காலத்தை முன்னரே குறித்துள்ள பட்டியலில் காணலாம்.

இக்கல்வெட்டால் இன்னும் சிலவரலாற்று நிகழ்ச்சிகளும் தெளிவாகின்றன. இம்மன்னன் மங்கலபுரம் என்ற இடத்தை நகரமாக்கினுன் என இக்கல்வெட்டுக் கூறுகிறது. இதுராம

நாதபுரம் மாவட்டம், சாத்தூரில் அருகிலுள்ள மங்கலம் என கிருஷ்ணன் கருதுகிறார். அரிகேசரியின் மகன் ரணதீரன் மங்கலபுரத்தில் மகாரதரை வென்றான் என்று வேள்விக்குடி செப்பேடு கூறுகிறது. இது மேலைக் கடற்கரையில் உள்ள மங்களூர் என்றும் மகாரதர் சாளுக்கியராக இருக்க வேண்டும் என்றும் பேராசிரியர் நீலகண்டசாஸ்திரியார் கருதுகிறார். ஆனால் திரு கிருஷ்ணன் "மங்கலபுரம் மங்களூர் அல்ல; பாண்டிய நாட்டில் உள்ள மங்கலமாகத்தான் இருக்கவேண்டும்; கி. பி. 674ல் சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தன் காவிரியாற்றங்கரைவரை படையெடுத்து வந்தான். அப்படையெடுப்பின்போது மங்கலத்தை அவன் தாக்கியிருக்க வேண்டும். அம்மங்கலத்தை ரணதீரன் மீட்டதையே குறிக்கிறான்" என்று கருதுகிறார். ஆனால் இக்கல்வெட்டிலிருந்து அக்கருத்து ஏற்றுக்கொள்ள முடியாது என்பது தெளிவு. ரணதீரன் சற்றேறக்குறைய கி. பி. 700ல் தான் பட்டத்துக்கு வந்தான். அவன் 25 ஆண்டுகளுக்கும் முன்னரே 674ல் நடந்த போரைக் குறிக்கிறான் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. இரண்டாவதாக விக்கிரமாதித்தன் திருச்சிவரை வந்தானே ஒழிய மதுரையையும் கடந்தே தெற்கே சாத்தூர் மங்கலத்தைத் தாக்கினான் என்றுகூற சான்றுகள் ஏதுமில்லை. மூன்றாவதாக மங்களூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆலுபர்கள் ஆண்டனர். அவர்கள் தாங்கள் பாண்டிய குலத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். ஆதலின் ரணதீரன் வென்ற மங்கலபுரம் மங்களூரே என்பது எமது கருத்து. அரிகேசரி மாறவர்மன் தோற்றுவித்த மங்கலபுரம் பாண்டிய நாட்டில் இருந்தது எனக் கொள்ளலாம். ஆனால் அது எது என்பது ஆராய்ச்சிக்குரிய ஒன்றாகும்.

பாண்டிக்கோவை என்ற தமிழ்க்கோவை புகழ்பெற்றது. அதில் அரிகேசரி, பராங்குச, மாறவர்மன் என்பவன் பாடப்பட்டுள்ளான். அவனடைந்த பல வெற்றிகள் அதில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிறந்தது நெல்வேலி வெற்றி. அதில் அவன் நெல்வேலி வென்ற நெடுந்தகை எனப் பாடப்படுகிறான். பலமுறை கேரளனை வென்றான் என்றும், பாழி, தெந்நிலம், புலிப்பை என்னும் இடங்களில் வெற்றிகண்டான் என்றும் பாண்டிக்கோவை கூறுகிறது. வேள்விக்குடி சின்னமனூர் செப்பேடுகளும், அரிகேசரி மேற்குறித்த இடங்களில் வென்றான் என்று குறிக்கின்றன.

"சூழியானைப் பலவுந்தி பாழி வாயமர் கடந்தும், வில்வேலி கடற்றானையை நெல்வேலிச் செருவென்றும், கைந்நலத்த களிறுந்தி செந்நிலத்து செருவென்றும், பாராளவுந்தனிச் செங்கோற் கேரளனைப் பலமுறையும், உரிமைச் சுற்றமோடவர் யானையும் புரிசைமதிற் புலியூர்ப் பகலுழிகை இறவாமை இகலாழி உள்வென்று கொண்டும் ........... நெடுமுடி அடிகேசரி" - [வேள்விக்குடி செப்பேடுகள்].

வில்லவனை நெல்வேலியுட் விரிபொழிற் சங்கரமங்கைப் பல்லவனை உம் புறங்கண்ட பராங்குசன். சின்னமனூர் (பெரிய) வரி - 104, 105.

இவற்றிலிருந்து பாண்டிக்கோவையின் பாட்டுடைத் தலைவனே செப்பேடுகளில் குறிக்கப்படும் அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்பதும், அவனே வைகைக் கல்வெட்டின் அரசனான சேந்தன் மாறன் என்பதும் ஐயமில்லை. (செப்பேடுகளில் அரிகேசரி பராங்குசன் என்று பட்டம் கொண்ட மன்னன் ஒரே ஒருவன் தான் உள்ளான். அவன் சேந்தன் மாறனே).

சைவ நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் நெல்வேலி வென்ற நெடுமாறனின் சமகாலத்தவர் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகும். இதுகாறும் "நின்றசீர் நெடுமாறன் காலத்தால் (670—700) பிற்பட்டவன். அவன் காலத்தில் சம்பந்தர் இருந்திருக்கவேண்டும். அவரது சமகாலத்தவரான சிறுத்தொண்டரும் காலத்தால் பிற்பட்டிருக்க வேண்டும். சிறுத்தொண்டர் வாதாபி வெற்றி கண்டவர். அது கி.பி. 674ல் நடந்ததாகத்தான் இருக்கவேண்டும்" என்று சிலர் எழுதியுள்ளனர். இன்னும் சிலர் "தேர்மாறன் (730-லிருந்து 765-வரை ஆண்டவன்) காலத்தில் சம்பந்தர் வாழ்ந்திருக்க வேண்டும். அவனே நெடுமாறன். அவனே அரிகேசரி" என்றெல்லாம் சில ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அவை அனைத்துக்கும் இக்கல்வெட்டு முற்றுப்புள்ளி வைக்கிறது. செப்பேடுகளில் ஒரே ஒருவனுக்குத்

தான் அரிகேசரி என்ற பட்டம் உள்ளது. ஒரே ஒருவன்தான் நெல்வேலி வென்ருன் எனக் குறிப்பும் உள்ளது. அவன் சேந்தன் மகன் மாறனே. அவன் 650ல் பட்டத்துக்கு வந்தான் என்பது இப்பொழுது தெளிவு. ஆதலின் அவன் சமகாலத்தவரே சம்பந்தர். அவர் சற்றேறக் குறைய 640ல் பிறந்திருக்க வேண்டும். 656 வரை வாழ்ந்திருக்கிருர்.

இவற்றிலிருந்து மேலும் சில செய்திகளும் உறுதிப்படுகின்றன. அவை முழுவதையும் இங்கு விரிப்பதற்கில்லை. முடிவை மட்டும் கூறிச் செல்கிறேன். அப்பர் பெருமான் மகேந்திரனின் காலத்தவரே. அவரது காலம் சற்றேறக் குறைய கி. பி 580-660. ஆழ்வார் களில் பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலைப் பதிகத்தில் தென்னவன் கோ நெடுமாறனைக் குறிக்கிருர். அம்மன்னன் அரிகேசரியாக இருக்கக்கூடும். பெரியாழ்வார் 7-ம் நூற்ருண்டின் இறுதியிலும், 8ம் நூற்ருண்டின்தொடக்கத்திலும் வாழ்ந்தவர். ஆண்டாளும் அதே காலத்தவர். திருமங்கை மன்னன், பல்லவ மன்னன்பாண்டிய ரோடு நடத்திய போர்களைத் தனது பரமேச்சுர விண்ணகர பதிகத்தில் பாடுகிர். அவற்றில் மண்ணை வெற்றியும், கருவூர் வெற்றியும் குறிக்கப்படுகின்றன. மண்ணைக்குடிப் போர் 750ல் பாண்டியன் இராஜசிம்மனுடன் நடந்தது. கருவூர்ப்போர் அவன் மகன் நெடுஞ்சடைய-னுடன் நடந்தது. ஆதலின் திருமங்கை சற் றேறக்குறைய 730லிருந்து 800வரை வாழ்ந்தவர் எனலாம்.

இது போன்று தமிழக வரலாற்றுக்கு இன் றியமையாத செய்திகளைத் தெரிவிக்க உதவும் சேந்தன் மாறன் கல்வெட்டு வரலாற்றுச் சிறப் புடைய கல்வெட்டாகும்.

———

## பின் குறிப்பு

கல்வெட்டு கிரந்த எழுத்திலும், வட்டெழுத் திலுமாக உள்ளது. திரு கிருஷ்ணன் அவர்கள் படித்துள்ளதற்கும், நான் படித்துள்ளதற்கும் சிறு வேறுபாடுகள் உள்ளன. வேறுபாடுகள் கீழே குறிக்கப்பட்டுள்ளன.

| வரி | எனது | கிருஷ்ணன் |
|---|---|---|
| 7 | நடாவா | நடாவி |
| 8 | மாறன் | மற்றை |
| 9 | சொம் | சொன் |
| 11 | இடை | ஒடை |

ஏழாவது வரியில் செங்கோ நடாவி நின்ற என்று திரு. கிருஷ்ணன் அவர்கள் படித்துள்ளதை நான் செங்கோ நடாவா நின்ற என்று படிக் கிறேன். இது நிகழ்காலத்தைக் குறிக்கிறது. ஒன்பதாவது வரியில் சொம் மதகு என்று நான் படிக்கிறேன். சீரான மதகு என்பது சொம் என்பதின் பொருள்.


திரு. கிருஷ்ணன் அவர்கள் 7, 8, 9-வது வரிகளில் "கோச்சேந்தன் மாறனைம்பதாவது ராஜ்ய சம்வத்சரம் செல்லா நிற்க" என்று படித் துள்ளார். ஆதலின் இக்கல்வெட்டு பாண்டிய மன்னன் சேந்தனுடையது என்றும், சேந்தன் ஐம்பது ஆண்டுகள் ஆண்டான் என்றும் குறித் துள்ளார். இம்மன்னன் வைகை ஆற்றுக்கு ஒரு மதகு கட்டுவித்து அதற்கு அரிகேசரி என பெயரிட்டான் என்று இக்கல்வெட்டு கூறுகிறது. அரிகேசரி என்பது சேந்தன் மகனை நெடு மாறனின் பட்டப்பெயராகும். ஆதலின் திரு. கிருஷ்ணன் அவர்கள் பாண்டிய மன்னன் சேந்தன் வைகையில் மதகு கட்டுவித்து அதற்கு தன் மகன் அரிகேசரியின் பெயரை இட்டிருக்க வேண்டும் என்றும் குறித்துள்ளார். மேலும் இக்கல்வெட்டின் மன்னன் பல ஹிரண்யகர்ப்பம் துலாபாரம், கோஸஹஸ்ரம் ஆகிய தானங்களை செய்தான் என இக்கல்வெட்டு கூறுகிறது. ஆதலின் சேந்தன் இத்தானங்களையும் செய்தான் என்று திரு. கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

திரு. கிருஷ்ணன் அவர்கள் சேந்தனுல் தோற்றுவிக்கப்பட்ட மங்கலபுரம், ராமநாதபுரம் வட்டம், சாத்தூருக்கு அருகில் இருக்கும் மங்கலமாக இருக்கக்கூடும் என்று கருதுகிருர். கி. பி. 674-ல் சாளுக்கிய மன்னன் விக்கிர மாதித்தன் தனது தென்னுட்டு படையெடுப்பின் போது இம்மங்கலபுரத்தைத் தாக்கியிருக்கக் கூடும் என்றும், அப்போது நடந்த சண்டையில் ரணதீரன் அம்மன்னனைத் தோற்கடித்திருக்க

வேண்டும் என்றும், சாளுக்கியர்களே மகாரதர்கள் என்றும் குறித்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்.

ஆனால் கல்வெட்டை நான் ஆய்ந்தபோது கோச்சேந்தன் மற்றைம்பது என்பது சரியல்ல. ஆனால் கோச்சேந்தன் மாறன் ஐம்பது என்று உள்ளது என்றே கருதுகிறேன். சேந்தன் மகன் மாறன் என்பது இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதால் இது சேந்தனுடைய கல்வெட்டு அல்ல, சேந்தன் மகன் மாறனுடைய கல்வெட்டு என்பதாகும். ஆதலின் சேந்தன் மகன் மாறன் ஐம்பது ஆண்டுகள் ஆண்டிருக்கிறான் என்பது தெளிவு. இவ்வாறு சேந்தன் மாறன் என்று படிப்பதற்கு உரிய காரணங்கள் பின் வருமாறு.

'ம' என்ற வடிவின் மேலே 'ஆ' வைக் குறிக்கும் கோடு இக்கல்வெட்டில் தெளிவாகக் காணப்படுகிறது. அது இணைத்து எழுதப்படவில்லை. சற்று மேலே எழுதப்பட்டுள்ளது. ஆதலின் இதை 'மா' என்று படித்தல்வேண்டும். ஆயினும் திரு கிருஷ்ணன் அவர்கள் மேலே உள்ள "ஆ" குறியிடு இணைந்து எழுதப்படவில்லை ஆதலின் அக்குறியீட்டை நாம் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை என்று கருதியுள்ளார். குறியீடு இருப்பதனால் அதை விட்டுவிடாமல் அதை நான் 'மா' என்றே எடுத்துக் கொள்கிறேன். இரண்டாவது எழுத்து 'னை' என்ற வடிவமாகும். திரு. கிருஷ்ணன் அவர்கள் இதை 'றை' என்று எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆதலின் அந்த சொல்லை நான் மாறனைம்பது என்று படித்துள்ளேன். திரு. கிருஷ்ணன் அவர்கள் மற்றைம்பது என்று படிக்கிறார். இவ்வெழுத்துக்களின் வடிவங்களும் ஏன் இவ்வாறு படிக்கவேண்டும் என்று இணைத்துள்ள படத்தில் காணவும்.



# சகேதி காட்சித் தோட்டம்.

**20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த பாலூட்டி விலங்குகளின் எலும்புக்கூடுகள் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.**

இமாசலப் பிரதேசத்தில். சகேதி என்ற இடத்தில் உலகிலேயே புதுமையானதோர் காட்சித் தோட்டம் (பார்க்) அமைக்கப்பட்டு வருகிறது. இவ்விடம் சண்டிகார் நகருக்கு 65 கி. மீ. தூரத்தில் உள்ளது. இதனை அமைக்கும் நிறுவனம் இந்தியத் தரைஇயல் ஆய்வுக் கழகமாகும் (Geological Survey of India) இத் தோட்டத்தில் வரலாற்று பாலூட்டி விலங்குகளின் எலும்புக்கூடுகள் புத்தமைக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்விலங்குகள் இமாலய மலைத்தொடரின் அடிவாரத்தில் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவை.

சகேதி என்ற இடத்தில் தற்பொழுது காட்சித் தோட்டம் இருக்கும் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் இவ்விலங்குகள், அவை உயிர் வாழ்ந்த காலத்தில் தங்கியிருந்தன. அவற்றின் பரம்பரைகள் இப்பொழுது அவை போன்று இல்லை. மறைந்து போய்விட்ட இவ்விலங்கினங்களின் எலும்புக்கூடுகளை பாறைகளின் நடுவே பி. ஸி. வர்மா என்ற தரையியல் ஆய்வாளர் கண்டு பிடித்தார்.

படிவுப் பாறைகளில், முதுகெலும்புடைய பண்டைய விலங்குகளின் எலும்புகளின் கல்லிடைச்சின்னங்கள் (fossils) காணப்பட்டன. இவை தற்கால விலங்குகளின் நேரடியாக முந்திய பரம்பரையாதும். இவற்றுள் ஒரு விலங்கு 13 அடி உயரமுள்ள யானை போன்றதோர் விலங்காகும். இதற்கு ஸ்டெகொடான் யானை என்பது பெயர். மற்றோர் விலங்கு வாள் போன்ற பல்லுடைய புலி, இதற்கு வாயினுள்ளிருந்து 6 அங்குலநீளம் பல் வெளியே தோன்றும்.

இந்தக் காட்சித்தோட்டம் பல அம்சங்களில் அபூர்வமானது. எலும்புக்கூட்டின் படிவுகளை பாறை நடுவிலுள்ள சின்னங்களில் கண்டு, அதனளவில் இழைக் கண்ணாடியாலும், ரெஸினாலும் உருவாக்கப்பட்டுள்ள மாடல்கள் அவை.

இவ்விடத்தில் சிவாலிக் விலங்குகளையும் தாவரங்களையும் ஆராய்வதற்குரிய ஒரு காட்சி சாலை நிறுவப்படும். இத்தோட்டத்திற்கு 'இந்திரா காந்தி தேசீயக் காட்சித் தோட்டம்' என்று பெயர் வைத்துள்ளார்கள்.

இங்கே முதல் கட்ட வேலைகள் முடிந்து விட்டன. ஸ்டெகான் யானை, வாட்பல் புலி, வெட்டும் பற்களுடைய நீர் யானை, முதலியவற்றோடு ஒரு கடல் ஆமையின் மாடலும் உள்ளது. இதன் நீளம் 11 அடி. இவ்வாமை இமாலய மலைத் தொடரின் அடிவாரத்தில் சிவாலிக் ஏரிகளில் வாழ்ந்தது.

இவை போன்ற மூன்று (Fossil parks) கல்லிடைச்சின்ன விலங்கு காட்சித் தோட்டங்கள் அமைக்கப்படும். அவை இமாச்சல் ராஜ்யத்திலுள்ள சிர்மூர் மாவட்டத்தில் தோகாவிலும், பிலாஸ்பூர் மாவட்டத்திலுள்ள ஹரிதாஸ் யாங்கரிலும், அம்பாலா மாவட்டத்தில் உள்ள மஸூம் பூரிலும் அமைக்கப்படும்.

இவை தவிர ஆந்திராவில் உள்ள எம்மன பள்ளி என்ற ஊரின் அருகே, பண்டைய விலங்குகளில் பூதாகாரமான அளவுடைய டினோஸார் என்ற விலங்குக்காட்சிக் கூடம் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

மேற்கூறியவை போன்ற இரு காட்சித் தோட்டங்களை காஷ்மீர் அரசு அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

ஸகேதியில் கள - ஆய்வுகளுக்காக (field observation) பண்டைய விலங்கு எச்சங்களின் கருவூலமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இவை அகழ்ந்தெடுக்கப்படும் விலங்கு - எலும்பு களேயும், பாறை இடைச்சின்னங்களேயும், கல்லிடைச்சின்னங்களேயும் பாதுகாத்து வைக்கும்.

கல்லிடைச்சின்னங்களேப் பாதுகாக்க வேறு சில தலங்களேயும் இந்திய ஜியாலாஜிகல் ஸர்வே நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது. பாம்பேயில் வோர்லி குன்றுகளில் உள்ள 'தவணைத்தலங்கள், ஸெவானிலுள்ள கல்லிடைச்சின்னங்கள் உள்ள தலங்கள், காஷ்மீரிலுள்ள 'ப்ரென்ஸ்பர்ஸ்' என்ற தலம் ஆகியவை இவை. பண்டைய காலத்திலிருந்த ஒருகாடு மத்யப்பிரதேசத்தில் புதைந்துள்ளது. தார் காடு (Dhar) என்ற அத்தலத்திலும் பண்டையத் தாவரங்களின் மாடல்கள் கொண்டதோர் காட்சிக்காட்டை நிறுவும் யோசனேயுள்ளது.

தமிழ் காக்கப் பிறந்த அரசுர், தமிழுக்காகவே உயிரைப் பிடித்துக்கொண்டிருக்கும் வாய்வீச்சு வீரர்களும், உலகில் எல்லாமே முதலில் தமிழக மண்ணில்தான் தோன்றியது என்று தமிழகத்திற்குள் பறையறைந்து முழங்கு கிருர்களே, அவர்கள் இங்கே ஜியலாஜிகல் ஸர்வே ஆய்வாளர்களேக் கேட்டு, காஷ்மீர், ஆந்திரநாடு, இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரம் மத்யப்பிரதேசம் போல, தமிழ் நாட்டு பண்டைய விலங்குகளே ஆராய சகேதித் தோட்டங்களே நிறுவ முன் வருவார்களா?

தமிழ் மனிதனது வரலாறே தேவையில்லே. புறநானூற்றில் இருக்கிறது என்று பேசுகிறவர்கள், தமிழ் நாட்டுப் பண்டைய விலங்குகள், அதாவது 20 லட்சம் ஆண்டிலிருந்து 10 லட்சம் ஆண்டுகள் வரை வாழ்ந்த விலங்குகளேத் தோண்டியெடுத்து ஆராய்வதற்கு ஆர்வமும், அறிவுத்தேட்டமும் உடையவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாதுதான்.

ஆயினும் இவர்களே நம்பியே தமிழக மனித வரலாறும், விலங்கு வரலாறும் இருத்தல் முடியுமா? விலங்கியல் ஆய்வுகள், மானிடவியல் ஆய்வுகளே வளர்க்கும் படியான திட்டங்களே உருவாக்க ஆய்வாளர்களேதான் அரசினே வற்புறுத்தவேண்டும்.

நா. வானமாமலே

-----

# பாமீர் மலைமீது இந்தியாவோடு வாணிபத் தொடர்புடைய பண்டைய நகரம்

மத்திய ஆசியாவிலுள்ள பாமீர் மலையின் மேல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஒரு நகரம் சோவியத் தொல்பொருள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நகரம் 800 ஆண்டுகளாக மறக்கப்பட்டிருந்தது. இது பாமீர் மலையில் 13,000 அடி உயரத்தில் இருந்தது.

இந்நகரம் இருந்த தலத்தில் இந்திய மையினால் எழுதப்பட்ட பல கையெழுத்துப் பிரதிகள் கிடைத்துள்ளன. அவை பண்டைய தாஜிக் மொழியில் எழுதப்பட்டுள்ளன. அவை வாணிபப் பத்திரங்களாகவும், அரசாங்கத் தூதுவர்களின் குறிப்புகளாகவும் உள்ளன.

இந்நகரம் 10ம் நூற்றுண்டில் நிறுவப்பட்டிருக்கவேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகிறுர்கள். இங்கு வெள்ளிச்சுரங்கங்கள் இருந்தன. அவற்றிலிருந்து வெள்ளித்தாதினை அகழ்ந்தெடுப்பவர்கள் வசிப்பதற்காக இந்நகரம் தோற்றுவிக்கப்பட்டிருக்கவேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வெள்ளிச் சுரங்கங்கள் தூர்ந்துபோனபின்னர் இந்நகரமும் காலி செய்யப்பட்டிருக்கவேண்டும். இந்நகரின் ஆயுட்காலம் இருநூறு ஆண்டுகளே. இந்நகரம் இந்தியா, ஆப்கானிஸ்தானம், இரான் முதலிய நாடுகளோடு வாணிபம் செய்து வந்தது என்று கருதுவதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. இச்செய்தியை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் செய்தி நிறுவனமான A. D. N. வெளியிட்டுள்ளது.

— நா. வா.

# 4000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த ஹாரப்பா நகரம்

ஹாரப்பா என்ற நகர நாகரித்தைப் பற்றி ஆங்கில ஆய்வாளர் கன்னிங்ஹாம் அறிந்திருந் தார். ஆனல் அதனை அலெக்ஸாண்டர் படையெடுப்பின் போது அழிந்ததாகக் கருதினர். ஆனல் அவருடைய காலத்திலேயே கிரேக்கப் படையெடுப்பிற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே விளங்கியிருந்த ஒரு நாகரிகம் புதையுண்டு கிடந்ததை அவர் அறியவில்லை.

1920இல் மஜும்தார் மோகன்ஜதாரோவை கண்டுபிடித்தார். அப்பொழுது இந்திய வரலாற்றின் பழமையை காலப்போககில் பல நூற்ருண்டுகள் பின்னேக்கி நகர்த்தவேண்டியிருந்தது. சுமேரிய, எகிப்திய நாகரிகங்களே இந்திய நாகரித்தை விடப்பழமையானது என்ற கருத்துஅப்பொழுது வரலாற்ரு சிரியர்களிடையே நிலவியிருந்தது. மோகன்ஜதரோ கண்டுபிடிக்கப்பட்டபின், அவற்றையொத்த பழமை இந்திய நாகரிகத்திற்கும் உண்டு என்ற உண்மை அறியப்பட்டது. இந்தியாவின் ஒரு சிறு பகுதி 'டாரியஸ்' என்ற பெர்ஸிய அரசரின் ஆட்சியின்கிழ் இருந்ததால், அதனையே இந்தியா என்று பண்டைய எகிப்தியர்களும், சுமேரியர்களும் கிரேக்கர்களும் கருதியிருந்தனர். ஹாரப்பா கண்டுபிடிக்கப்பட்டபின், பல ஆண்டுகளுக்குப் பின், ராஜஸ்தானில் 'காலிபங்கன்' என்ற தலம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அதன் பின்னர் குஜராத்தில் 'லோதால்' கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொழுது (1973ல்) பானவாலி (Banawali) என்ற வரலாற்றுக்கு முக்கியமான ஒரு ஹாரப்பா நாகரிகத்தலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. காலிபங்கன், லோதால் போலவே இதுவும் பல முக்கியமான வரலாற்றுச் சான்றுகளை அளித்துள்ளது. ஹாரப்பாவிலிருந்து தெற்கே நர்மதை வரையிலும், கிழக்கே ஆலம்கீர் (உ. பி.) வரையிலும் ஹாரப்பா நாகரிகம் பரவியிருந்ததென்பதை அகழ்வாய்வுகள் காட்டுகின்றன. பல்வகை வாழ்க்கை வசதிகளோடு பல ஹாரப்ப நகரங்கள் இருந்ததென்பதை ஆய்வுகள் நிறுவுகின்றன. பானவாலியின் காலம் 3700 ஆண்டுகளுக்கு முன்னர் என்று ஆய்வாளர்கள் கருதுகிருர்கள். அதற்குமுன்னர் இருந்த நகரங்களைப்பார்க்கிலும் பல வசதிகளின் வளர்ச்சியை இந்நகரத்தில் காணக்கூடும். இப்பொழுதே நல்ல ரஸ்தாக்கள், செங்கல் — காரை விடுகள்முதலியன அகழ்ந்து காட்டப்பட்டுள்ளன. அங்கு ஒரு பாதுகாப்பு அரண் இருந்தது. அப்பொழுதே போரும், போர் கருவிகளும், படைகளும் இருந்திருக்க வேண்டும்.

— நா. வா.

---

## நாட்டுப்பாடல்

# தாலாட்டு

அறிமுகவுரை :

தூத்துக்குடிக் கடற்கரைப் பகுதியில் கத்தோலிக்க மக்களிடையே வழங்கும் நாட்டுப் பாடல் இது. இப்பாடல்களில், அம்மக்கள் சமயம் மாறுமுன் வழிபட்ட தெய்வங்களின் பெயரும், அவற்றை குருமார் மாற்றியமைத்த பெயரும் காணப்படும். இவர்கள் மீன்பிடிக்கும் தொழில்புரிபவர்கள். இவர்கள் கற்பனையில் தம்மை நாழியில் முத்தளப்பர்களாகவும் சாஞ்சு கணக்கெழுதுவோர்களாகவும் காண்கின்றனர். தமிழக சமுதாயத்தில் குருமார், வாணிபர், கணக்கெழுதுவோர் முதலிய உடலுழைப்பில் ஈடுபடாதவர்களுக்கு இருக்கும் சமூக அந்தஸ்து மீன்பிடிப்பவர், படகோட்டுவோர், வண்டிக்காரன், உழுபவர், கைத்தொழில் செய்யும் கருமார், கொத்தர் முதலியோருக்கு இருக்கவில்லை. அதாவது உழைப்பவர்கள் குறைந்த அந்தஸ்தும், உழைக்காமல், பரிவர்த்தனை, பூசனை முதலிய வேலைகளில் ஈடுபடுவோர் உயர்ந்த அந்தஸ்தும் பெறுகிறார்கள். எனவே தங்களது உண்மையான அந்தஸ்தை கற்பனையிலாவது மாற்றிக்கொள்ள எண்ணித் தாய்மார்கள், தம் குழந்தையின் தகப்பனையும், மாமனையும் அந்தஸ்து மேம்பட்ட தொழில்புரிபவராகப் பாடுவார்கள்.

1 காட்டக்[1] கலச்சி[2] கண்ணே நீ
கடிநாயை ஏவல் செய்து[3]
வேட்டைக்கோ போராகோ[4]
எங்கண்ணே நீ
வீரதூரர் உங்கள் ஐயா

2 கடலுக்கு அங்கே எங்கண்ணே நீ
கண்ணம்மாள்[5] கோயிலிலே
பூவெடுத்துப் பூசைசெய்யும்
எங்கண்ணே நீ
புண்ணியரோ[6] உங்கள் ஐயா

3 அஞ்சுபடிக் கிணறு எங்கண்ணே நீ
அளிறங்கா கானகத்தில்
அஞ்சாமல் பூவெடுக்கும்
எங்கண்ணே நீ
அருச்சுனரோ உங்கள் ஐயா

4 கடலுக்கு அங்கே எங்கண்ணே நீ
கண்ணாடி தென்ன மரம்[7]
முடிக்குத் தெருவுல எங்கண்ணே நீ
முதலிமார் திண்ணையிலே[8]
சாஞ்சி கணக்கெழும் எங்கண்ணே நீ
தருமரோ[9] உங்கள் ஐயா

5 முத்தளக்கும் நாளி[10], எங்கண்ணே நீ
முதலளக்கும் பொன்னாளி[10]
வச்சளக்கச் சொல்லி வரிசை
யிட்டார் தாய்மாமன்

6 கோவில் மணிதட்ட[11] எங்கண்ணே நீ
குருக்கள்[12] மார் பூசைவைக்க
மாதா மணிதட்ட எங்கண்ணே நீ
மந்திரி[13] மார் பூசைவைக்க

7 கடலை தயிராக்கி என்கண்ணேஉன்
கண்ணீரை முத்தாக்கி
நிலவப் பொழுதாக்கி எங்களுக்கு
நின்னுதவும் மாதாவே[14]

**பாடல் சேகரிப்பு விவரங்கள்:**

**பாடிக்காட்டியவர்:** மி. அந்தோனி தேவசகாயம்

**இடம் தருவைக்குளம்:-** தூத்துக்குடி அருகில் உள்ள பெரியஊர். கடற்கரையிலிருந்து 3 மைல் தூரத்தில் உள்ளது. இப்பாடல் கடற்கரைப் பரத வரினடயே வழங்குகிறது. இது போன்ற பாடல்களை வெளியிடவேண்டுமென நெல்லை நாட்டுப்பாடல் ஆய்வுக்குழு உறுப்பினர் திரு. ஆ. சிவசுப்பிரமணியம் வேண்டுகோளுக்கு இணங்க மைக்கேல சமியார் அவர்கள், ஞான தூதனில் ஒரு விளம்பரம் வெளியிட்டு, அதற் கேற்ப அனுப்பப்பட்ட பாடல்களை வெளியிட் டார்கள். இப்பாடல் அதற்குமுன்னரே சேக ரிக்கப்பட்டது.

சேகரித்தவர் — பாடக்கேட்டு எழுதியவர். நெல்லை நாட்டுபாடல் ஆய்வுக்குழு உறுப்பினர் உ. மீனுட்சிசுந்தரம், எம். ஏ.

**குறிப்புரை:**

1 காட்ட — காட்டை (பா. பே வ)

2 கலச்சி — கலைத்து (பா. பே. வ)

3 ஏவல் செய்து — ஏவவிட்டு (பொருளே மூல மாகவும் உள்ள பாடல்கள் உள்ளன)

4 போராகோ — போகிருர்கள் (சிவகிரி, சங்கரன்கோவில், கோவில்பட்டி தெற்கு, தூத்துக்குடி பேச்சுவழக்கு)

5 கண்ணம்மாள் — இக்கோயில் இந்துதெய் வகத் தோன்றுகிறது. மீனுட்சி, (கண்ணம்மாள்) கயற்கண்ணி, கடலன்னை முதலியன கிறித்தவ சமயத்தை தழுவு வதற்கு முன்பு அவர்கள் வணங்கிய தெய்வமாயிருக்கலாம். ஏனெனில் கத் தோலிக்க கோயில்களில் மணமாகாத பாதிரியார்களே பூசை செய்வர். எனவே குழந்தையின் தந்தை பூசைசெய்வதாயிருந் தால் அத்தெய்வம் பழமையின் எச்சமான தோர் தெய்வமாகவே இருந்திருக்க வேண்டும்.

6 புண்ணியர் — பூசை செய்து புண்ணியம் பெற்ற குழந்தையின் தந்தை.

7 கண்ணுடி தென்னமரம் — இது கடலுக்கப் பால் தங்கள் உறவினர் படகோட்டிச் செல்லும் தீவுகளிலும் நாடுகளிலும் உள்ள குள்ளமான தென்னை மரங்களையுக் குறிப்பிடும். ஆனல் படகோட்டும் தொழில் கூற விருப்பமின்றி "சாஞ்சி கணக்கெழுதும் தருமர்' என்று தனது மகனின் தந்தையை வருணிக்கிருள்.

8 முதலி - மூப்பன், சாதித் தலைவர், முதல்வர். இது சாதியைக் குறிப்பிடவில்லை. தம் சாதி பணக்கார வியாபாரிகளைக் குறிப் பிடும்.

9 தருமர் — சாந்தகுணம் உடையவர். வள்ளல்.

10 நாளி — நாழி (பா. பே. வ.) நெல்லை மா வட்ட முழுவதும் 'ழ' — ளவென்றே உச்ச ரிக்கப்படும்.

11 மணிதட்ட — பூசைக்காக கத்தோலிக்கக் கோவில் மணி அடிக்கிறது.

12 குருக்கள்மார் — சாமிமார். கத்தோலிக்கப் பாதிரியார்.

13 மந்திரிமார் — குருக்களுக்கு உதவுபவராக இருக்கலாம்.

14 மாதாவே — கன்னிமரியாளைப் பலவித மாகப் பெயர்கூறி கத்தோலிக்கர் அழைப் பர். மரியாளின் பல மூர்த்தங்களுக்கும் வெவ்வேறு தோற்றக் கதைகளுள்ளன.

7வது பாடலில் மதிப்புக் குறைந்த கடல் நீரை — மதிப்பு மிக்க உண்ணும் பொருளான தயிராக்கவும், குழந்தையின் கண்ணிரை முத் தாக்கவும், நிலவைப் பொழுதாக்கவும் மாதா வைப் பிரார்த்திக்கிருள். 'நிலவைப் பொழுதாக்க' என்பதன் பொருள் விளங்கவில்லை. நிலவை — விலையுயர்ந்த ஒன்ருக மாற்றவேண்டும் என் பதே கருத்தாக இருக்கமுடியும். வேறு பாட பேதங்கள் கிடைக்கவில்லை.

நா. வானமாமலை

# நூலாய்வு மதிப்புரை

ஆராய்ச்சி முதல் இதழ் வெளியிட்ட நாளிலிருந்து நூலாய்வுக் கட்டுரைகளும், மதிப்புரைகளும் கொண்ட ஒரு திறனய்வுப் பகுதியை தொடங்க வேண்டுமென எண்ணி வந்தேன். பல நூல்கள் மதிப்புரைக்காக பதிப்பாளர்களால் அனுப்பப்பட்டன. ஆனல் அவற்றை ஆராய்ந்தோ மதித்தோ எழுதுபவர்கள் இல்லையாதலாலும், மதிப்புரையெழுத வேண்டிக் கொள்ளப்பட்ட நண்பர்கள் எழுதாததாலோ இப்பகுதியில் இரண்டொரு மதிப்புரைகள் எழுதியதோடு இப்பகுதி நிறுத்தப்பட்டுவிட்டது.

தமிழகத்தில் ஆராய்ச்சி ஆய்வெல்லைகளுக்குட்பட்ட நூல்கள் பல வெளிவருகின்றன. ஆய்வு நூல்களும், திறனய்வு நூல்களும் சிற்சில வெளியிடப்படுகின்றன. எனவே இத்துறையில் கவனம் செலுத்துவதென முடிவுசெய்து ஏழு நூல்களுக்கு ஆய்வுரையோ, மதிப்புரையோ எழுதி வெளியிடுகிறோம். இனி இப்பகுதியைத் தொடர்ந்து நடத்த முடிவு செய்துள்ளோம்.

குறிப்பிட்ட சிலதுறை நூல்களையே இப்பகுதியில் விமர்சனம் செய்வோம் அல்லது மதிப்பிடுவோம். கீழ்வரும் துறைகளில் 'ஆராய்ச்சி' ஆர்வம் கொண்டுள்ளது என்பது வாசகர்கள் அறிந்ததே.

(1) இலக்கியம் — இலக்கிய வரலாறு — இலக்கியத் திறனய்வு — இலக்கியமும் சமுதாய வாழ்க்கையும் — இலக்கியக் கருத்து அல்லது உருவ வளர்ச்சி.

(2) வரலாறு — உலக வரலாற்றுப் போக்குகள்; தமிழக வரலாறு — சமுதாய பண்பாட்டு வரலாறுகள் — வரலாற்றுச் சான்றுகள் — கல்வெட்டு, சாசனங்கள்; வரலாற்று மூலக் குறிப்புகள்; பண்டைய நாகரிகங்கள் பற்றிய செய்திகள்; வரலாற்றுக் கதைகள்; வரலாற்று நாவல்கள்.

(3) பண்பாட்டியல் — Main level of Culture and Folk level of Culture — பிரதான பண்பாட்டுப் போக்குகள், நாட்டுப் பண்பாட்டியல் போக்குகள், நாட்டுப் பாடல்கள், நாட்டுக் கதைப்பாடல்கள், நம்பிக்கைகள் முதலிய நாட்டுப் பண்பாட்டியல் கூறுகள்.

(4) மானிடவியம்—சமூகவியல் — சமுதாய வாழ்க்கை வருணனைகள். சமுதாய மாற்றங்கள், இனக்குழு வாழ்க்கை, இனக்குழுப் பண்பாடு, இனக்குழுப் பாடல், கதைகள் முதலியன.

(5) விஞ்ஞானம் — சமூக மாற்றத்தோடு தொடர்பு கொண்ட விஞ்ஞான வளர்ச்சி விஞ்ஞான வளர்ச்சியின் வரலாறு, விஞ்ஞானச் சிந்தனைகள், கண்டுபிடிப்புகள் முதலியன.

நூல்களில் மூலங்கள், மொழிபெயர்ப்புகள் இரண்டையும் விமர்சிப்போம்.

தமிழ்மொழி, ஆங்கிலமொழி இரண்டிலும் வெளிவரும் நூல்களை அனுப்பலாம். நூல்கள் அனுப்புவோர் இருபிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

அனுப்பப்படும் நூல்கள் அனைத்திற்கும் விமர்சனம் வெளியிடுவதாக ஆசிரியர் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளவில்லை.

ஆசிரியர்.

# மதிப்புரை

நூல்: 'இலக்கியக் கனவுகள்'
ஆசிரியர்: டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்
விற்பனை உரிமை: ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட்டு ரோடு, நாகர்கோவில்-2.
பக்கம் 199, அக்டோபர் 1972, விலை ரூ. 4-00.

கனவு என்பது உலகமக்களிடையே காணப்படும் ஒரு நம்பிக்கை. தமிழ் இலக்கியத்தில் கனவுகள் பற்றிய தொகுப்புநூலாக 'இலக்கியக் கனவுகள்' என்னும் இந்நூல் விளங்குகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில், சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவாக, கேரளப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் மூன்று நாட்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்பே இந்நூல் வடிவாக வந்துள்ளது.

இந்நூலில் ஆசிரியர், கனவின் தோற்றத்தைப் பற்றி நிலவும் பல கருத்துக்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். துயிலில் ஏற்படும் தன்னுணர்வே (conciousness) கனவு: நனவில் அடக்கப்பட்ட உணர்வே (Supressed feeling) கனவு: உள் விருப்பத்தின் விளை வினைவே கனவு: ஆன்மா பிறர் தூண்டுதலின்றிச் செயல்படுவதே கனவு என்னும் ஆயுள் வேத நூல் கருத்தையும் கூறியுள்ளார்.

புறக் கண்ணால் காண்பது நனவு: அகக் கண்ணால் காண்பது கனவு. ஆழ்ந்த உறக்கமில்லாத போதே கனவுகள் தோன்றுகின்றன. நனவில் நிகழாதவைகளும் கனவில் நிகழலாம்.

இக்கனவைப் பற்றிய மக்கள் நம்பிக்கை என்ன? கனவு இறைத் தன்மையுடையது; கடவுளின் தூது; இறை நமக்குத் தருகின்ற புத்திமதி; உள் மனம் புறமனத்திற்குச் செய்யும் எச்சரிக்கை என்பனவாகும்.

மேலும் கனவுக்கும் கவிதைக்கும் உள்ள பொருத்தமும் விளக்கப்பட்டுள்ளது. நனவுலகில் நிறைவேறாத ஆசைக் கனவுகளை நனவாக்குவதே கவிதை. இந்த அடிப்படையிலேதான், மறக்களையை நீக்கி அறப்பயிரை வளர்க்க இளங்கோவின் சதுக்க பூதம் தோன்றியது; பாரதிதாசனின் 'சைவப்பற்று' என்ற பாடல், மடங்கள் மக்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்ற அவரது எண்ணக் கனவைக் காட்டுகிறது, என விளக்கியுள்ளார்.

நிமித்தங்கள் பற்றி நம்பிக்கையும் பழங்காலத்திலிருந்தே நிலவி வருகின்றது. இவற்றையும் கனவில் கலந்து இலக்கியங்களைப் படைத்துள்ளார்கள். இக்கனவுகளும் நிமித்தங்களும் இலக்கியச் சுவைக்கு மெருகூட்டுதலைப் பல சான்றுகளால் நிறுவியுள்ளார்.

கனவுகளை, முழுநிலை விளக்கம் (Symbolic interpretation) துண்டுநிலை விளக்கம் (decoding interpretation) என இருவகைகளாகப் பழங்காலத்தார் பாகுபடுத்தியதாகப் பிராய்ட் கூறியதை உணர்த்தி, அதனைச் சான்றுகளுடன் தமிழிலக்கியத்திலிருந்து புலப்படுத்தியுள்ளார்.

இந்நூலின் சிறப்பான அம்சம், சங்க இலக்கியக் கனவு, தொடர்நிலைச் செய்யுளில் கனவு, புராணக் கனவு, போன்ற பாகுபாடாகும். சங்க இலக்கியங்களிலும் திணைவாரியான பகுப்பு சில வேறுபாடுகளைச் சுட்டிக் காட்ட உதவுகிறது. கனவு உள வேட்கையின் விளைவு என்ற கனவுக் கோட்பாட்டிற்குச் சங்க அகப்பாடல்களும், குறள், முத்தொள்ளாயிரம் பரணி போன்ற இலக்கிங்களும் சான்றுக விளங்குவதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

காப்பியம், இதிகாசம், புராணம், கதைப் பாடல்கள் அனைத்தையும் தொடர்நிலைச் செய்யுளுக்குள் அடக்குகிறார். பின்வரும் நிகழ்ச்சிகளை முன்கூட்டி உணர்த்தல், காப்பியத் தொடக்கமாயமைந்து காப்பியச் செய்தியைத் தருதல், ஊழை வலியுறுத்தல், பாத்திரங்கள் செயற்படத் தூண்டுதல், பாத்திரங்கள் பண்பை

உணர்த்தல் ஆகிய பல நிலைகளில் கனவுகள் தொடர்நிலைச் செய்யுளில் எடுத்தாளப்படுதலை நன்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்நூல் கனவைப் பற்றிய வெறுந்தொகுப்புரையாக இராமல், அங்கங்கே இலக்கிய நுணுக்கங்களையும், சிறப்புகளையும் எடுத்துக் காட்டி, வாசகர்க்குப் படித்து முடிக்கவேண்டுமென்ற ஆசையை எழுப்பும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது

நாட்டுப் பாடல்களைப் புறக்கணிக்காமல் எடுத்துக்காட்டியிருப்பது பாராட்டிற்குரியது.

மேலும், தமிழ் நூற்களில் காணப்படும் கனவுக் குறிப்புக்களை, தொல்காப்பியம் முதல் கண்ணதாசன் கவிதைகள் வரை கண்டெடுத்து, இரண்டாம் பகுதியாக இணைத்து வெளியிடப் பட்டுள்ளது. ஆர்வமுடையவர்கள் புரட்டிப் பாாப்பதற்கு உறுதுணையாக இந்த ஏற்பாடு அமைந்துள்ளது எனலாம்.

ஆசிரியர் ஓரிடத்தில் கூறியிருப்பதுபோல 'தமிழ்க் கவிதை வரலாற்றின் அடிமுதல் நுனி வரை இக்கனவுகள் கனிந்துநிற்கும் காட்சியை' அருமையாகச் சித்திரித்திருக்கிறார். 'ஆனாலும் கனவுகள் ஏன் தோன்றுகின்றன என்பதைக் குறித்து எந்தத் தமிழ் இலக்கியமும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை' என்பதனையும் கூறி அதனை வாசகர் சிந்தனைக்கு விட்டுவிடுகிறார்.

கா. சுப்பிரமணியன்

---

# நூலாய்வு - மதிப்புரை

## யாவரும் கேளீர்!

திரு. இரா. நாகசாமி எழுதியிருக்கும் இந்நூலுக்கு திரு. கணேசன் எழுதியிருக்கும் அணிந்துரையில் இந்நூலின் உள்ளடக்கம் பற்றிப் புகழ்ந்து எழுதுகிறார்.

"மன்னர்களின் வாழ்வும், பணியும், கொற்றமும் மலர்கின்ற அழகை அருமையாக விளக்குகிறார்; வணிகர் வாழ்வும் பணியும் சிறக்க ஒளிவிடச் செய்திருக்கிறார். அந்தணர் அறநெறி வாழ்வும் பணியும் மணக்கச் செய்திருக்கிறார். உணவளித்து உயிர்காக்கும் உழவோர் அருமையும் பெருமையும் செவ்விதின் மிளிர வைக்கிறார். மற்றும் பல தொழில் இயற்றுவோருள் தச்சர் சீர்த்தி தண்ணொளி பரப்பச் செய்கிறார். இறுதியில் தேவரடியார் என்னும் தெய்வப் பணியில் பெண்டிரின் சீர்த்தியைச் செம்மையாகப் புலப்படுத்துகிறார்."

நமது பழமையைப் பழமையென்பதற்காகவே நினைத்துப் பெருமைபடுகிறவர்கள் உள்ளனர். ஆனால் அப்பெருமை நீர்க்குமிழி போல் விவாதமென்னும் காற்றுவீச உடைந்து போய்விடும். பழமைக்குப் புதுமை முரண்பட்டதாயினும், புதுமையின் தாய் பழமையேயாகும். புதுமைக்கும் பழமைக்கும் இடையே முரண்பாடும், அதேசமயம் தொடர்ச்சியும் உள்ளது. பழமையின் புதுமையாக்க ஆற்றலனைத்தும், புதுமையால் அணைத்துக் கொள்ளப்படும். பழமையில் சருகாகிய எல்லாம் புதுமைக்கு உரமாகிப்போகும். தற்கால வரலாறு, பழமையின் சிறந்த கூறுகளை உள்ளடக்கி, மாய்ந்து போன, தற்கால மானுட முன்னேற்றத்திற்கு எதிரான கூறுகளை ஒதுக்கி, பழமையை ஒழித்தும் அதேசமயம் பழமையின் மானுடப் படைப்புகளில் தற்காலத்திற்குரிய வளர்க்கேற்ற கூறுகளை வளர்த்தும் முன்னேறிச் செல்லும்.

ஒவ்வோரின மக்களும் தமது பழமையின் படைப்புகளை, அதாவது தமது முன்னோர்களது படைப்புக்களை, சமுதாயச் சூழலோடு பொருத்திக் கண்டு, அவர்களது முழுமையான சமுதாய, பண்பாட்டு வாழ்க்கையை அறிந்து கொண்டால்தான், அதனைப் பகுத்தாய்வதும், தற்காலத்தை உணர்ந்து அவற்றைப் பயன் படுத்துவதும் சாத்தியமாகும்.

தமிழ்நாட்டில் சமுதாய வரலாறும், பண்பாட்டு வரலாறும் பல்துறை நோக்கில் ஆராயப்பட வேண்டும். அதற்குரிய சிறுதுளிகள் கூட வரவேற்பதற்குரியவை. இந்நூல் பண்டைத் தமிழர், நடுக்காலத் தமிழரின் படைப்புகளான, அரசியல், ஒழுக்கம், நீதி, வீரம், முதலிய அக - மதிப்புக்களையும், சிற்பம், கட்டிடம், கலை போன்ற புறவெளியீட்டுப் படைப்புகளையும் கலை - இலக்கியம், தொல்பொருளாய்வு, சாசன ஆவணங்கள், முதலிய பலதுறை அறிவுகளின் அடிப்படையில் கருத்துப் படிமங்களாக்கி விளக்கியுள்ளார். இலக்கியச் செய்திகளை, தொல் பொருள்இயல் அறிவென்னும் உரைகல்லில் உரசிப் பார்த்து உண்மைநிலை கண்டுள்ளார்.

சமுதாயத்தின் புற வாழ்க்கைக்குத் தேவையான பொருளுற்பத்தி செய்வோரைப்பற்றி சாசனங்களும், இலக்கியங்களும் அதிகம் கூறுவதில்லை. 'உயர்ந்தோரை'ப் பற்றியும், அவர்களது வீரதீரங்கள், தான தருமங்கள் பற்றியுமே அவை கூறும். அங்கங்கே மேழிப்பிடிப்போரும், சுத்தியல் பிடிப்போரும், சில உரிமைகள் பெற ஒன்றுகூடி (Trade guiids) போன்ற அமைப்புகளை நிறுவி வாலாற்றில் நுழைந்து கொண்டனர். இவ்வாறு மக்கள் பகுதியினர் தமது தொழில் புரிந்து நாட்டைப் பாதுகாப்பதற்குச் செய்த முயற்சியே சமுதாய வரலாறாகும். இவ்வர்க்கங்களின் உழைப்பினைப் பயன்படுத்தி, உற்பத்தி செய்த பொருளை விநியோகிப்பவர்கள் ஒரு வாணிப வர்க்கமாகிறார்கள். அவ்வக்கால நம்பிக்கைகளினடிப்படையில் சமுதாய ஒழுக்கம், வாழ்க்கைக் குறிக்கோள்கள் இவற்றை வகுத்துத் தருவோர் அறிவாளி வர்க்கத்தினராவர். வர்க்க உறவுகளை, ஆளும் வர்க்கத்தினரின் நலன்களுக்கேற்ப நிலைநிறுத்துவோர் அரசர்கள்.

இவ்வனைத்து வர்க்கங்களின் வாழ்க்கை நிலைமைகள், ஆர்வங்கள், பரஸ்பர உறவுகள், உறவுநிலை மாற்றங்கள், சமுதாய உற்பத்தியில் இவர்களது ஸ்தானம், சமுதாய உற்பத்தியில் பயன்பெறுவதில் இவர்களது ஸ்தானம் முதலிய அனைத்தையும், இவர்களது தரத்தாலும், மூளையாலும் படைத்த அனைத்தும் பண்பாடாகும்.

இம்முழுமையான பண்பாட்டுப் படைப்புகளையும், சமுதாய வரலாற்றின் சில கூறுகளையும் ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டுகிறார். அரசரைப் பற்றியும் அரசாட்சி பற்றியும் அரசரைப் புகழும் புலவர் கவிதைகளும், அவர்களது மெய்கீர்த்திகளும் வரலாற்றை அறிய ஒரு தக்கச் சான்றுகளாகும். அரசியல் வழக்குகள் பற்றியும், அரசரைப்பற்றிய கருத்தமைப்புகளையும் விரிவாகக் கூறியுள்ளார். முதல் ஆறு பகுதிகளில் அரசு, அரசர், பற்றி மேலோர் கொண்டிருந்த கருத்துக்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பிற்பகுதியில் மக்களில் பல பிரிவினர், மறவர், அந்தணர், வாணிபர், உழவர், நிலவுடைமையாளர், தேவரடியார், சிற்பிகள் தேர் செய்வோர் போன்றவர்களைப் பற்றிய விவரங்கள், வாழ்க்கை நிலை, சமூக நிலையில் அவர்களது ஸ்தானம், அவர்களைப் பற்றி பிறர் கூற்று, சமூக வாழ்க்கையில் அவர்களது பங்கு முதலியன கூறப்பட்டுள்ளன.

தேவரடியார், அரங்கம் ஆடுவோர், பாடு பாடுவோர், சிற்பிகள், முதலிய கலைஞர்கள், பிற தொழில் செய்வார் வாழ்க்கையை இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு கருத்துப் படிமமாகத் தந்துள்ளார்.

பொதுவாகப் பிற வரலாற்றாசிரியர்கள், பண்பாடு பற்றி எழுதிய ஆசிரியர்கள் அதிகமாக அரசியல் வரலாறு, அரசபரம்பரை பற்றிய காலம், மதபோதகர் வரலாறு, போர்களைப் பற்றிய விவரங்கள், கோயில் கட்டிய செய்திகள், அரசர் கொடுத்த தானங்கள் முதலியன பற்றியே எழுதியுள்ளார்.

இரா. நாகசாமி, வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த பல சமுதாய வர்க்கங்களின் மக்கள் படைத்த பண்பாட்டையும், புறப்பொருள்களை ஆராய்ந்து அவர்களது வாழ்க்கையைப் பற்றியும், சிந்தனையைப்பற்றியும் ஒரு கருத்தமைப்புப் படிவத்தை உருவாக்கிக் கொள்ள உதவி செய்துள்ளார்.

அரச வெற்றிகளையும், அரசர் புகழையும் பேசுகிற வரலாறுகளைக் கேட்டுச் சலித்துப் போன தமிழ் வாசகளுக்கு இந்நூலின் கருத்துக்கள் குளிர்ந்த மெல்லிய காற்றைப் போல புதுமையாகவும், நமது பழங்கருத்துப் படிமங்களை அறிந்து புதுமையான, உண்மையான கருத்துப் படிமங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தையும் உண்டாக்குகிறது.

[யாவரும் கேளிர் - இரா. நாகசாமி, வாசகர் வட்டம், 14 தணிகாசலம் செட்டி ரோடு, தியாகராய நகர், சென்னை 17 பக்கம் 270, விலை 7-50]

நா. வா.

---

## மூலதனம்

ஆசிரியர்: ம. சிங்காரவேலு, ப. ஜிவானந்தம், மார்க்ஸ்.
புது இலக்கியப் பதிப்பகம், 61, தம்புசெட்டித் தெரு, சென்னை-1.
பக்கங்கள் 72, விலை ரூ. 2-50.

பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்புவதில் 1924 முதலே முதன்மையானவர்களில் ம. சிங்காரவேலு அவர்கள் முக்கியமானவர். பொதுவுடைமைக் கொள்கைகளை இன்றுபோல் அன்று பகிரங்கமாகக்கூறமுடியாது. அவ்வளவு அரசாங்கத் தடைகள். திரு. ம. சிங்காரவேலு அவர்கள் பல இதழ்களில் மார்ஸியக் கருத்துக்களை வெளியிட்டார்கள். புது உலகம் என்ற பத்திரிகை 1935—36-ம் ஆண்டுகளில் சென்னையிலிருந்து வெளிவந்த ஒரு பொதுவுடைமை மாத இதழ். அதில் தன்னுடைய பொதுவுடைமைக் கருத்துக்களை மட்டுமல்லாமல்

மூட நம்பிக்கை, சமூக அடிமைத்தனம், நாட்டு விடுதலை பற்றிய சிந்தனைகளையும் சிறப்புற எழுதியவர் ம. சிங்காரவேலு அவர்கள். அவர் கள் எழுதியுள்ள 'மூலதனம்' என்னும் படைப்பு 'புதுஉலகம்' மாத இதழில் தொடர்ச்சியாக வந்தது. இதனை வெளியிட்டவர்கள் தோழர் முருகேசனும், தி. நா. சுப்பிரமணியனும், சபாபதியும் ஆவர். மக்களுக்கு விளங்கும் வகையில் எளிய நடையில் பொதுவுடைமைக் கருத்துக்களை வழங்கியிருக்கும் ஒப்பற்ற சிறிய நூல் இது. இவர் பெரியாரின் சுயமரியாதை ஏட்டிலும் தன்னுடைய சீர்திருத்த, சமதர்மக் கருத்துக்களை வெளியிட்டு வந்திருக்கிறார். அவை இன்று புத்தகவடிவில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. கார்ல்மார்க்ஸ் எழுதியுள்ள கீழைநாடுகள் அடிமைப்பட்ட வரலாறு, இந்தியாவைப் பற்றிய கடிதம் ஆகியவையும் இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. மூலதனம் பொது என்ற ப. ஜீவானந்தம் அவர்களின் கவிதையும் இடம் பெற்றிருக்கிறது. தோழர் ப. ஜீவானந்தம் அவர்களின் புரட்சிகர வரலாற்றைத் தமிழ்நாடு நன்கு அறிந்ததே. இவ்விருவரின் கருத்துரைகள் அன்று போல் இன்றும், என்றும் பயனுடையதாகவே இருக்கிறது.

முதல் கட்டுரையில் மூலதனம் என்றால் என்ன என்று வரையறுத்து அதனை இயற்கை மூலதனம், செயற்கை மூலதனமென்று பிரித்துக் காட்டுகிறார். பின்னர் மூலதனம் உண்டாகிய விதத்தையும் தனிச் சொத்துரிமை ஏற்பட்ட விதத்தையும் விளக்குகிறார்.

கிராம, நகர, நாடுகள் தோன்றிய காலத்தையும், மத்திய காலத்தையும், முதல் முதலாளி, தொழிலாளி தோன்றிய காலத்தையும், ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகத்தையும் செல்வாக்கையும், தொழிற்சாலைகளின் தோற்றத்தையும் வாணிபத்தின் மூலம் நாடுகளைக் கைப்பற்றுதல், வல்லரசுகளின் தோற்றம், செல்வர்களின் ஆதிக்கம் வளர்ந்தவிதம், ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்ட உலகம், பொது உடைமை அறிக்கை போன்ற பொருட்களை முதல் 5 கட்டுரைகளில் மார்க்ஸீயத்தை கற்கிற துவக்க மாணவர்களுக்கு விளக்குகிறார்.

தோழர் ப. ஜீவா அவர்களின் 'மூலதனம் பொது' என்ற பாடலின் கருத்து வருமாறு:

பொது உடைமையால் பாலை நில வாழ்வு, பைம்பூஞ் சோலையென்று தழைக்கும். சொத்துரிமை, கொடுங்கோன்மை, வேஷம், சூழ்ச்சி முதலிய வியாதிகளின் பிடிகளில் சிக்கி வாழ்ந்த மனிதரெல்லாம் தன்னிலை தாழ்வுறுகிறார்கள். கடவுளோ, அரசாங்கமோ, பக்தி மார்க்கமோ அதுவும் மக்களை மேற்கூறியவற்றிலின்று காப்பாற்றாது. இவை யாவும் நீங்கி மனிதன் தேனீக்களைப்போல் இன்புற்று வாழ வேண்டுமென்றால் பொதுவுடைமை அமைப்பை மனிதன் உருவாக்கினால் மட்டுமே முடியும்.

கார்ல் மார்க்ஸின், 'கீழ் நாடுகள் அடிமைப் பட்ட வரலாறு', 'இந்தியாவைப் பற்றிய கடிதம்' முதலிய கட்டுரைகளிலிருந்து முதலாளித்துவம் துளிர்த்த காலத்தில் மனித வேட்டையின்மூலம் உள்நாடுகளில் வளர்ச்சிபெற்ற பின்னர் அயல் நாடுகளை அடிமைப்படுத்திய வரலாற்றையும், முதலாளிகளின் திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன. டச்சு, போர்ச்சுகீசிய வியாபார ஒப்பந்தங்கள் இந்திய உள்நாட்டு வாணிபத்தை கம்பெனியின் உயர் அலுவலர்களே கொள்ளையடித்த வரலாறு கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபார நோக்கம் இந்திய நாட்டிற்கு அன்னியர்களால் இழைக்கப்பட்ட அநீதி, உள்நாட்டுப் போர், இந்தியாவின் சமூக நிலைமை பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் மாறாமல் இருந்தது, ஆங்கிலேயரின் வரவால் ஏற்பட்ட சமுதாயப் புரட்சியின் தன்மை ஆகியவற்றை மார்க்ஸின் கட்டுரைகள் விளக்குகின்ற மொழிபெயர்ப்பு நூல்களைப் போலக் கடினமான நடையில்லாமல், மிகவும் எளிய, பாமரருக்கும் புரிகிற நடையில் எழுதப் பட்டுள்ளது.

T. மங்கை.

---

# அமைதிக்கதிரவன்

ஆசிரியர்கள்: (ரஷ்யன்) N. V. புஷ்கோவ், P. L. சில்சின்
தமிழில் T. A. கறுப்பண்ணன்
வெளியீடு: NCBH, சென்னை, பக்கம் 292. விலை ரூ. 6-00

அமைதிக்கதிரவன் ஆண்டு என்று ஓராண்டு முழுவதும் அனைத்துலக விஞ்ஞானிகள் கதிரவனை ஆராய்ந்து வந்தார்கள். கதிரவன் வணக்கத்திலிருந்து கலிலேயோ காலத்தில் கதிரவன் விஞ்ஞான ஆய்வுக்குரிய பொருளாயிற்று அதிலிருந்து பல வானவயலால் கதிரவனை ஆராய்ந்து வந்தனர். மாறுதல் இல்லாதது, நிலையானது என்று கருதப்பட்ட சூரியனைத் தற்கால சூட்சுமத் தொலை நோக்குக் கருவிகளும், ராடாரும் சூரியனில் நடக்கும் மாறுதல்களையும், சூரிய அதிர்ச்சிகளையும், அங்கு நடைபெறும் அணுமையச் சிதைவு, அணுமையக்கூட்டு முதலியனவற்றையும் ஆராய்ந்துள்ளார்கள். விண்வெளிப் பயணமும் ஆய்வுகளும் சூரியனிலிருந்து வெளிவரும் பல்வேறு வகையான துகள்களும், அலைகளும் கலந்த வீச்சும், பூமியில் ஆற்றல் பெறுமாறு பயன்படுத்த முடியுமெனக் கண்டுள்ளனர்.

இந்நூலில் கீழ்வரும் வினக்களுக்கு ஆசிரியர்கள் என். வி. புல்ஷ்காவ் — பி. ஐ. சிங்கின் ஆகிய இரு சோவியத் விஞ்ஞான - எழுத்தாளர்கள் விரிவாக விடையளிக்கிறார்கள். இந்நூல் மாஸ்கோவிலுள்ள மீர் வெளியீட்டாளர்கள் ரஷ்ய மொழியில் வெளியிட்ட நூல். இதனை பேராசிரியர் கறுப்பண்ணன் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து மொழிபெயர்த்துள்ளார்.

150 மில்லியன் கிலோ மீட்டருக்கு அப்பால் நடக்கும் நிகழ்ச்சிகள் இவ்வுலகை எப்படிப் பாதிக்கின்றன?

நமது உலகில் தட்பவெப்ப நிலையில் மாறுதல் உண்டானாலும், ரேடியோவில் வேறு ஒலிகள் கேட்டாலும், அதற்குக் காரணம் சூரியனில் நிகழும் ரேடியோ அதிர்வுகள் என்பதை எப்படி விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

அனைத்துலக புவிபௌதிக ஆண்டில் விஞ்ஞானிகள் சூரியனது இயக்கள், உள்நிகழ்ச்சிகள், அதன் செயல்பாடுகளால் விண்ணிலும் பூமியிலும் நிகழும் விளைவுகள் முதலியனவற்றை பற்றி விஞ்ஞானிகள் என்னென்ன கண்டுபிடித்துள்ளார்கள்.

பருவ நிலைக்கும் கதிரவனுக்குமுள்ள தொடர்பு யாது?

கட்புலனுக்குட்படாத விண்ணின் ஒளியை எப்படி உலகோர் பயன்படுத்த இயலும்?

இவையனைத்திற்கும் இந்நூல் விடையளிக்கிறது. நூலின் முடிவில் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"புற விண்வெளியை வெற்றி கொள்ளும் ஆராய்ச்சிக் காலத்தில் நாம் நுழைந்து விட்டோம். கதிரவனைப் பற்றிய பதிவாய்வுகள், பூமியின் மீதான அதனுடைய விளைவு மற்றும் விண்வெளியில் உள்ள கோடை வெளி ஆகியவற்றைப்பற்றி உலக முழுமையும் பரந்துபட்ட நிலையிலான சேவை நிரந்தரமாக அமைய வேண்டுமென்ற கோரிக்கை இந்த நுழைவு நிகழ்ச்சியானது. மனித நுண்ணறிவுக்குரிய புதிர்களை இன்னமும் இயற்கையானது வரையறையில்லாமல் கொண்டிருக்கிறது."

நம்முடைய இந்த உலகைப் பற்றியவைகளை அறிந்துகொள்ள உதவும் சிறப்பு வாய்ந்த வேலையில் எல்லா நாட்டின் விஞ்ஞானிகளும் ஒன்றுபட்டு அமைதியாக ஒத்துழைத்தற்கு இது நல்லதொரு சிறப்புமிக்க சான்றாகும்.

இவ்வாறு "அமைதிக் கதிரவன் ஆண்டு" விஞ்ஞான ஆய்வுகளில் சர்வதேச ஒத்துழைப்பையும், அதன் விளைவாக சூரியனை அறிந்து அதன் சக்தியை தொழில் நுட்பவியலார் பயன்படுத்துதற்குரிய கண்டுபிடிப்புகளையும் அளித்து வெற்றிபெற்றுள்ளது.

மொழி பெயர்ப்பு மிக எளிய, விஞ்ஞானச் செறிவுடைய, அழகிய தமிழில் உள்ளது. கருத்துக்களைத் துல்லியமாகக் கூறும் வாக்கிய அமைப்பு செவ்வனே உள்ளது. விஞ்ஞானக் கருத்துக்களையும், செய்திகளையும் மொழிபெயர்க்கும், செய்திகளையும் மொழிபெயர்க்கும் தமிழ் எழுத்தாளர் எதிர்நோக்கும் கடினமான பிரச்சினைகளை, இம்மொழிபெயர்ப்பாளர் விஞ்ஞான ரீதியான முறையில் தீர்வு கண்டுள்ளார். தமிழ்

படிக்கத் தெரிந்த, விஞ்ஞானத்தில் ஆர்வமுள்ள எவரும் படிக்கத்தக்க சிறந்த மொழிபெயர்ப்பு. இங்கே மொழிபெயர்ப்பு மணமோ, சுவடோ தெரியவில்லை. மூலநூலைப் போலவே உள்ளது.

நூல்முடிவில் அறிவியல் சொற்களின் அகர வரிசை தமிழில் தரப்பட்டுள்ளது. அவை பெரும்பாலும் பொருத்தமாக உள்ளன. இச்சிக்கல் இன்னும் விஞ்ஞானிகள், மொழியியலார்களால் தீர்க்கப்படாமல் இருப்பதால் மொழிபெயர்ப்பாளர் இறை கூறுதற்குரியவரல்லர்.

தமிழ் அருங்கலைச் சொற்கள் பொருத்தமில்லாதவிடத்து ஆங்கிலச் சொற்களின் தமிழ் வடிவத்தைக் கொடுத்துள்ளார். இது வரவேற்கத்தக்கதே.

இதனை வெளியிட்ட NCBH நிறுவனத்தார் எப்பொழுதுமே தரமான அறிவு விளக்க நூல்களை வெளியிட்டு வருகிறார்கள். இந்நூலை மொழிபெயர்த்து வெளியிட்டதன் மூலம் மேலும் மேலும் ஒரு படி புகழேணியில் ஏறியுள்ளார்கள்.

நா. வா.

## களங்கண்ட அறவோன்

இது ஒரு வரலாற்றுக் கதை. இன்றைய நெல்லூரான பண்டைய விக்கிரமசிம்மபுரத்தை ஆண்டுவந்த சோழ ராஜ்ய ஸ்தாபனாசாரியன் என்று பெயர் பெற்ற திக்கநிருபாலர் போசல நரசிம்ம தேவன் மகன் மனுமசித்தி என்னும் தெலுங்குச்சோழமன்னனின் படைத்தளபதியான கட்க திக்கனர் என்பவரின் வீர வரலாற்றை கூறுகிறது. நம் தமிழ் நாட்டில் தோன்றிய வீரமன்னர்கள் படைத்தலைவர்களைப் போலவே மற்ற மொழி பேசும் இந்திய மாநிலங்களிலும் போர் புரிந்து வீரமரணம் எய்திய அரசர்களும் அவர்களுடைய படைத்தலைவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆந்திர நாட்டின் வீரர் கட்க திக்கனரைப் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் எழுதப் பட்டிருக்கிறது.

போர்க்களத்தில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எதிரியின் வஞ்சகத்தால் தற்காலிகமாகத் தம் படை சிதறியோடியதைத் தொடர்ந்து, வெற்றி பெற்றேயாக வேண்டும் என்று திரும்பிவந்த கட்க திக்கனரை அவரது மனைவியும் தாயும், இகழ்ச்சியாக வரவேற்பதும் அக்கால வீரம் பற்றிய மதிப்புக்களை மனம் கொண்ட, தாயும் மனைவியும் அவர் திரும்பிவந்ததை தோல்வியாக எண்ணி நாணிச் செய்யும் இழிவுபடுத்தும் செயல்களும் அதைக் கண்டு கட்க திக்கனர் எழுச்சிபெற்று மீண்டும் படைதிரட்டிப் போரிட்டு உயிர்விடுவதும் வீரச்சுவை தோன்ற சித்தரிக்கப் பட்டுள்ளது.

இவ்வரலாற்றுக் கதைக்கு சான்றுகளாக நடுகல் முதலியன இன்றும் கட்க திக்கனரின் பெயர் பொறித்து இருப்பதைக் காணலாம் என்று ஆசிரியர் கூறுகிறார்.

இக்கதை நிலவுடைமை மன்னர்களின் போட்டிக் காலத்தும், பேரரசு தோன்றிய காலத்தும், எல்லா நாடுகளிலும் தோன்றுகிற வீரயுகம், ஆந்திரத்திலும், சோழர் காலத்திலும் பின்னரும் தோன்றி பலவீரர்களையும் வீரப் படைகளையும் தோற்றுவித்தது.

எளிய நடையில் ஆர்வமூட்டும் முறையில் கதை கூறப்பட்டுள்ளது.

T. மங்கை

# யூனிட்டுகள் - சாதாரண மனிதனுக்கு அசாதரணமான நல்ல முதலீடு

பொதுமக்கள் எளிதில் முதலீடு செய்வதற்கு ஒரு வசதியாக யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியாவை அரசாங்கம் தொடங்கியது. ரிசர்வ் பாங்கும் இதர நிதி ஸ்தாபனங்களும் நியமித்த திறம் மிக்க ட்ரஸ்டிகள் போர்டு ஒன்று ட்ரஸ்டின் பணிகளை நிர்வகித்து வருகிறது. இந்த ட்ரஸ்ட். யூனிட்டுகளை விற்று. அவற்றின் மூலம் கிடைக்கிற தொகையை பங்கு மார்க்கெட்டில் தெரிந்தெடுத்த பங்குகளிலும் செக்யூரிட்டிகளிலும் முதலீடு செய்கிறது. இத்தகைய முதலீடுகளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கின்ற வருவாய்த் தொகையில், ட்ரஸ்டின் சொந்த செலவுகளுக்குப் பயன்படுத்தியது போக மீதியுள்ள தொகை, சமமாக யூனிட் வைத்திருப்பவர்களுக்கு பங்கீடு செய்யப்படுகிறது. ஜூன் 30-ம் தேதியன்று பதிவேட்டில் பெயர் பதிவாகியுள்ளவர்களுக்கு இது கிடைக்கும். ட்ரஸ்டின் கணக்கு ஆண்டு ஜூலை முதல் ஜூன் வரை. யூனிட்டுகளை என்றைக்கு வாங்கியிருந்தாலும், யூனிட்டுகள் வைத்திருக்கும் எல்லோருக்கும் முழு ஆண்டின் டிவிடெண்டு தொகை அளிக்கப்படும். 1972–73ம் ஆண்டிற்கு $8\frac{1}{2}$ சதவீத டிவிடெண்டு தொகையை ட்ரஸ்ட் வழங்குகிறது.

ஒரு யூனிட்டின் அசல் விலை 10 ரூபாய். யூனிட்டுகள் பத்துப் பத்தாகத்தான் விற்கப்படுகின்றன. குறைந்த பட்சம் 10 யூனிட்டுகளை வாங்க வேண்டும். அதற்கு மேற்பட்டு எவ்வளவு யூனிட்டுகள் வேண்டுமானாலும் வாங்கலாம். பம்பாய், கல்கத்தா, புதுதில்லி அல்லது சென்னையிலுள்ள ட்ரஸ்ட் அலுவலகத்திலோ அல்லது பெரும்பாலான பாங்குகள் அல்லது தபால் நிலையங்களிலோ நடப்பு விற்பனை விலையில் யூனிட்டுகள் கிடைக்கும். பாங்குகளும் தபால் நிலையங்களும் ட்ரஸ்டின் ஏஜெண்டுகள் என்னும் முறையில் விண்ணப்ப பாரங்களை சப்ளை செய்வதுடன் ட்ரஸ்டின் சார்பாக அதிகார பூர்வமான ரசீதுகளையும் வழங்குகின்றன. யூனிட் பத்திரங்களை ட்ரஸ்ட் பதிவுத் தபால் மூலம் நேரடியாக அனுப்பி வைக்கிறது. யூனிட்டுகளை தனிநபர் ஒருவரோ அல்லது கூட்டாக இருவரோ, மூவரோ அல்லது நான்கு பேரோ வாங்கலாம். இவர்களில் எவரும் மைனராக இருக்கக் கூடாது. மைனராக உள்ள குழந்தை எதுவும் யூனிட்டுகளுக்காக மனுச் செய்ய முடியாது. ஆனால் தந்தையோ, அல்லது தாயார் சட்ட ரீதியாகக் கார்டியனாக இருந்தால் அவரோ, அல்லது கோர்ட் நியமித்த கார்டியனோ மைனரின் சார்பாக யூனிட்டுக்காக விண்ணப்பிக்கலாம். அந்தக் குழந்தை மைனராக இருக்கும் வரையில் யூனிட் பத்திரத்தைக் கையாளுவதற்கு அவருக்கு உரிமையுண்டு.

யூனிட்டுகள் வைத்திருப்பவர் (ஜூலை மாதம் தவிர) எந்தச் சமயத்திலும் தன்னுடைய யூனிட்டுகளைத் திரும்பவும் ட்ரஸ்டுக்கு நடப்பு மறு விற்பனை விலையில் விற்றுவிடலாம். இதற்காக யூனிட்தாரர் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். யூனிட் பத்திரத்தின் மறு புறத்தில் உள்ள பாரத்தை பூர்த்தி செய்து கையொப்பம்\கையொப்பங்கள் இட்டு, சாட்சிக் கையொப்பங்களுடன் அதை ட்ரஸ்டின் உரிய அலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். கையொப்பம் முதலியவற்றைச் சரிபார்த்த பிறகு, யூனிட்களால் கேட்டுக் கொண்டபடி ட்ராப்ட், செக், மணியார்டர் மூலமோ அல்லது ரொக்கமாகவோ உரிய தொகையை ட்ரஸ்ட் வழங்கும்.

# அடிமை நாடுகள் பற்றி

ஆசிரியர்கள்: மார்க்ஸ், எங்கல்ஸ்.
தமிழாக்கம்: R. H. நாதன், ஆ. சு. பாரதி.
வெளியீட்டாளர்கள்: அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ — தமிழ் வெளியீடு.
N.C.B.H. சென்னை, பக்கம் 185, விலை 2.50

1853ல் மார்க்ஸ் இந்தியா சம்பந்தமாகவும், வேறு கலோனியல் அடிமைத்தனத்திற்கு உள்ளான நாடுகள் பற்றியும் பல கட்டுரைகள் எழுதினார். இப்பொருள் குறித்து தமது ஆன்ம நண்பர் எங்கல்ஸெக்கு கடிதங்கள் எழுதினார்.

1850 முதல் 1853 வரை நடந்த, அடிமை நாடுகளுக்கும், ஆண்ட நாட்டு முதலாளி வர்க்கத்திற்கும் இடையே நடைபெற்ற போராட்டங்களைப்பற்றி தமது கொள்கையினடிப்படையில் நியூயார்க் டெய்லி ட்ரிப்யூன் என்ற பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதினார். எங்கல்ஸும் சில குறிப்புரைகளும், கடிதங்களும் இப்பொருள் பற்றி எழுதினார். இவை யாவற்றிலும் அடங்கிய தத்துவக் கருத்துக்களே லெனின் "ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்சகட்டம்" என்ற நூலுக்கு ஆதாரமாயமைந்தன.

இவற்றை அயல்மொழிப் பதிப்பகம் மாஸ்கோ, ரஷ்ய மொழிபெயர்ப்பாக வெளியிட்டுள்ளது. இதன் தமிழாக்கமே இந்நூல்.

தற்காலத்தில் அடிமை நாடுகள் விடுதலை பெற்றுவிட்டன. இவை அடிமை நாடுகளான விதத்தை மார்க்ஸும் எங்கல்ஸும் வரலாற்று ரீதியாக வருணிக்கிறார்கள். எங்கல்ஸும் மார்க்ஸும் வரலாற்றை வர்க்க உறவுகளின் அடிப்படையில் காண்பதை இக்கட்டுரைகள் காட்டும். 'மூலதனம்' என்ற நூலில் மார்க்ஸ் உருவாக்கிய வரலாற்றுப் பொருள் முதல் வாதத்துவத்தை அடிமை நாடுகள் வரலாற்றிற்கு பொருத்தி ஆராய்கிறார் மார்க்ஸ் அயல்நாட்டு வியாபாரத்திற்கும், கலோனியல் கொள்கைக்கும் உள்ள தொடர்பை பல நாடுகளின் சமகால வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து எடுத்துக்காட்டுகிறார். பிரிட்டனே, பெரிய ஏகாதிபத்திய நாடாக வளர்ச்சி பெற்றதால் அதனைப் பற்றிய கட்டுரைகளை அதிகமாக எழுதினர். உதாரணமாக இங்கிலாந்தும் பாரசீகமும், பிரிட்டிஷ் சர்க்காரும் அடிமை வியாபாரமும், பிரிட்டனும் பருத்தி வியாபாரமும், முதலியன. எங்கல்ஸ் இங்கிலாந்திலேயே வாழ்ந்ததால் பிரிட்டிஷ் மூலதன வளர்ச்சியையும், ஏற்றுமதியையும் பற்றியே அதிகமாக எழுதினர். உதாரணமாக "அயர்லாந்து பிரச்சினை, தொழில் முதலாளி உருவானது" முதலியன.

இந்தியாவைப் பற்றியும், சீனாவைப் பற்றியும் எழுதிய கட்டுரைகளை மாஸ்கோ அயல்மொழிப் பதிப்பகம் தனித்தனி நூல்களாக வெளியிட்டிருப்பதால் இந்நூலில் அவை சேர்க்கப்படவில்லை.

தமிழில் வரவேற்கத் தக்கதோர் நூல்- மொழிபெயர்ப்பாளர்கள் கருத்துணர்ந்து எளிய தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். நூல் முழுமையும், ஆங்கில மொழி பெயர்ப்பிலுள்ள படியே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. குறிப்புகளும் மூலநூலில் உள்ளவையே.

சிற்சில இடங்களில் தமிழ் வாசகருக்கு உதவியாக இருக்கும்படி, மொழிபெயர்ப்பாசிரியர்கள் குறிப்புகள் கொடுத்திருக்கலாம். இவை தனியாக, மூலக்குறிப்புகளுக்குப் பின் சேர்க்கப்பட்டிருக்கலாம். மார்க்ஸ் எங்கல்ஸ் நூல்களுக்கு இத்தகைய குறிப்புகள், வாலாற்று நிகழ்ச்சிகள், பூகோள விளக்கங்கள், தத்துவார்த்த கொள்கைகள் முதலியனவற்றை விளக்கத் தேவைப்படுகின்றன.

# இந்தியாவைப் பற்றி

ஆசிரியர்: மார்க்ஸ், எங்கெல்ஸ்.
வெளியீட்டாளர்கள்: அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ.
தமிழ் வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
தமிழாக்கம்: S. ராமகிருஷ்ணன், R. H. நாதன், R. V. கிருஷ்ணையா.
பக்கம் 253, விலை ரூ. 3.

காலனி ஆதிக்க வரலாறு பற்றி மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளில் சீனாவைப் பற்றியும் இந்தியாவைப் பற்றியும் எழுதிய கட்டுரைகளே எண்ணில் அதிகமானவை. இந்தியாவைப் பற்றி அவருடைய ஆய்வுரைகள் தொகுக்கப் பட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு மாஸ்கோ அயல்மொழிப் பதிப்பகத்தினால் வெளி யிடப்பட்டன. அதன் தமிழாக்கமே இந்நூல். இந்தியாவில் 1853 முதல் 1857 முடிய நிகழ்ந்த விரைவான பிரிட்டிஷ் ஆட்சி விஸ்தரிப்பு முறை களையும், அதனை எதிர்த்துக் கிளம்பிய சிப்பாய்க் கிளர்ச்சிகள், இவ்வெதிர்ப்பைச் சமாளிக்க பிரிட்டிஷ் ஆட்சியாளர் கையாண்ட தந்திரங்கள் முதலியனவற்றைக்குறித்து வரலாற்றுப் பொருள் முதல்வாத நோக்கில் மார்க்ஸ் ஆராய்ந்து பல கட்டுரைகளை நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன் என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வெளியிட் டார்.

அக்காலத்தில் இந்தியாவிலுள்ள அநாகரிக மக்களை கிறிஸ்தவ நாகரிகத்திற்கு மாற்றும் சுயநலமற்ற நற்பணியைத் தாங்கள் செய்து வருவதாக கிறிஸ்தவ மிஷனரிமார்கள் பிரசாரம் செய்தனர். ஆங்கிலப் பிரபுக்களும், டைம்ஸ் பத்திரிகையும் இந்தியாவில் நேர்ந்துள்ள குழப்பங்களைப் போக்க சிறிதளவு மாறுதல்களே போதும் எனக் கூறின. இந்தியாவில் உள் நாட்டுப் போர்களும், படையெடுப்புகளும் புரட்சிகளும், வென்றடக்கும் ஆக்கிரமிப்புகளும் பஞ்சங்களும் அடுத்தடுத்து நிகழ்ந்தன என்பதும் உண்மையே. இதைக் காட்டியே இந்தியா விற்குச் சமாதானத்தையும் சுபிட்சத்தையும் தாங்கள் வருகையும், ஆட்சியும் அளித்ததாக பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினர் பெருமையாகக் கூறிக் கொண்டனர். இதை ஐரோப்பிய அறிவாளிகள் நம்பினர்.

மார்க்ஸ் தமது கட்டுரைகளில் இந்தியாவின் சமூக வரலாற்றையும், சமகாலச் சமூக நிலைமையையும், பொருளாதார நிலைமையையும்; அந்நிய வாணிபம், அந்நியர் அரசியல் தலையீடு, தொழிற்சுரண்டல் இவற்றால் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்களின் தன்மையையும் அறி- வியல் ஆய்வுகளின் மூலம் விளக்கினார்.

“போர்களும், பஞ்சங்களும், உள்நாட்டுக் கலகங்களும், சமுதாயத்தின் மேற்பரப்பையே பாதித்தன. இங்கிலாந்தோ, இந்திய சமுதாயத் தின் முழு அமைப்பையும் சின்னபின்னமாக்கி விட்டது. அதே போதில் புத்தமைப்புக்கான அறிகுறி எதுவும் தோன்றவில்லை. இவ்வாறு புதிய உலகத்தைப் பெறாது, பழைய உலகத்தை இழந்து நிற்கும் நிலையானது, இந்தியரது இன்றைய துயரத்துக்கு ஒரு அலாதியான சோர்வைக் கூட்டுகிறது. மேலும் பிரிட்டிஷ் ஆட்சியிலுள்ள இந்து ஸ்தானத்தை அதன் பண்டைய மரபுகள் அனைத்திலிருந்தும் துண்டித் திருக்கிறது.”

இந்த நிலைமையை முற்றிலும் வருணித்து விட்டு, இச்சமுதாய மாற்றத்தைக்குறித்து மார்க்ஸ் விளக்குகிறார். பிரிட்டிஷ் முற்கால சமு தாய அமைப்பை “ஆசிய உற்பத்திமுறை” என் றும் அதை முற்றிலும் மாற்றுகிற பிரிட்டிஷ் மூலதன, வியாபாரத் தலையீட்டைச் சமூகம் புரட்சியென்றும் கூறுகிறார்.

“ஆங்கிலேயரது நீராவிசக்தியும், வர்த்தக சுதந்தரமும் ஆற்றிய வினையே இந்நிலைமைக் குக் காரணங்களாகும். குடும்ப சமுதாயங்கள் குடிசைத்தொழில் முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதாவது கையால் நூற்றல், கை நெசவு, கரத்தால் ஏர்பிடித்து உழுது,

பயிரிடல் ஆகியவற்றின் அலாதியான இணைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தன; அந்த இணைப்பே சுயபலத்துடன் நிமிர்ந்து நிற்கும் திறனை அவற்றுக்கு அளித்தன. ஆங்கிலேயர் தலையீட்டால் நூற்பாளர் லங்காஷயரிலும், தொழிலாளர் வங்காளத்திலுமாகப் பிரிந்து விட்டனர். ஓரளவு பூர்வீகக்குடி நிலையிலும், ஓரளவு நாகரிக வளர்ச்சி நிலையிலும் இருந்த அச்சிறு சமூகங்களிலும் பொருளதார அடிப் படைகள் இவ்வாறு தகர்ந்தது; அச்சமூகங்கள் அழிந்தன; இது ஆசியாவில்நிகழ்ந்த ஒரே சமூகப் புரட்சி.''

இத்தகைய சமுதாய வடிவப் படிமத்தை கருத்தமைப்பாக மார்க்ஸ் உருவாக்கி, அதன் அடிப்படையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் வரலாறும் விளைவுகளும் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள் இந்தியாவில் புரட்சிக் கலகம், இந்தியாவில் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நடந்த சித்திரவதைகள் பற்றிய விசாரணை, இந்தியாவிலிருந்து பிரிட்டி-ஷாருக்குக் கிடைத்த வருமானம், இந்தியாவுக் காக பிரிட்டிஷ் அரசு வாங்கப்போகும் கடன், இந்தியாவில் அயோத்தியை பிரிட்டிஷார் விழுங்கியது, இந்திய நில உரிமை முறையில் காரன்வாலிஸ் பிரபு ஏற்படுத்திய மாறுதல்கள், இந்தியாவில் வரிகள், இந்திய மசோதா (பிரதமர் பிட் பெயரால் வழங்கப்படுவது) முதலிய பல பொருளாதார, வரலாற்றுப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் மார்க்ஸ் எழுதினர். இந்தியாவில் பிரிட்டிஷ் ராணுவம் என்ற கட்டுரையையும் இக்கட்டுரைகள் பற்றி தமது கருத்துக்களை வெளியிடும் கடிதங்களையும் எங்கெல்ஸ் எழுதினர்.

மார்க்ஸிய தத்துவ முதலாசிரியர்களுக்கு இந்தியா பற்றிய விவரங்களையளித்த நூல்கள் மிகவும் குறைவாகவே கிடைத்தன. பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர் ஜே. எஸ். மில் எழுதிய இந்திய வரலாறும், பார்லிமெண்டில் கம்பெனி நடவடிக் கைகளையும் வாரன்ஹேஸ்டிங்ஸையும் எதிர்த்து எட்மண்ட் பர்க் என்ற புகழ்பெற்ற பார்லி-மெண்ட் உறுப்பினர் பேசிய பேச்சுக்களும், இந்தியாவில் வாணிபம் புரிந்த கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியர்கள், கம்பெனி அரசின் கவர்னர்கள், கவர்னர் ஜெனரல்கள் எழுதிய அதிகாரபூர்வமான அறிக்கைகள், குறிப்பேடுகள் முதலியனவே மார்க்ஸின் இந்திய ஆய்வு-களுக்குக் கிடைத்த சான்றுதாரங்கள் (data) இத்தகைய ஒரு சார்புடைய சான்றுகளிலிருந்து கூட, மார்க்ஸ் தமது வரலாற்றுப் பொருள் முதல் வாத முறையியலின் வலிமையால் உண்மையை நெருங்கி, இந்திய சமுதாய மாறுதல்கள் பற்றிய, வரலாற்றுக் கருத்தமைப்புப் படிமத் தைப் படைத்தார். கடந்த 150 ஆண்டுகளில் இந்திய சமுதாய வரலாறு பற்றிய பல சான்று கள் வெளிவந்துள்ளன. அவை மார்க்ஸுக்குக் கிடைத்ததில்லை. ஜெர்மன் ஆசிரியர்கள் பண் டைக்கால சமஸ்கிருத இலக்கியங்களையும், நீதி நூல்களையும் மொழி பெயர்த்து மேநாடுகளுக்கு அறிமுகப்படுத்தினர்கள். பிரஞ்சு ஆங்கில, டச்சு வாணிபர்கள் குறிப்புகள் எழுதினர்கள். சேசுசபைப் பாதிரிமார்கள் வாடிகளுக்குக்கடி தங்கள் எழுதினர்கள் முகலாய, பாமினி மன்னர் களின் ஆஸ்தான வரலாற்றாசிரியர்கள் ஐரோப் பியர் வருகைக்கு முற்கால வரலாறுகளை எழுதியிருந்தனர். அவைபார்ஸியன் மொழியிலி ருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. தேசீய இயக்கத்தோடு தொடர்புடையவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் வளர்ச்சி பற்றியும் அதன் சமுதாய விளைவுபற்றியும் தேசீய நோக்கில் எழுதினர்கள் (உ-ம். B. D. பாஸு மஜும்தார், முதலியோர்)

இவையனைத்தும் மக்கள் காலத்தில் கிடைத்ததைவிட மிக அதிகமான புதிய விவரங் களை அளிக்கின்றன.

மார்க்ஸின் ஆரம்பக்கருத்தமைப்புப் படிமத் தைச் செயல்பாட்டு அனுமானமாகக் கொண்டு (working hypothesis) தற்கால இந்திய மார்க்ஸீய வரலாற்றாய்வாளர்கள் இந்திய வரலாற்றை ஆராய்கிறார்கள் D. D. கோஸாம்பி, ரொமிலா தாபர், ஹபீப், அமலேந்து குஹா முதலிய பல ஆய்வாளர் இந்திய வரலாற்றை ஆராய்கிறார்கள். இந்தியா பகுதிகளாக மார்க் ஸிஸ்டு ஆசிரியர்கள் எழுதிய நூல்களை பீபிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ் வெளியிட்டுள்ளது.

இந்திய வரலாற்றில் ஆர்வம் கொண்டுள்ள நமது தலைமுறையினருக்கு மார்க்ஸின் இந்நூல் ஒரு ஒளிமிக்க முறையியலைக் கொடுக்கிறது. 1853—1858 வரை மார்க்ஸை அறிவதில் கூடப்

பின் தங்கியுள்ளார். ஆனால் தமிழக வரலாறு பற்றிய ஆர்வம் தோன்றியிருக்கும் இக்காலத்தில் காலந்தாழ்ந்தாவது இந்நூல் வெளிவருவது மிகவும் பயனுடைதே.

மொழிபெயர்ப்பாளர்கள் மூலத்தின் கருத்தமைப்பு முழுவதும், மார்க்ஸின் ஈடு இணையில்லாத நகைச்சுவையும், இளிவரலும், அங்கதமும், தெளிவும் உடைய நடைக்கொப்ப தமிழில் ஒரு நடையை உருவாக்கி மொழிபெயர்த்துள்ளனர். ஆங்கில மொழிபெயர்ப்பிலுள்ள அடிக்குறிப்புகளைத் தவிர தமிழ் வாசகர்களுக்குத் தேவையான குறிப்புகளையும் அடிக்குறிப்புகளாக மொழிபெயர்ப்பாளர்கள் தந்துள்ளனர்.

இந்திய வரலாற்றில் ஆர்வமுடைய தமிழர்கள் சிந்தனையூன்றி கற்க வேண்டிய நூல். நன்முறையில் மார்க்ஸின் இந்திய வரலாறு பற்றிய கருத்தமைப்புப் படிமத்தை தமிழில் வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தினர் தமிழரனைவருடைய நன்றிக்குரியவர்களாவர்.

நா. வா.

-----

# பெரியபுராணத்தில் அடியார்க்குச் சோதனைகள்

உ. மீனுட்சிசுந்தரம்

திருத்தொண்டர் புராணத்திற்கு சைவ சமயத்தார் வைத்த உபசார வழக்குப் பெயர் பெரிய புராணம். இப்பெயர் சமணர் நூலான மாபுராணத்தின் முழுத்தமிழ் மொழிபெயர்ப்பே. குறிப்பிட்ட சமயம் முழுமுதற் கடவுளாகக் கருதி வழிபடும் தெய்வத்தை வணங்கி, வழிபட்டு, அச்சமய குரவர்க்குத் தொண்டாற்றியோ, வழிபட்டோ, அடியார் குழுவில் இடம்பெற்றவர்களது கற்பனை கலந்த புராண வரலாறுகள் எல்லாச் சமயங்களிலும் உண்டு. கத்தோலிக்கர்கள் Los Sanctorum என்ற லத்தீன் நூலில் அடியார் வரலாறுகளைத் தொகுத்து எழுதியுள்ளார்கள். அண்டிரிக் அண்டிக்கு சாமியார் இதனை அடியார் வரலாறு என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். பௌத்தர்கள் 'தேரிகதா' என்ற தலைப்பில் பெண்-துறவியரின் வாழ்க்கை வரலாறுகளைத் தொகுத்துள்ளார்கள். வைணவர்கள் குருபரம்பரை, குருபரம்பரைப் பிரபாவம் என்ற இரு நூல்களில் அவர்களது முற்காலத் தமிழ் திருமாலடியார்கள் வரலாறுகளைத் தொகுத்துள்ளார்கள். அது அனைத்திந்திய சமயமாகப் பரவிய பின்னர், பல இந்திய உபநாடுகளின் அடியார்களின் வரலாற்றை பக்த விஜயம் எனத்தொகுத்துள்ளார்கள்

இவ்வகையான இலக்கியங்களில் 'அடியார்' என்ற தகுதிபெற அவர்கள் தேரிய சோதனைகளும், ஆற்றிய அற்புதங்களும், கடவுட் பற்றில், பல கடுமையான சோதனைகளையும் மீறி ஊன்றி நின்ற பான்மையும் இன்னும் அடியார் பெருமை போற்றும் விவரங்களும் கதைக் கூறுகளாக இருக்கும்.

பெரிய புராணத்தில் 64 அடியார் வரலாறு கூறப்படுகிறது. அதில் பல சாதிகளையும், வருணங்களையும் சேர்ந்த அடியார்கள் புராணங்கள் கூறப்படுகிறது. அவர்களில் சாதியில் உயர்வான அந்தஸ்துடையவர்களும் உள்ளன. மிகப்பல அடியார்களுக்கு, அடியார் என்ற தகுதிபெறச் சோதனைகள் உள்ளன. அவற்றில் குலம், சாதி, வர்க்கத்தேற்ப சோதனைகளின் கடுமை வேறுபடுகிறது. இதற்குக் காரணம் என்ன? இத்தகைய சோதனைகள் சந்தேகத்தைப் போக்க, பிரமாணங்கள் என்ற பெயரில் நியாயத் துறையில் வழக்கில் இருந்தன. அச்சோதனைகளும் சாதிக்குச் சாதி வேறுபட்டன. அடியார்க்குச் சோதனைகள் எவை என்பதை முழுதும் கூறி, வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி, இச்சோதனைகளின் கடுமையின் வேறுபாட்டிற்குக் காரணத்தை, மனு வழிவந்த மிதாட்சர நூலான மனு ஞானச் சுவரியத்தில் கூறப்படும் பிரமாணங்களிலிருந்தும், அதன் அடிப்படையான குலப்பிறப்பிற்கு பண்டைப் பிறப்பின் செயல்களின் விளைவுகளே காரணம் என்ற கொள்கை (விதி, ஊழ்)யையும் சிவனடியார் வரலாறுகளில் சோதனையோடு பொருத்திக் காட்டுகிறார். இதனை முன்பு திரு. அண்ணுத்துரையவர்கள், சோதனைகளின் கடுமை வேறுபாட்டிற்கு பிராமண, பிராமணரல்லா குலப்பிறப்பே காரணம் எனக் காட்ட முயன்றுள்ளார்கள். இவ்வாசிரியர், பிராமணரைப் போல சில அரசர் வணிகர்களும் சோதனைகளில் கடுமையின்றியே அடியார் தகுதி பெற்றதைச் சுட்டிக்காட்டி' வர்க்க வேறுபாடே, கடுமை வேறுபாட்டிற்கும் காரணம் என்று நிறுவியுள்ளார். குலவேறுபாடுகளை நிலைநிறுத்த எழுந்த மனுவின் கொள்கைகள், மனுஸ்மிருதியின் வழிநூல்கள் மூலம் தமிழக மன்னர்களால் நிலைநிறுத்தப்பட்டது என்றும், அதன் அடிப்படைக் கொள்கையான ஒரு பிறப்பிற்கும் முன் பிறப்பு வினைகளுக்கும் உள்ள தொடர்பால் சாதி வேற்றுமைகள் நிலவுகின்றன என்ற சமுதாயக் கொள்கையுமே காரணங்கள் என்று தெளிவாகக் காட்டியுள்ளார்.

— நா. வானமாமலை.

00 செயற்கரிய செயல்களைச் செய்த சிவனடியார்களின் கதைத் தொகுப்பே பெரிய புராணம் என்பார்கள். சிவனடியார்களில் இரண்டு வகை உண்டு என்று சேக்கிழார் கூறுவதிலிருந்து அறிகின்றோம். திருஞானசம்பந்தர், பூசலார், திருநீலநக்கர் போன்று சிவபெருமானையே நேரில் வழிபட்ட அடியார்களும்,

"ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர்
தன்மையால்
நேர வந்தவர் யாவராயினும் நித்தமாகிய
பத்தி முன்
கூர வந்தெதிர் கொண்டு, கைகள் குவித்து
நின்று
ஈரமென் மதுரப்பதம் பரிவெய்த முன்னுரை
செய்தபின் 1,

கொண்டு வந்து, மனைப்புகுந்து, குலாவு பாதம்
விளக்கியே,
மண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்
சனை செய்தபின்,
உண்டி நாலுவிதத்தினில் ஆறுசுவைத் திறத்
தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார் 2.

என்றிவ்வாறு சிவனடியார்களையே வழிபட்ட இளையான்குடிமாறர், அதிபத்தர், கலியர் போன்றவர்களுமாக இரண்டு வகையாகக் காணப்படுகின்றனர். சிவன் மீது அன்பு செலுத்துதல், சிவனடியார்கள் மீது அன்பு செலுத்துதல் ஆகிய இவ்விரண்டைப் போன்று சிறந்தவை வேறெவையும் இல்லை என்று காட்டுவதற்காகவே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடியுள்ளார். 'சிவநெறிக்கண் நின்று சைவ சமயத்தின் மாண்பைத் தம் வாழ்வால் விளக்கம் செய்து காட்டிய நாயன்மார் 3 என்ற ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் கருத்தும் இக்கருத்தை அரண் செய்கின்றது.

0·1 பெரிய புராணத்தில் காணப்படும் அறுபத்து மூன்று தனியடியார்களும் சிவனன்பில் தோய்ந்து நின்றவர்கள் என்று சேக்கிழார் கூறுகின்றார். இந்த அடியார்களில் கீழ்க்குல அடியார்களும் உண்டு. மேற்குலத்தைச் சார்ந்த அடியார்களும் உண்டு. குலம் இன்னதென்று வரையறுத்துக் கூறமுடியாத அடியார்களும் உண்டு. இவர்களின் வரலாற்றில் சிவன் நேரடியாகவோ, சிவனடியாராக வந்தோ இவர்களுடைய சிவனன்பைச் சோதித்துள்ளதாகத் தெரிகிறது. இவ்வாறு செய்யப்பட்ட சோதனைகள் அவர்கள் அடியார்களா அல்லரா என்பதற்கான ஆரம்ப சோதனைகள் அல்ல; சிவனன்பில் எந்த அளவிற்கு முறுகி நிற்கின்றார் என்று மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகத்தான்.

"சீலமே தலைநின்றவர் தந்திறந் தெரிந்தே
ஆலம் உண்டவர் தொண்டர் அன்பெனும்
அமுதுண்பார்"4
"இந்த நன்னிலை இன்னல் வந்தெய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர்வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினர்."5
"திருவருளால் மழை எழுந்து பொழிந்திடுமால்"6

என்றிது போன்று வரும் 'அமைதி கூறும் பாடல்கள் இறைவனின் சோதனையையே விளக்குகின்றன. 7 எவ்விடத்தும் சேக்கிழார் அடியார்களை 'அவன்' என்று ஒருமையால் சுட்டாதது போலவே 'சோதனை' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லையென்றாலும் மேலே குறிப்பிடப்பட்ட பாடற் கருத்துக்கள் 'சோதனை' என்ற கருத்துப்படவே அமைந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

0·2 அறுபத்துமுன்று சிவனடியார்களில், 1. சோதனைக்கே ஆளாகாத அடியார்களும் உண்டு. 2. மிக எளிதான சோதனைக்கு ஆளான அடியார்களும் உண்டு. 3. மிகக் கடுமையான சோதனைக்கு ஆளான அடியார்களும் உண்டு. 4. சிறு சோதனைக்கு ஆளாகி ஓரிரு அற்புதங்கள் செய்த அடியார்களும் உண்டு. 5. வாழ்ந்த வாழ்க்கை முழுவதுமே சோதனைக்கே ஆளாகாமல் சாதனைகளையே (அற்புதங்களையே) செய்து காட்டிய அடியார்களும் உண்டு.

0·3 இவ்வைந்து வகையிலும் சோதனைக்கே ஆளாகாத அல்லது சிறு சோதனைக்கு ஆளான அடியார்களும் அற்புதங்களை நிகழ்த்திக்காட்டிய அடியார்களும் பெரும்பாலும் அந்தணர், அரசர் அமைச்சர் போன்ற மேற்குலத்தவராக இருக்க, மிகக் கடுமையான சோதனைக்கு ஆளான அடியார்களோ பெரும்பாலும் வேடர், புலையர், குயவர், வண்ணார் என்ற கீழினத்தவராகவோ ஏனாதி, சிறுத்தொண்டர், கோட்புலியார் போன்று அரசர் ஆணையை நிறைவேற்றும் கீழ்க்கணத்தவராகவோ இருப்பதை நோக்கலாம்.

0·4 "குறியில் நான்கு குலத்தினராயினும்
நெறியில் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரற்கு அன்பர் எனப்பெறில்
செறிவுறப் பணிந்தேத்திய செய்கையார்"8

என்று இவ்வாறு குலமரபு கருதாமல்தான் அடியார்களைப் பற்றிக் கூறுகின்றேன் என்று சேக்கிழாரே கூறினாலும்கூட மேற்குல அடியார்கள் ஒருவகையிலும் கீழ்க்குல அடியார்கள் வேறு வகையிலும் இறைவனால் சோதிக்கப்பட்டுள்ளதை விளக்குவதற்காகவும் அதற்கான காரணங்களை ஆராய்வதற்காகவும் எழுந்ததுதான் இக் கட்டுரை.

1·0 அடியார்களைத் தனியடியார் என்றும் தொகையடியார் என்றும் சேக்கிழார் பகுத்துள்ளார். தொகையடியார்கள் தில்லை வாழந்தணர்கள், திருவாரூரில் பிறந்தவர்கள் போன்றவர்கள், தனியடியார்கள் அறுபத்து மூவரில் அந்தணர் 16, அரசர் 11, அமைச்சர் 1, வணிகர் 4, குலம் தெரியாதவர் 6 ஆக 38 பேர் தவிர மீதியுள்ள 25 அடியார்களும் நுளையர், இடையர், சாலியர் போன்ற கிழ்க்குலத்தைச் சார்ந்தவர்கள்.[9]

1·1 மேற்குலத்தைச் சார்ந்த அடியார்களில் அந்தண அடியார்கள் எப்படிச் சிவனடியார்கள் ஆனார்கள் என்பதனைப் பார்ப்போம். இசை ஞானியாரும் சடையனாரும் சுந்தரரின் பெற்றோர் என்பதாலேயே அடியவராகியுள்ளனர். இவ்விருவரைப் பற்றியும் ஒவ்வொரு பாடலையே சேக்கிழார் பாடியுள்ளார். வேதத்தைக் கழுத்தளவு நீரில் நின்று சொன்னதற்காகவே வீடு பெற்றார் உருத்திர பசுபதியார். திருஞான சம்பந்தர் மேல் கொண்ட பக்தியால் முப்பொழுதும் நறுமலராலே வழிபட்டதால் சிவகணங்களுக்குத் தலைவராகச் சென்றுவிட்டார் கணநாதர் என்ற அடியார். அந்தண குலத்தில் வந்த சிறப்புலி நாயனார் என்பவர் வந்த அன்பர்க்கு அமுதளித்து ஆண்டவனின் அருள் பெற்றார். இதே போல அடியவரை உபசரிக்கும் பண்போடு அஞ்செழுத்தை ஓதும் பண்பிலும் தலைநின்று முக்தியடைந்த மற்றொரு அடியவரான சோமாசிமாறரும் அந்தணரே, காடவர் கோமான் காஞ்சியில் கற்கோவில் கட்டிய காலத்தில் மனக்கோவில் கட்டியே முத்திபெற்ற பூசலாரும் அந்தணரே. மலர் பறித்துச் சாத்தி அஞ்செழுத்தோதி அரனடி அடைந்த முருகநாயனாரும் அந்தணரே.

இவர்கள் வாழ்க்கையில் இறைவன் சோதனைவைக்கவும் இல்லை; இவர்கள்வாழ்க்கையில் அற்புதங்களும் இடம்பெறவில்லை.

1·2 அடுத்ததாக, அந்தணகுலத்தில் பிறந்து சிறுசோதனைக்கு ஆளான அடியார்களைப் பார்ப்போம். அந்தண குலத்தில் பிறந்த திருநீலநக்கர் சிவபூஜை செய்து கொண்டிருக்கும்போது சிவலிங்கத்தின் மீது சிலந்திப் பூச்சியொன்று சென்றது. அதை அருகிலிருந்த அவர் மனைவியார் வாயால் ஊதி எச்சில்படுத்தி விட்டார் என்பதற்காக அவளைத் தன் மனைவியில்லை என்று சொல்லிக் கோவிலிலேயே விட்டுவிட்டு அடியார் வீட்டுக்கு வந்துவிட்டார். இறைவன் அன்றிரவு கனவில் தோன்றி அவரின் மனைவியார் ஊதிய இடம் தவிர ஏனைய இடம் முழுவதும் கொப்புளமாக இருப்பதைக் காட்டினார். மறுநாள் சென்று தன் மனைவியை அழைத்துவந்தார் திருநீலநக்கர். இவர் அமைந்திருந்த மடத்திற் சம்பந்தர் வந்தார். அவரை இவர் உபசரித்தார். சம்பந்தருடன் பெருமணநல்லூர் மணத்தில் கலந்து கொண்டார். நமிநந்தியடிகள் என்ற அந்தண அடியார் கோவிலில் விளக்கெரிக்கும் வழக்கத்தைக் கொண்டு வாழ்ந்தவர். ஒருநாள் விளக்கில் எண்ணெய்வற்ற அருகிலிருந்த வீட்டில் எண்ணெய் கேட்டார். அங்கு வாழ்ந்த சமணர் 'தண்ணீர் ஊற்றி எரியும்' என்று கேலி செய்தனர். நாயனார் குளத்து நீரை முகந்து விளக்கில் விட்டார். விளக்கு விடியும் வரை நீரால் எரிந்தது. திருநீலநக்கர், நமிநந்தியடிகள் ஆகிய இவ்விருவர் வாழ்க்கையிலும் சிறு சோதனைகள் எதிர்பட்ட போதிலும் நமிநந்தியடிகள் வரலாற்றில் தண்ணீர் ஊற்றி விளக்கெரித்த அற்புதம் அமைந்து கிடத்தல் அறியத்தக்க தொன்றாகும்.

1·3 அந்தணகுல அடியார்கள் பதினாறு பேரில் நால்வர் ஆதிசைவர் என்று சொல்லப்படும் சிவனைத் தொட்டு வணங்கும் உரிமை பெற்ற சிவாசாரியர்கள். இப் பதினாறு பேரில் அப்பூதியடிகள், குங்கலியக்கலயர், சண்டேசுரர், புகழ்த்துணையார் ஆகிய நால்வர் வரலாற்றில் தான் சிறு சோதனைகளும் உள்ளன; அற்புதங்களும் உள்ளன. ஏனையவர்கள் பால் சோதனையே இல்லை.

1·3 அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் என்ற பெயரில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அவருடைய இல்லத்திற்கு அப்பர் வந்தார். அவர்க்கு அமுதூட்ட ஏற்பாடு செய்யும் பொழுது தன் மகன் மூத்தவனை வாழையிலை அரிந்துவர அனுப்பினார். அவன் பாம்பு தீண்டி இறந்துவிட்டான். இச்செய்தியை அடியார் மறைக்க முயன்றும் வெளிப்பட்டு விடுகின்றது. திருநாவுக்கரசர் பாடிய தேவாரத்தால் விடம் நீங்கி சிறுவன்

உயிர் பெற்றான். விசாரசருமர் ஓர் அந்தணச் சிறுவராயிருந்தும் பசுக்களின்மீது கொண்ட பரிவினால் அவற்றை மேய்த்தார். மணலில் சிவலிங்கம் செய்து மாடுகளில் பால்கறந்து அபிஷேகம் செய்தார். இதனைக் கண்ட அவரின் தந்தையார் அவரைத் தடுத்தும் மனம் ஒன்றியிருந்த அடியாரின் செயலில் மாற்றம் ஏற்படவில்லை. காலால் பாற்குடங்களைத் தட்டிவிட்டார் தந்தையார். சிவபூஜைக்கு இடையூறு செய்த தந்தையை அருகிலிருந்த கம்பை எடுத்து அடித்தார் அடியார். அது மழுவாக மாறி கால்களை வெட்டி விட்டது. சிவன் விசாரசருமருக்குச் சண்டேசுரப் பதங்கொடுத்து ஆட்கொண்டார். இதுவே சண்டேசுர நாயனார் வரலாறு.

1·3 குங்கலியக்கலயர் கோவிலில் குங்கலியம் போடுவதனைத் தொண்டாகக் கொண்டவர். அத்திருப்பணியிலே தன் செல்வத்தையெல்லாம இழந்தார். இறுதியில் மனைவியின் தாலியை விற்று உணவு வாங்கிவரச் சென்றவர், வழியில் குங்கலியம் வரக்கண்டு அதனை வாங்கிக் கொண்டு கோவிலுக்குச் சென்றுவிட்டார். இறைவன் அவர் இல்லத்தில் செல்வத்தை நிரப்பி "சாலநீ பசித்தயாய் உன்றன் தடநெடு மனையில் நண்ணிப், பாலின் இன்னடிசில் உண்டு பருவரல் ஒழிக" என்று கூறினார். இவர் திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த லிங்கத்தைத் தன் கழுத்தில் மாட்டி இழுக்க, சோழனின் நால்வகைப் படையும் இழுத்தும் நிமிராத சிவலிங்கம் நிமிர்ந்தது. 'கலயனார் தம் ஒருப்பாடு கண்ட போதே அண்ணலால் நேரே நின்றார்! என்று சேக்கிழார் பாடியுள்ளார். சோழனால் அவன் நால்வகைப் படையால்—முடியாததை அன்பால் சாதித்தார் அடியார் என்று காட்டியுள்ளார்.

1·3 சிவபூசனை செய்து வந்த புகழ்த்துணையார் என்ற மற்றொரு அடியார் வறுமையால் வாடி, பசியால் சோர்ந்து நீராட்டும் பொழுது சிவலிங்கத்தின்மீதே குடத்தைப் போட்டு மயங்கி விழுந்து விட்டார். அன்றிலிருந்து அவருடைய பசிபோக்க இறைவன் தினமும் படிக்காசு வழங்கினார்.

1·4 இனி, சோதனைக்கே ஆளாகாத அந்தண அடியார்களைப் பார்ப்போம். திருஞானசம்பந்தரும் சுந்தரரும் இவ்வரிசையில் முன்நிற்கின்றனர். சம்பந்தர் வரலாற்றில் பதினாறு அற்புதங்கள் அறியக் கிடக்கின்றன. அவையாவன: 1. ஞானசம்பந்தர் என்ற பெயரைப் பெறுவதற்குக் காரணமாக அமைந்த ஞானப்பால் உண்டது. 2. சின்னக்கைகள் நோகுமே என்று சிவன் பொற்றாளம் கொடுத்தது, 3. ஏறிச் செல்வதற்கு முத்துப்பல்லாக்கும் முத்துக்குடையும் ஊதுகருவிகளும் பெற்றது. 4. வெயிற்கொடுமை தணிக்கத் திருப்பட்டிச்சுரத்தில் பெரிய முத்துக்குடை பெற்றது 5. ஆவடுதுறையில் தந்தையின் யாகத்திற்காக ஆயிரம் பொற்காசுகள் பெற்றது. 6. திருமருகலில் பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்பெற்றெழச் செய்தது. 7. திருவீழிமிழலையில் தினந்தோறும் படிக்காசு பெற்றது. 8. திருமறைக்காட்டில் அப்பர் திறந்த கதவை ஒரே பாடலால் அடைக்கச் செய்தது. 9. மதுரையில் மடத்தில் தங்கியிருக்கும் பொழுது சமணர்கள் வைத்த ஏவுதல் தீயைப் பாண்டியனுக்கே ஏவி வெப்பு நோயாக்கியது. 10. அந்நோயைத் திருநீறுபூசிக் குணமாக்கியது. 11. நெருப்பிலே தேவார ஏட்டினைப் போட்டு வேகாமல் எடுத்தது. 12. வைகையாற்றிலே ஏட்டினைப் போட்டு நீரோட்டத்தை எதிர்த்துப் போக வைத்தது. 13. கூன் பாண்டியனின் உடற்கூனை நீக்கியது, 14. திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனையாக்கியது. 15. திருமயிலாப்பூரில் பாம்பு தீண்டி இறந்த சிவநேசர் என்ற வணிகர் மகள் பூம்பாவையின் எலும்பைப் பெண்ணாக்கியது. 16. பெருமணநல்லூர் சோதியில் அடியார் குழாத்தொடும் கலந்தது, என்பனவே அப்பதினாறு அற்புதங்கள்.

1·4 சுந்தரர் வரலாற்றிலும் பதினாறு அற்புதங்கள் உள்ளன. அவையாவன: 1. இறைவன் முதியவராக வந்து அடிமை ஓலை ஒன்று காட்டி அடியவராக ஆட்கொண்டது. 2. பரவையாருக்காக நெல் வேண்ட குண்டையூரில் நெல் பெற்றது. 3. அதைக் கொண்டு போகப் பூதகணங்களைப் பயன்படுத்தியது. 4. திருமுதுகுன்றில் பன்னிரண்டாயிரம் பொற்காசுகள் பெற்றது. 5. அப்பொற்காசுகளைத் திருமணிமுத்தாற்றில் போட்டு, திருவாரூர் குளத்தில் எடுத்தது. 6. குருகாவூருக்குச் செல்லும் வழியில் இறைவனே மறையவராக வந்து தண்ணீரும் பொதிசோறும் கொடுத்தது. 7. திருக்கச்சூரில் இறைவனே இல்லங்கள் தோறும் சென்று சோறு யாசித்துக்

கொடுத்தது. 8. திருவொற்றியூரில் சங்கிலியாலரச் சத்தியம் செய்து கொடுத்துத் திருமணம் செய்தது. 9. அதனை மீறித் திருவாரூர் சென்றதனுல் கண்களை இழந்து ஊன்றுகோல் பெற்றது. 10. ஒற்றைக் கண் பெற்று பின்னர் மற்றைக் கண்ணையும் பெற்றது. 11. சிவன் அர்ச்சகராக வந்து பரவையின் ஊடலைத் தீர்த்து வைத்தது. 12. சுந்தரர் இறைவனைத் தூது விட்டதால் அடியவரே அல்ல என்ற ஏயர்கோன் கலிக்காமருக்கு இறைவன் வயிற்று நோயைக் கொடுத்தான். அவர், வயிற்று நோயோடு வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறக்க உயிர் கொடுத்தது. 13. மலை நாடு செல்லும் வழியில் திருப்புக் கொளியூரில் முதலையுண்ட பாலனை மீட்டது. 14. திருக்கண்டியூரிலிருந்து திருவாரூருக்குச் செல்ல, காவிரி வெள்ளம் வற்றி வழிவிட்டது. 15. சேரமான் கொடுத்த பரிசுப் பொருள்களை வேடர்கள் கவர, இறைவன் மீட்டுக் கொடுத்தது. 16. சேரமான் பெருமாளுேடு வெள்ளை வாரணத்தில் கயிலை சென்றது என்பனவாம்.

1·4 திருநாவுக்கரசர் வரலாற்றில் காணப்படும் அற்புதங்களைப் பார்ப்போம். ஞானசம்பந்தரைப் போலல்லாமல் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறியதால் அப்பருக்குப் பல்லவனுல் நான்கு கடுமையான தண்டனைகள் கொடுக்கப்பட்டன. அவையாவன: 1. நீற்றறையில் இட்டது. 2. நஞ்சு கொடுக்கப்பட்டது. 3. கொல் யானையை ஏவிவிட்டது. கல்லிலே கட்டிக் கடலிலே தள்ளப்பட்டது இந்நான்கு தண்டனைகளையும் அப்பர் அற்புதங்களாக ஆக்கி அதிலிருந்து பிழைத்துவிட்டார். பல்லவன் தண்டனை கொடுக்கும் முன்பாக, திலகவதியார் என்ற அவரின் தமக்கையார் வேண்டுதலால் இறைவன் சூலைநோய் என்ற வயிற்றுவலியை ஏவினுன். அதனைத் திருநீறு பூசிக் குணமாக்கினுர். இதுவே அப்பரடிகள் வரலாற்றிலுள்ள முதலற்புதம். மதமாற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் கொடுக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. மேலே சொல்லப்பட்ட ஐந்து அற்புதங்களோடு, 6. அப்பூதியடிகளின் மகனை உயிர் பெற்றெழச் செய்தது 7. திருப்பைஞ்ஞீலிக்குப் போகும் வழியில் இறைவன் மறையவராக வந்து பொதி சோறும் தண்ணீரும் கொடுத்தது. 8 வீழிமிழலையில் படிக்காசு பெற்றது. 9. திருமறைக்காட்டில் மறைக்கதவைத் திறந்தது. 10. கயிலைக் காட்சியை ஐயாற்றிலே கண்டது என்று பத்து அற்புதங்களே அப்பர் வாலாற்றில் பார்க்கக் கிடைக்கின்றன.

2·0 அரச அடியார்கள் பதினேரு பேரில் 1· ஆதித்தன் என்ற வேளிர்குல அரசரான இடங்கழியாரின் கருவூலத்திலே சிவனடியார் புகுந்து திருடிவிட்டார். அதனுல் கருவூலத்தினையே சிவனடியார்களுக்குத் திறந்துவிட்டுவிட்டார். 2. ஐயடிகள் என்ற காடவர்கோமான் சிவத்தலங்கள் தோறும் சென்று வெண்பாப் பாடினுர். 3. கழற்சிங்கர் என்ற மற்றொரு அரச அடியார் சிவபூசனைக்குரிய மலரை எடுத்து நுகரக் காரணமாக இருந்த கையை வெட்டிவிட்டார். 4. தில்லை வாழந்தணர்கள் முடிசூட மறுத்துவிட்டதால் கவலையோடு உறங்கிய கூற்றுவநாயனுர் என்ற அரசரின் கனவில் சிவன் தோன்றி தன் திருவடியையே முடியாகச் சூடினுர். 5. கோச்செங்கட் சோழன் கோவில்களுக்குத் தானம் செய்தார். 6. நரசிங்கமுனையரையர் அடியார்களுக்குப் பொருள் வழங்கினுர். 7. சிவகாமியாண்டார் என்ற அடியவரின் சிவபூசைக்கு இடையூருகத் தன் பட்டத்து யானை விளங்கியதால் தன்னையே கொல்லத் துணிந்தார் புகழ்ச்சோழர். 8. உவர்மண் மூட்டையைச் சுமந்துவந்ததால் உடம்பெல்லாம் வெண்ணீறு சண்ணித்த மேனியராகக் காட்சியளித்த வண்ணுரை வணங்கினுர் கழற்றிற்றறிவார். இவர் தில்லைக் கூத்தனின் சிலம்பொலியைக் கேட்டவர். சுந்தரருடன் கயிலை சென்றவர். 9. சமணமதம் பாண்டிநாட்டில் அழிந்து சைவசமயம் தலைதூக்க திருஞானசம்பந்தரை குலச்சிறையார் என்ற மந்திரிமூலம் வரவழைத்தார் மங்கையர்க்கரசியார். 10. அவர்க்குக் கணவரான பேற்றினைப் பெற்றவர் நெடுமாறர். என்றிதுபோன்ற காரணங்களுக்காக மிக எளிதாக இவர்கள் அடியார்களாகியுள்ளனர்.

2·1 அரச அடியார்களில் மெய்ப்பொருள் நாயனுர் மட்டுமே வஞ்சகமாகக் குத்திக் கொல்லப்பட்டு முக்தி பெறுகின்றுர். மலாடர் கோமானே இந்த மெய்ப்பொருள் நாயனுர். இவர் ‘திரை செய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே’ சிந்தை செய்யும் இயல்பினர். அவனருட் பகைவன் அவரைப்போரிலே வெல்ல முடியாமல் வஞ்சகமாகக் கொல்லக் கருதி

சிவவேடந்தாங்கி வந்து குத்திவிட்டான். அப்பொய்யனைக் கொல்லப் பாய்ந்த தன் மெய்க்காவலன் தத்தனைத் தடுத்ததோடு பாதுகாப்பாக அப்பகைவனை அப்புறப்படுத்துவதற்குப் பணித்துவிட்டு இறந்துவிடுகின்றார்.

2·2 மெய்ப்பொருள் நாயனார் போலவே வஞ்சகமாகக் குத்திக் கொல்லப்பட்ட மற்றொரு அடியவர் ஏனாதி நாதர் என்பவர். ஈழகுலச் சான்றோரான இவரொரு படைத்தலைவர். அதிசூரன் என்ற இவருடைய விரோதி இவரை வாளால் எதிர்க்க வகையறியாது வஞ்சகத்தால் எதிர்த்தான். பலகை (கேடயம்) யால் மறைந்திருந்து 'வெண்ணீறு நெற்றிவிரவப் புறம்பூசிய சிவவேடத்தைத் திடீரெனக் காட்டினான் போர்க்களத்திலே. ஏனாதி நாதர், சிவனடியாரைக் கொல்லாது வாளா நின்றார். அத்துடன், 'வாளும் கேடயமும் அற்ற எதிரியை ஓர் சிவனடியார் கொன்றார்' எனற பழிச்சொல் கூட அதிசூரனுக்கு வரக்கூடாது என்பதற்காக எதிர்ப்பார்போல் எதிர்க்க 'முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்.'

2·3 இவ்விருவர் வரலாற்றிலும் இவ்வாறு அடிப்படைக் கருத்து ஒன்றுயமைந்திருக்கின்றது. அதாவது 'திருநீற்றின் ஒளிவிளங்கவே' இவ்விருவரும் உயிர்கொடுத்துள்ளனர். சிவனடியாரின் வேடத்தைக் கண்டவுடனேயே அவரை வழிபட வேண்டும் என்ற அதீத பக்தியுணர்வே (கழறிற்றறிவார் வண்ணாரை வணங்கியது போல) பாராட்டற்பாலது என்று சித்திரித்த சேக்கிழார் அத்துடன் நில்லாது சிவனடியார்கள் வேடத்தில் எதிரிகளே வந்தாலும் கூட அவர்களால் கொல்லப்படுவதற்குக் கூடக் குறுக்கே நிற்காமல் தம் உயிரையும் கொடுக்கவேண்டும் என்பதனையே இவ்விருவர் வரலாறுகளால் விளக்கிவிடுகின்றார். சேக்கிழார் காலத்திலோ அன்றி அதற்குமுன்போ சிவனடியார்கள் வேடத்திலேபோலிச் சிவனடியார்களும் விளங்கினர் என்பது இதனால் விளக்கமாகிறது.

2·4 அரச அடியார்களில் மெய்ப்பொருள் நாயனார் தவிர வேறெவர்க்கும் சோதனைகளே இல்லை என்பதுவும் அவர்கள் மிக எளிதாக அடியவர் என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார்கள் என்பது அறியத்தக்க தொன்றாகும்.

3·0 இனி, வணிகர்குல அடியார்களைப் பார்ப்போம். வணிககுல அடியார்கள் நால்வர். இவருள் அமர் நீதியார் ஒருவர். இவர் சிவனடியார்களுக்கு ஆடைகளும் உணவும் அளித்து வந்தார் அதற்காக மடம் அமைத்தார். சிவன், அடியவராக வந்து கோவணத்தைக் கொடுத்து, வைத்திருக்கச் சொல்லிச் சென்றார். கோவணம் 'அவனருளால்' மறைந்துவிட்டது. 'நீர் செய்யும் வாணிபம் அழகிது' என்று அவர் சொன்னதால் துலாவில் மற்றைக் கோவணத்தின் எடைக்குச் சமமாகப் பொன்னும் பொருளும் வைத்தும் சமமாகவில்லை. அடியவரே மனைவி, மகனுடன் துலாவின் தட்டில் ஏறி அமர்ந்தார். அப்பொழுதுதான் கோவண எடைக்குச் சரியாயிற்று. இவ்வாறு அடியவரின் கோவணத்திற்காகத் தம்மையும் தம் குடும்பத்தையும் இழக்கத் தயாரானதால் அடியாரானார்.

3·1 இயற்பகையார் என்ற மற்றொரு வணிக அடியார் 'கற்பின் மேம்படு தன் காதலியை' சிவனடியாராக வந்த இறைவன் வேண்ட, உடனே கொடுத்து விட்டார். இச்செயல் ஏற்றதுஅன்று என்று கருதி எதிர்த்த சுற்றத்தவரைக் கொன்று குவித்தார். இறைவன் 'ஓலம்' என்று ஓசையெழுப்பி விந்தை காட்டி மறைந்தான்.

3·2 அடியவர்க்குப் பாத பூஜை செய்யும் பணியில் நீர் ஊற்றிக் கொண்டிருந்த தம் மனைவியார் தவறிவிட்டதற்காக அவர் கையை வெட்டிவிட்டார் கலிக்கம்பர். இவரும் வணிகரென்று குறிப்பிடப்படுகின்றார்.

3·3 காரைக்காலில் வாழ்ந்த தனதத்தனின் மனைவியான புனிதவதியார் தம் கணவன் கொடுத்தனுப்பிய இரு மாங்கனிகளில் ஒன்றைக் கணவன் வருமுன் வந்த சிவனடியார்க்கு வழங்கிவிட்டார். கணவன் இரண்டாவது கனியைக் கேட்க சிவனருளால் வரவழைத்துக் கொடுத்தார். அது கணவனுக்கு அற்புதமாகத் தெரிய மீண்டும் அவ்வற்புதத்தைச் செய்யச்சொல்லி செய்ததால் நம்பி அவளைத் தெய்வமகள் என்றெண்ணி நீங்கிச் சென்றுவிட்டான். காரைக்காலம்மையார் பேய் வடிவத்தோடுகயிலைக்குச் காலாலும் தலையாலும் நடத்து சென்று இறைவனால் 'அம்மையே' என்று புகழப்பட்டு அடியவரானார்.

3·4 இவ்வாருக, வணிககுல அடியார்களுக்கு இறைவன் வைத்த சோதனைகள் அந்தண, அரச குல அடியவர்களுக்கு வைத்துள்ள சோதனைகளை விடத் தன்மையால்கடுமையாக விளங்குவது கவனிக்கத்தக்கதொன்ருகும்.

4·0 இனி அடுத்து வேளாளர் என்று குறிக்கப்பட்டுள்ள அடியார்களைப் பற்றிப்பார்ப்போம். வேளாளர் என்ற குலத்திலே பன்னிரு அடியார்கள் உள்ளனர். இவர்களுள் திருநாவுக்கரசரும் வேளாளரே. அவர் தேவாரம் பாடிய மூவருள் ஒருவர். அவரைப் பற்றி முன்னரே பார்த்துவிட்டோம்.

4·1 வேளாளரான தாயனர் செந்நெல் இன்னமுது செங்கீரை மாவடு ஆகியவற்றைத் தினமும் இறைவனுக்கு அமுது செய்விப்பார். 'களிறுண் விளங்கனி போல' மேவு செல்வம் யாவும் அதனல் அழிந்தது. உடைமை உழவராக விளங்கியவர் அன்ருடக் கூலிபெறும் உழவராக மாறிவிட்டார். கூலியாகச் செந்நெல் கிடைத்தால் அதனை இறைவனுக்கே அமுதாக்கினர். சோதனையாகக் கூலிநெல் முழுவதும் செந்நெல்லாகவே கிடைத்தது. அந்நெல்லிலிருந்து ஆக்கும் அமுதத்தை இறைவனுக்குப் படைத்துவிட்டு வெறும் கீரையை அவித்துச் சாப்பிட்டு நாளைக்கழித்தார். கீரையும் கிடைக்கவில்லை. தண்ணீர் குடித்தே சிவப்பணி செய்தார். ஒருநாள் கோயிலுக்கு இறைவனுக்குரிய உணவும் ஆனந்துமெடுத்துக் கொண்டு தாயனரும் அவர் மனைவியாரும் செல்லும் வழியில், வயல்வெளியில் கால் இடறி அம்மையார் விழ கூடையிலிருந்த பொருள்கள் கொட்டி விட்டன. சிவத் தொண்டிற்கு இடையூறு வந்துவிட்டதையறிந்து கழுத்தில் அரிவாளைப் பூட்டி அறுக்கத் தொடங்கிய பொழுது, அரிவாட்டாயர் என்ற பெரையும் பெற்று முக்தியையும் பெற்றுவிட்டார்.

4·2 இளையான்குடிமாறர் என்ற மற்ருெரு வேளாள அடியார் 0·0 பத்தியில் சொல்லப்பட்டதுபோல சிவனடியார்களுக்குத் தினமும் உணவு வழங்கியதாலேயே வறியவராஞர். மாரிக்காலத்து மழை இருளில் அடியவர் வேடத்தில் சிவன் வந்தான், திருப்பணிக்கண் முதிர்ந்த அவருடைய கொள்கையை உலகுக்கு வெளிப்படுத்துவதற்காக நடுஇரவில் வயலுக்குச் சென்று நீரில் மிதந்த விதைத்தநெல் முளையை வாரிவந்தார். விறகுக்கு மனையின் அலக்கினைப் பயன்படுத்தினர். துணை உணவிற்காகக் குழி நிரம்பாத புன்செய்க் கீரையை 'பாசப் பழிமுதல் பறிப்பார் போல' பறித்து வந்து நல்கினர். உணவும் கறியமுதும் ஓரிரவுக்குள் இவ்வாறு கடுமையாக உழைத்து ஆக்கிப் படைக்கப்பட்டவுடன் அடியவர் மறைந்துவிட்டார் தம்பதியர் இருவர்க்கும் வீடுபேறளித்தான் சிவன்.

4·3 வேளாளர் என்று குறிப்பிடப்படும் கோட்புலியார் ஒரு சிறந்த போர்வீரர். மன்னர்க்குத் துணையாக போருக்குச் சென்று வென்று பெற்ற பொருளில் கூலிபெற்று அதனை இறைவனுக்கு அமுதாக்கினர். இவ்வாறு பெற்ற நெல்லைத் 'திருவிரையாக் கலி'யாக்கிச் சுற்றத்தார் யாவர்க்கும் அதனை எடுக்கக் கூடாது என்று கட்டளையிட்டுவிட்டு ஒருதடவை போருக்குச் சென்றிருந்த பொழுது பஞ்சம் தலைவிரித்தாடியது. பஞ்சம்போக்க, அக்கூட்டிலுள்ள நெல்லை அவர் சுற்றத்தார் உணவாக்கிக் கொண்டனர். போரிலிருந்து மீண்ட கோட்புலியார் இதனையறிந்து சினங்கொண்டு தம் சுற்றத்தார் அனைவரையும் கொலைவாளால், தீயவினைப்பயந் துணிப்பார் போலக்' கொன்று குவித்தார். 'தாய்ப்பால் மட்டுமே குடிக்கக் கூடிய இளம்பிள்ளை ஒன்றைக்கூட அவ்வுணவை உண்ட தாயின் பாலைக் குடித்தது என்பதற்காக கொன்ற அளவிலே சிவன் அவர்க்கு வீடளித்தான்.

4·4 சுந்தரர் இறைவனை பரவையார்பால் தூதனுப்பியது தவறு என்று கருதி அவர்மீது பகைகொண்டு அவர் அடியவரே இல்லை என்ருர், ஏயர்கோன் கலிக்காமர் என்ற மற்ருெரு வேளாள அடியார். இருவர்க்கும் நட்பு ஏற்படுத்த கலிக்காமருக்குச் சூலைநோய் என்ற வயிற்றுவலியைக் கொடுத்து, "உனை வருத்தும் சூலை வன்ருெண்டன் தீர்க்கில் அன்றி முந்துற ஒழியாதென்று" அந்நோய் சுந்தரராலேயே தீரும் என்று மொழியக் கேட்டு அப்படி அவரால் தீர்க்கப்படுவதைவிட இப்படியே இறப்பதுமேல் என்று வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்த பிறகே வேளாளரான கலிக்காமருக்கும் ஆதி சைவரான சுந்தரர்க்கும் இடையே நட்பு

உண்டாக்கி, முன்னவர்க்கு அதனால் முக்தியும் அளிக்கிறார் சிவபெருமான்.

4·5 செருத்துணையார் என்ற அடியாரின் பெயர், அவர் வேளாளராயினும் படைத்தலைவராக விளங்கியிருக்க வேண்டுமென்று உணர்த்துகின்றது. இவர் திருவாரூர் கோவிலில் திருத்தொண்டு செய்துவந்த போது, பல்லவர் கோச்சிங்கரின் மனைவியருள் ஒருத்தி இறைவனுக்குச் சூட்ட இருந்த மாலையை முகர்ந்து பார்க்க இவர் அவள் மூக்கை அரிந்துவிட்டார்; அதனால் முக்தி பெற்றார். முனையடுவார் என்ற மற்றொரு வேளாளஅடியாரும் படைத்தலைவராக விளங்கியிருக்க வேண்டும்.[10] அதனால் பெறும் கூலி நெல்லையும் நிதியையும் அடியார்க்கு அமுதளிக்கும் தொண்டுபுரிந்தவர்.

4·6 சிவனடியார்களை இகழ்ந்து பேசுபவர்களின் நாக்கை அரியும் கொள்கை படைத்திருந்ததால் காரணப் பெயராகப் பெற்றவர் சத்தியார் என்ற வேளாள அடியார். இவரும் படைக்கருவியுடன் திரிந்திருக்கக் கூடிய படைத்தலைவராக இருக்க வேண்டும். புகழ்ச்சோழன் என்ற அநபாயன் மரபில் வந்த சோழனொருவன் ஆண்ட காலத்தில் விளங்கியவர் எறிபத்தர். இவர் பக்தர்களுக்கு வரும் இடையூறைப் போக்க எப்பொழுதும் மழு என்ற கொலைக் கருவியுடன் திரிந்தவர். சிவகாமியாண்டார் என்ற முதியவர் இறைவனுக்கு குடலையில் பூக்கொண்டுசென்றார். புகழ்ச்சோழனின் பட்டத்து யானை வெறிகொண்டு திரிந்து சிவனுக்குரிய அடியவரின் பூக்குடலையைச் சிதறிவிட்டது. அடியவர் 'சிவதா' என்றுஓலமிட, எறிபத்தர் அந்த யானையின் துதிக்கையைத்தன் மழுவால் வெட்டிக் கொன்றார். உடன் வந்த ஐந்து பாகர்களும் அவரை எதிர்க்க, அவர்களையும் கொன்றார். பட்டத்து யானையும் பாகர்களும் கொலை செய்யப்பட்ட செய்தி கேட்டுப் படையொடு வந்து, செய்தவர் சிவனடியார் என்று கண்டு, தன்னையும் கொல்லுமாறு உடைவாளைக் கொடுத்தான் அரசன் அந்த வாளால் எறிபத்தர் தன்னையே கொல்லப் புகுந்த வேளையில், 'பெரியோர் செய்கை இருந்தவாறிது என் கெட்டேன்' என்று கூறி அச்செயலைத் தடுக்கும் பொழுது தொண்டரே உமது அன்பினைக் காட்டவே யானையை மலர் சிந்த வைத்தோம்' என்று வானொலி எழுந்தது. இறந்த யானையும் பாகர்களும் உயிர் பெற்றெழுந்தனர்.

4·7. சிவலிங்கங்களைக் கண்டால் கல்லால் அடிக்கக் கூடியவர் சாக்கியர். இவரும் வேளாளர் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் பௌத்த மதத்திலிருந்து சைவசமயத்திற்கு வந்திருக்க வேண்டும். ஒரு நாள்தம் பழக்கத்தை மறந்துஉணவுண்ண அமர்ந்தவர் எழுந்து சென்று கல்லெறிந்து வந்தார்; முக்தி பெற்றார். மற்றவர்களை நோக்க இவர் மிக எளிதாக அடியாராகியிருப்பது மற்ற மதத்தவரை சைவ சமயத்திற்கு ஈர்க்கின்ற முறையில் அமைத்திருக்கின்றது என்று கொள்ளவேண்டும்.

4·8 கடைசியா வாழும் கஞ்சாறூரில் வேளாண் குடியில் பிறந்தவர் மானக்கஞ்சாறர் சிவபெருமானின் தொண்டர்க்கு ஏவல் செய்யும்தொண்டர். அந்தணர்க்கு அடியார்; அவர்தம் குறிப்பறிந்து ஏவல் செய்பவர். நெடுநீள் குழந்தையின்றிப் பெற்ற பெண்ணின் திருமணத்தன்று 'மாவிரதர்' வடிவில் சிவன் அடியாராக வந்தார். வந்தவரின் கால்களில் பணியச் சொன்னார் மணக்கோலத்தில் இருக்கும் தம் மகளை. தாழ்ந்தெழுந்த மங்கையின் கூந்தல் 'நமக்குப் பஞ்சவடிவிற்கு ஏற்றது'என் றுஅடியவர்கூற,உடனே மானக்கஞ்சாறர் அறுத்துக் கொடுத்தார். அடியவரை ஆட்கொண்டு ஆண்டவன் மறைந்தான்.

4·9 திருவாரூர் மண்டபத்திலிருந்த அடியவர்களை மதிக்காமல் சென்றதால் சுந்தரர் சிவனடியாரே இல்லை என்று விறன்மிண்டர் என்ற வேளாள அடியார் கூறிய பிறகே சுந்தரர் அடியவர்களை வணங்கி, திருத்தொண்டத் தொகை பாடினார். இவ்வாறு பெரிய புராணத்திற்கு மூல நூல் எழுத்திற்குக் காரணராக இருந்ததால் விறன்மிண்டர் சிவனடியாரானார்.

4·10 சூதாட்டத்தால் பொருள் பெற்றுச் சிவனடியாரை உபசரித்த மூர்க்கர் சில வேளைகளில் சூதில் தோற்றுப் பொருள்தர மறுப்பவர்களைக் குத்திக் கொல்லும் இயல்பினர். இவரைப் போன்றே ஆழ்வார்கள் பன்னிருவரில் மறவர் குலத்தில் வந்த திருமங்கையாழ்வார் நாகை விகாரம் போன்ற பௌத்த சமண விகாரைகளையும் பள்ளிகளையும் கொள்ளையடித்து ஸ்ரீவைஷ்ணவர்களை ஆதரித்தது இத்துடன் இணைத்து எண்ணத்தக்கதாகும்.

4·11 வாயிலார் என்ற வேளாளர் அந்தண ராகிய பூசலார் போல மனக்கோவிலிலே சிவனை வைத்து நாளும் வழிபட்டு முக்தியடைந்தவர். ஆனால் அந்தணராகிய பூசலார் அரசன் பல்லவனால் பாராட்டப்பட்டது போல வேளாளரான வாயிலாரின் சாதனை பாராட்டப்படவில்லை என்பது பார்க்கத்தக்கதாகும்.17

4·12 இவ்வாறு பெரும்பாலான வேளாள அடியார்களுக்கு அமைந்த சோதனைகள் அந்தண அரச வணிகரை விடச் சற்றுக் கடுமையாக அமைந்திருப்பது அறியத் தக்கதாகும்.

5·0 குலச்சிறையார், எறிபத்தர் என்ற குலம் தெரியாத அடியார் இருவருட்பட இது வரை 47 அடியார்களைப்பற்றி பார்த்துள்ளோம். குலம் தெரியாதவர்கள் வரிசையிலே எஞ்சியுள்ள கணம்புல்லர், காரியார், தண்டியடிகள், பெருமிழலைக் குறும்பர் ஆகியோருடன் எஞ்சியுள்ள கீழ்க்குல அடியார்களையும் அவர்களுக்கமைந்த சோதனைகளையும் பார்ப்போம்.

5·1 கணம்புல்லை விற்றுப் பெற்ற பொருளை வைத்துக் கோவிலில் திருவிளக்கேற்றியவர் கணம்புல்லர். ஒருநாள் சோதனையாகக் கணம்புல் விற்காததால் அப்புல்லை எரித்து முடியும் தருவாயில் தன் தலையையே எரித்தபோதுதான் கணம்புல்லருக்கு முக்தி கிடைத்தது. கலியர் என்ற செக்கு வணிகர் சிவன் கோவிலில் திருவிளக்கேற்றும் பணியிலேயே தம் செல்வத்தையிழந்தார். மனைவியை விற்றாகிலும் பணியைத் தொடர முயன்றார். மனைவி விலை போகவில்லை. 'மணி வண்ணச் சுடர் விளக்கு யாவில் யான் மாள்வன்' என்றுரைத்து எண்ணெயாகத் தம் இரத்தத்தை வார்க்கக் கழுத்தையரிய, இறைவன் கையைப் பிடித்துத் தடுத்து ஆட்கொண்டார். மூர்த்தியார் என்ற மற்றொரு வணிகர் சந்தனக் காப்புக்குச் சந்தனம் அளிப்பவர். சந்தனக் கட்டையே கிடைக்காத நிலையில் தன் கையையே சந்தனக் கல்லில் அரைத்தவர்.

5·2 அதிபத்தர் வலைஞர். ஒருதலைமீன் வலையில் அகப்பட்டால் 'சிவார்ப்பணம்' என்று சொல்லி விட்டுவிடும் இயல்பினர். சோதனையாகக் கிடைத்த மீனெல்லாம் அவ்வாறே அகப்பட, விட்டுவிட்டு வந்தார். ஒருநாளில் ஒருமீகைப்பட, அதுவும் ஒருதலை மீனாக இருக்க தாமும் சுற்றத்தவரும் பசியால்வாட நேரிடும் என்றுகூட எண்ணாமல் விட்டுவிட்டதால் அடியவராகின்றார். இவ்வாறு தம் மரபுக்கேற்பப் பெருந்தொண்டு மெய்மையால் புரிந்தார் இவர். திருக்குறிப்புத் தொண்டர் என்ற ஏகாலியர் சலவைத் தொழிலாளியாவார். அடியாராக வந்த சிவனின் ஆடையை மாலைக்குள் சலவை செய்து கொடுப்பேன் என்று வாங்கினார். "திருவருளால் மழை எழுந்து பொழிந்ததால்" பணி முட்டுப்பட்டுவிட்டதே என்று எண்ணித் தன் தலையைச் சலவை செய்யும் கல்லிலே மோதப் புகுந்தார்; முக்தி பெற்றார்.

5·3 நேசர் என்ற அடியவர் நெசவுத் தொழில் செய்யும் சாலியர் வகுப்பைச் சார்ந்தவர். சிவனடியார்களுக்கு மேலாடை, கீழாடை, கோவணம் நெய்து கொடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்; அதனால் முக்தியடைந்தவர். பெருமிழலைக் குறும்பர், செல்வம் படைத்தவர்; வந்த சிவனடியார்களுக்கெல்லாம் உண்ணத் தொலையா அமுதூட்டியவர். சம்பந்தரை வழிபட்டு முக்திபெற்ற கணநாதர் போல, நாவுக்கரசர் பெயரையே வழிபட்டு முக்தியடைந்த அப்பூதியடிகள் போல சுந்தரர் பெயரையே நாளும் கூறிக்கொண்டிருந்து அவர் வெள்ளானைமீதும் சேரமான் குதிரைமீதும் கயிலை செல்லும் பொழுது கபாலத்தை பிராணயாமப் பயிற்சியால் கீறி அவர்களுக்கும் முன்னதாகக் கயிலையடைந்தார். இவர் குலம் குறிப்பிடப்படவில்லை. காரியாரும் குலமரபு தெரியாதவர். இவர் தமிழ்க்கோவை செய்து மூவேந்தர்கள்பால் பெற்ற பொருளைச் சிவனடியார்க்குத் தானமாக வழங்கினார். தண்டியடிகள் என்ற மற்றொரு அடியாரின் குலமும் குறிப்பிடப்படவில்லை. இவர் குருடராக விளங்கியும் திருவாரூரில் குளம் தோண்டினார். அத்திருப்பணிக்குச் சமணர் இடையூறு செய்தனர். அக்குளத்தில் மூழ்கி எழுந்து கண்பெற்று சமணர்களின் கண்ணொளியைப் போக்கிய அற்புதத்தை நிகழ்த்தி சமணர்களை அங்கிருந்து விரட்டினார்.

5·4 ஆனாயர் ஆமேய்க்கும் இடையர் குலத்தைச் சேர்ந்தவர். சிவனின் ஐந்தெழுத்தைக் குழலில் ஊதி முக்தி பெற்றார். திருமூலர்

கயிலையில் வாழ்ந்த யோகியருள் ஒருவர் சாத்த னூரில் அந்தணர்களின் ஆமேய்த்து வந்த மூலன் இறக்க வருந்திய பசுக்களின் பரிவு கொண்டு கூடு விட்டுக் கூடுபாய்ந்தார். அவர் இவ்வாறு இடையரானாலும் அம்மூலனின் மனைவியோடும் சுற்றத்தோடும் வாழாமல் மடத்தில் தங்கிவிட்டார். சுற்றத்தவர் அவரின் முனிவர் உடலை எரித்ததால் முனிவராக மாறி ஆண்டிற்கு ஒன்றாக மூவாயிரம் திருமந்திரப் பாடல்களைப் பாடினாராம்.

5·5 சிறுத்தொண்டரின் மெய்த்தன்மை அன்பு நுகர்ந்தருளுதற்கு 'விடையவர் தாம் சித்தம் மகிழ் வயிரவராய்' வந்தார். சிறுத் தொண்டரின் ஒரே மகனைத் தந்தையும் தாயும் மனமுவந்து கொன்று கறிசமைத்துப் படைக்கச் சொன்னார் அச்சிவனடியார். அவர்களும் அவ்வாறு சமைத்தனர். உணவுண்ணும் வேளை யில் சீராளனைப் பெயர்கூறி அழைக்கச்சொல்லி அவனைக் காட்டி அடியார் மறைந்தார்.

5·6 யாழ்ப்பாணர் குலத்தில் பிறந்திருந்த போதிலும் சம்பந்தருடனேயே சென்று யாழ் வாசித்ததால் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குக் கடுமையான சோதனைகள் இல்லை. ஆனால் சம்பந்தர் பாடலுக்கு நிகராக யாழ் வாசிப்பதாக எண்ணி மகிழ்ந்திருந்த பாணரின் செருக்கை யடக்குவதற்காகவே 'யாழ் மூரிப் பண்' சம்பந்த ரால் பாடப்பட்டது என்றுவரும் நிகழ்ச்சி பாணர் சம்பந்தருடன் பழகியதால் மட்டும் உயர்ந்தகுலம் ஆகிவிடமாட்டார் என்ற சேக் கிழாரின் கருத்தைத் தெளிவாகக்காட்டுகின்றது. திருநீலகண்டர் என்ற பெயரில் மற்றொரு அடியவர் உண்டு. ஆனால் அவர் குயவர் குலத்தைச் சேர்ந்தவர். பரத்தை ஒழுக்கம் உடைய அவரை நோக்கி அவர் மனைவியார் என்னைத் தீண்டற்க, 'தீண்டுவீராயின் திருநீல கண்டம்' என்று ஆணையிட்டார். முதுமைவரை உடலுறவு கடிந்து வாழ்ந்த அவரின செயலை உலகுக்குணர்த்த அடியவர் திருவோடு கொடுத்து, அதைத் தொலைக்கவைத்து சத்தியம் செய்யச் செய்கிறார்.

5·7 வேடர் தலைவன் நாகனின் மகனான திண்ணன் கன்னி வேட்டைக்குச் சென்ற இடத்தில் குடுமி மலைத் தேவரைக் கண்டார். தன் தோழர்கள் அழைத்தும் வராமல் அங்கேயே தங்கிவிடுகின்றார். பகலில் வேட்டையாடிய விலங்குகளைச் சுட்டுப் படைப்பது. இரவில் கண்விழித்துக் காப்பது என்று ஐந்து நாட்களைக் கழிக்கின்றார். வழக்கமாக அங்கே பூஜை செய்துவந்த சிவாச்சாரியார் அந்த ஐந்து நாட்களிலும் பன்றியிறைச்சியைச் சிவலிங்கத் துக்கருகில் கண்டு கலக்கம் கொண்டார். அவருக்குத் திண்ணனாரின் அன்பைக் காட்ட சிவன் ஆறாவது நாளில் தன் இடக்கண்ணில் இரத்தம் வரவழைத்தான். திண்ணனார் தன் கண்ணைப் பிடுங்கி சிவலிங்கத்தில் அப்பினார். வலக்கண்ணிலும் இரத்தம் வரத் தன் மற்றைக் கண்ணையும் பிடுங்க முற்படும்பொழுது இறைவன் கண்ணப்பர் என்றபெயரிட்டு ஆட்கொண்டான். கண்ணப்பருக்கு இவ்வளவு கடுமையான சோதனை வைக்கப்பட்டுள்ளது கருதத்தக்கது.[11]

5·8 கடுமையான சோதனைக்கு ஆளானவர் திருநாளைப்போவார் என்ற நந்தனார். இவர் புலையர் குலத்தைச் சார்ந்தவர்.

> "அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழு
> நோயராய்
> ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
> கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
> அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"[12]

என்ற திருநாவுக்கரசரின் இலக்கணத்திற்கு, திருநாளைப்போவாரின் வரலாறே இலக்கியமாக வுள்ளது.

"செம்மையே திருநாளைப்போவார்" என்று சுந்தரரால் திருத்தொண்டத்தொகையில் சுட்டிக் காட்டப்பட்டவர் நந்தனார். இவர் சிவாலயங் களிலுள்ள இசைக்கருவிகட்குத் தோலும் நரம்பும் அபிஷேகத்திற்குக் கோரோசனையும் அளிப்பார். கோவிலின் முன்னே (வெளியே) நின்று பாடி யாடும் இயல்பினர்.[18] திருப்புன்கூரில் குளம் தோண்டினார். அங்கு இவர் கோபுரவாசலுக்கு வெளியே நின்று வணங்க இடையூறாக இருந்த நந்தி சந்நிதியை மறைக்காவண்ணம் ஒதுங்கி யது. இவருக்குச் சிதம்பரம்சென்று நடராஜரைத் தரிசிக்கும் ஆசை வந்தது. ஆனால் தம்குலம் நினைந்து அஞ்சி அணைப்திலர்.[14] இவ்வாறு ஆசையும் அறிவும் தட்டுமறித்து விளையாடத் தாமதித்தார் ஆயினும் ஈற்றில் ஆசை உந்த நாளை நாளை என்று இருந்தவர் துணிந்து புறப்பட்டார்.[15]

தில்லையை அடைந்த அவர் கோயிலுக்கருகில் கூட அல்ல, ஊருக்குள் கூடப் போகாமல் தில்லையின் எல்லையிலேயே வலம் வந்தார். அந்தணர் கனவில் தோன்றிய சிவன் நந்தனுருக்காகச் செந்தழல் வளர்க்கச் சொன்னான். நந்தனர் கனவில் தோன்றி தடையாக இருக்கும் இழிபிறப்பு நீங்க எரிமூழ்கி வரச்சொன்னான். தீயில் இறங்கிய நந்தனர் பூணூலும் திருநீறும் சடைமுடியும் அணிந்த அந்தணர் போல் எழுந்தார். தில்லை நடராசருடன் யாவரும் வியக்கும் வண்ணம் கலந்து மறைந்தார். இவ்வாறு நந்தனர் எரியில் மூழ்கி எழும் கடுமையான சோதனைக்கு ஆளாயினர்.

6·0 இவ்வாருக சிவனடியார்கள் வீடுபெறுவதற்கான சோதனைகள் குலவேறு பாட்டிற்கேற்ப விளங்கித் தோன்றியுள்ளது போலவே சிவாலயங்களுக்குப் பொருள் கொடுத்ததிலும் சிவனடியார்களுக்குக் கொடுப்பதிலும் கூட குல மரபு குன்றுமல் கூறியுள்ளார் குன்றத்தூரார்.

6·1 அரிவாட்டாயர் வேளாளரானதால் திருவமுதுக்குச் செந்நெல் அரிசி கொடுத்துள்ளார்[16] நந்தனர் புலையரானதால் முரசுக்குத் தோலும் நரம்புக் கருவிகட்கு நரம்பும் அபிஷேகத்திற்குக் கோரோசனையும் கொடுத்துள்ளார். க்ஷத்திரியரான கோட்புலியார் போரிலே பெற்ற செல்வத்தைக் (நெல்லைக்) கோவிலுக்குக் கொடுத்துள்ளார். வேளாளரான இளையான்குடி மாறரும் மூர்க்கரும் சிவனடியார்களுக்கு உணவு அளித்தனர். நெசவுத் தொழிலாளியான நேசர் ஆடை நெய்து கொடுத்துள்ளார். வண்ணுரான திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார் ஆடைகளைச் சலவை செய்துகொடுத்துள்ளார். குயவரான திருநீலகண்டர் திருவோடுசெய்து கொடுத்துள்ளார்.

6·2 இவ்வாருக சிவாலயங்களுககோ சிவனடியார்களுக்கோ அவரவர் குலமரபுப்படி உதவவேண்டும் என்ற உள்ள ஒருமைப் பாட்டினை பக்குவமாகவும் பாங்காகவும் புகட்டுகின்ருர் சேக்கிழார். தமிழ்நாடு முழுவதையும் தன் வசத்தில் வைத்திருந்த சோழப் பேரரசர்கள் கங்கை வரை வெற்றிகொண்ட சோழப்பேரரசர்கள் தம் ஏகாதிபத்தியத்தைக் கடல் கடந்தும் பரப்பத் திட்டமிட்ட காலத்தில் சொந்த நாட்டில் தேவைப்பட்ட அமைதிக்கு சேக்கிழாரின் பெரிய புராணம் பெருந்தொண்டு செய்துள்ளது.

'ஏகாதிபத்திய நாடுகள் யாவும் தமது சொந்த நாட்டிலே அமைதியையே கடைப்பிடிப்பன. யாவருக்கும் கடமைகளும் உரிமைகளும் பகுக்கப்பட்டு, விதிக்கப்பட்டு ஓர் ஒழுங்கு நிலை நாட்டப்படுகிறது. நாட்டின் சக்தி கடலையும் பிறநாடுகளையும் கட்டி ஆள்வதற்குத் தேவையாக இருப்பதால் உள்நாட்டில் சுதந்திரமும் சமரச மனப்பான்மையும் வளர்க்கப்படுகின்றன. தீண்டாதவருக்கும் சரி சிவப்பிராமணருக்கும் சரி சட்டங்களும் விதிகளும் வகுக்கப்பட்டிருந்தன.[18]

6·3. இத்துடன் இவ்வுலகிலுள்ள பந்த பாசத்தை (சிறுத்தொண்டர்-பிள்ளை; இயற்பகையார் - மனைவி; கோட்புலியார் சுற்றத்தார்)விட சிவனடிப்பேற்றைப் பெறும் பெருஞ்சிறப்பே வேண்டாற்பாலது என்று சேக்கிழார் வற்புறுத்தியுள்ளார். மனைவியோ, தந்தையோ, சுற்றத்தினரோ சிவனன்புக்கு இடையூருக விளங்கினுல் அவர்களையும் நீத்துவிட வேண்டும் என்ற பக்தி வைராக்கிய உணர்ச்சியை மனைவியின் கையை வெட்டிய கலிக்கம்பர்; தந்தையின் காலை வெட்டிய சண்டேசுரர்; சுற்றத்தாரைக் கொன்ற இயற்பகையார், கோட்புலியார் ஆகியோர் வரலாற்றுல் சித்திரிக்கின்ருர்.

6·4 சிவனடியார்களுக்கு வரும் இடையூறுகளை நீக்குவதையே கடமையாகக் கொண்ட எறிபத்தர் சத்தியார் வரலாறுகள் மூலம் அத்தகையோர் சோழப் பேரரசு காலத்திலும் விளங்கத் துணை செய்துள்ளார். மன்னர்களும் கூட சிவவேடத்திற்கு மிகுந்த மதிப்பளித்துள்ளனர் என்ற கருத்தை மும்மையால் உலகாண்ட மூர்த்தியார், மெய்ப்பொருள் நாயனர், கழற்சிற்றறிவார் வரலாறுகள் வாயிலாக விளக்கி மன்னரைப் போல மக்களும் மதிப்பளிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியுள்ளார். தம் தொண்டர் புராணத்தின் மூலம்.

6·5 செல்வராக விளங்கியவர்கள் சிவப்பணி செய்ததால் வறியராஞல் அதற்கும் அவனருளே காரணம் என்ற கருத்தை விளக்கும் வகையில் இளையான்குடி மாறர், அரிவாட்டாயர்

வரலாறுகள் அமைந்துள்ளன. ஆனால் இவர்கள் செல்வமிழந்து ஏழையான பிறகே சிவனால் சோதிக்கப்படுகின்றனர் என்பது சிந்திக்கத்தக்கது. இவர்கள் வரலாற்றால் நில்லாத செல்வத்தைக் கொடுத்து நிலைத்த சிவனடியார் என்ற புகழைப் பெறுவதே சிறப்பு என்று சேக்கிழார் விளக்கியுள்ளார். இளமையைவிட மேலானது சிவபக்தி என்பதனை திருநீலகண்டர், திருமூலர் வாழ்க்கையில் காட்டியுள்ளார். யாக்கை நிலையாமையை நந்தனார், கணம்புல்லர் ஏனாதிநாதர், மெய்ப்பொருள் நாயனார் போன்ற பல வரலாறுகளால் விளக்கியுள்ளார்.

6·6 இவ்வாறாக 'இவ்வுலகம் நிலையற்றது என்பதனோடு செல்வம், யாக்கை, இளமை ஆகியனவும் நிலையற்றவை; எக்குலத்தில் பிறந்திருந்தாலும் இப்பிறவியில் சிவனடியாராக விளங்கினால் சிவனைச் சென்றடையலாம். ஜாதி, மத, இன, குல வேறுபாடுகள் கடந்து எல்லா நிலப்பரப்பும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொள்ள முடியும்—கொள்ள வேண்டும் என்றும், குலவேறுபாடாகப் பிறந்ததற்கு அவர்கள் முற்பிறவியில் செய்த வினையே காரணம் என்றும்' மெய்ப்பித்து விடுகின்றது பெரிய புராணம். இத்துடன், "முழுமுதற் கடவுளாகிய சிவனை நிறுத்தி எல்லாரும் அவன் அடிமைகளே என்ற கருத்தை வளர்க்கப் பெரிதும் உதவியது தொண்டர் புராணம். சாதிப்பாகுபாடு மிகக் கடுமையாக அனுட்டிக்கப்பட்ட சோழர்காலத்தில், விதிகளும் சட்டங்களும் சாதிப்பிரிவினைக்கு அங்கிகாரம் அளித்த காலத்தில் இறைவனுக்கு முன் யாவரும் சமமே என்னும் மனச் சாந்தியை அளிக்கஉதவியது பெரியபுராணம்.[19] அதனால் தான், "யாவராயினும் தங்கள் தங்கள் சாதிக்கு விதித்த விதி கடவாது நின்று சிவனை வழிபடின் முக்திபெறுவர்" என்று பிற்காலத்தில் ஆறுமுக நாவலர் போன்றவர்கள் கூறவேண்டியதாயிற்று.[20]

7·0 இனி, சாதிக்கும் குலத்திற்கும் ஏற்ப இறைவனின் சோதனைகள் கடுமை வேறுபடுவதற்குக் காரணம் என்னவென்று எடுத்துக் கொண்ட பிரதான கேள்விக்கு விடைகாண்போம். இதற்கு இதுவரை பார்த்த அடியார் சோதனைகளின் தன்மை வேறுபாட்டினை மனதில் நிறுத்திக்கொண்டு மநுவின் விதிகளைச் சற்றுப் பார்ப்போம்.

7·1 "அறிவுகளுக்கெல்லாம் மூலம் வேதம் என்பர். அவற்றுள் இலௌகிக வாழ்க்கைக்கு இன்றியமையாத நெறிகளை அமைத்துக் காட்டி மறுமைக்கும் உதவுவன ஸ்மிருதிகளாகும். ஸ்மிருதிகளுக்குள் மிகப் பழமையானதும் பின் வந்த எல்லா ஸ்மிருதி கர்த்தாக்களாலும் மிகவும் போற்றப்படுவதும், அவர்களால் புதுப்பிக்கப் படுவதுமானது மநு என்ற முனிவர் இயற்றிய மநுஸ்மிருதியேயாகும். அது சமூகம், சமயம், ஒழுக்கம் வியவகாரம் போன்ற வாழ்க்கைக்குரிய பல துறைகளுக்கும் விதி விலக்குகளை முழுமையாக அமைத்து வழிகாட்டியாக விளங்குவதாலும் அதன் பிற சிறப்புக்களாலும் அதன் ஆசிரியரின் பெயரான மநு, என்பது பிற்காலத்தில் பலர் இயற்றிய நீதி நூல்களுக்கும் அல்லது பிறர் இயற்றிய தரும சாஸ்திரங்களுக்கும் பெயரானதோடு அமையாமல் பிறரால் எழுதப் பெற்ற அத்தகைய நூல்களுக்கும் பொதுப் பெயராய் விளங்கலாயிற்று. ஆகவே மநு விஞ்ஞானேசுவரீயம் என்ற தொடரிலும் மநு என்ற சொல் சிறப்புப் பொருளைக் கொடாமல் பொதுப் பொருளைக் கொண்டுள்ளமை காணத்தக்கது"[21] என்ற இப்பகுதி மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு 21ன் நூன் முகத்தில் காணப்படுகின்றது.

7·2 "இம்மநு விஞ்ஞானேசுவரீயம் மிதாக்ஷரத்தின் வழிநூல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மிதாக்ஷரம் என்பது விஞ்ஞானேசுவரர் யாஞ்ஞவல்கிய ஸ்மிருதிக்கு இயற்றிய வியாக்கியானத்துக்குப் பெயராகும். இதுவே இந்த ஸ்மிருதியின் வியாக்கியானங்களுள் சிறந்ததென்று விவகார உலகத்திற் கொண்டாடப்படுகின்றது[22] இவ்வாறு பிரசித்தி பெற்ற மிதாக்ஷரத்தின் வியவாகாரப் பகுதியின் சுருக்கமே மநுவிஞ்ஞானேசுவரீயம் என்ற தமிழ்ச் சுவடியின் மூலமான வடமொழி நூலாகும் என்று காணக்கிடக்கின்றது.[23]

7·3 "ஸ்மிருதி நூல்களை நாம் இக்காலத்தில் பார்க்கும்போது அவை எழுதப்பெற்ற காலத்திலும், அவை பின்பற்றப்பெறும் காலங்களிலும் இந்து சமூகம் நான்கு வருணப் பிரிவுகளிலும் கூட்டுக் குடும்ப முறையிலும், சொத்துடைமையிலும் பெருமதிப்புக் கொண்டிருந்தது என்பதை உணர்கிறோம்.[24] அன்றியும் இந்நூல்

கள் நாட்டின் பண்பாடு, பொருளாதார நிலை, தொழில், வியாபார நிலைகள் முதலிய பலதிறப்பட்ட சமூக அறிவு பெறுவதற்கும் பயன்படுகின்றன என்பதனை உணர்வோமாக"[25]

7·4 என்று நூன்முகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூலைத் தொகுத்து வைத்தவர் உ. வே. சா. அவர்கள். இந்நூல் 18-வது நூற்றாண்டில் தமிழில் எழுதப்பட்ட போதிலும் இதன்மூல நூல் பல நூற்றாண்டுகட்கு முந்தியதாகும் என்பது "மநுவுக்கு அடுத்தபடியாய்ப் புகழ்கொண்டு விளங்கிய ஸ்மிருதி கர்த்தா யாஞ்ஞவல்கியர் என்ற முனிவர் இவருடைய காலத்தைப் பற்றிய கருத்துக்கள் பல. கி. மு. இரண்டாம் நூற்றாண்டை ஒட்டிய காலமே இம்முனிவர் காலமாகலாம் என்று ஒருசாரார் கூறுவர்"[26] என்ற நூன்முகத்தால் போதருகின்றது.

7·5 மநு என்ற சொல்லாட்சியும் 'மநுநீதி' என்ற கண்ணோட்டமும் சேக்கிழார் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் பரவலாக வழக்கிலிருந்தது என்பது உறுதி. 'சேக்கிழார் சோழப் பேரரசிலே அமைச்சராயிருந்து, உத்தம சோழப் பல்லவராயர்' என்ற பட்டமும் பெற்று உயரிய நிலையிலிருந்ததாகக் கூறப்படுபவர். ஆயினும் அவரது காலம் பற்றிக் கருத்து வேறுமை உண்டு.[27] க. அ. நீலகண்ட சாஸ்திரியாரும் வேறுசிலரும் சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் (1133-50) பெரிய புராணத்தை இயற்றினர் என்பர். டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் மூன்றும் குலோத்துங்கன் ஆட்சியில் (1178-1218) என்பர். இரு சாரார் கூற்றுக்களையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்துச் சதாசிவ பண்டாரத்தார் முடிவே பொருத்தமாகத் தோன்றுகிறது.

7·6 இன்று காணக் கிடைத்துள்ள மநு விஞ்ஞானேசுவரீயம் போன்ற வடமொழி நூல்களின கருத்துக்களை அமைச்சராக இருந்த சேக்கிழார் அறியாமலிருக்கமாட்டார்.

8·0 இந்த மநு விஞ்ஞானேசுவரீயம் என்ற நூலில் குற்றம் செய்யப்பட்டதாக ஐயப்பட்டவர்கள் அந்த ஐயத்தை அகற்றுவதற்காக மானிடப் பிரமாணம் அல்லது தெய்வப் பிரமாணம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

8·1 மானிடச் சான்று மூன்று வகைப்படும் அவை எழுத்துச் சான்று ஆவணம் (Document) ஆட்சி அல்லது அநுபோகச் சான்று (Traditional Practice) நேரில் கண்ட அல்லது கேட்டவனுடைய சாட்சி (Eye witness) என்பனவாம்.[29] சுந்தரர் வரலாற்றில் இந்த மூன்றனுள் எழுத்துச் சான்றே இடம் பெற்றுள்ளது.

"அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதிநேர்ந்தேன் இதற்கிவை என் எழுத்து[30]

என்ற பாடல் இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டாகும். மட்டுமல்ல இந்த மநுநீதிக் கருத்தைச் சேக்கிழாரே மறையவர் வாயிலாக மறையாது மொழிகின்றார்,

"ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கற்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன"[31]

என்று வரும் சேக்கிழாரின் பாடலும்,

"எழுதிய லிகிதமொன்றை யேற்றநுபவிக்கும்
வழுவிலாப் புக்தி, கண்டுவந்தவன் சாட்சி யிந்த
நழுவிடா மூன்றும் வந்து நாடிய வழக்கிற் சேர்ந்து
பழுதிலா திருக்கு மாகிற் பாரினில் நிசமென் றெண்ணே[32]

என்று வரும் மநுவிஞ்ஞானேசுவரீயப் பாடலும் எவ்வளவு அருமையாகப் பொருந்துகின்றன?

8·2 அடியார் சிவனடியார்களில் அற்புதம் புரிந்து அடியார் பதவி பெற்றவர் போக, பிற அடியார்கள் தெய்வ பிரமாணம் செய்தே அடியார் தகுதி பெற்றுள்ளனர்.

8·3 இந்த மானிடச் சான்று போதாது என்பவர்களுக்கே தெய்வச் சான்று தேவைப்படும் அல்லது மானிடப் பிரமாணங்களால் தீர்க்கமுடியாத வழக்குகளில் தெய்வப் பிரமாணங்கள் கையாளப்படும்.

இத்தெய்வப் பிரமாண வகை ஒன்பது. அவை. 1. துலே. 2. ஜலம். 3. கோசம். 4. அரிசி. 5. பதுமை. 6. வசனம். 7. விஷம். 8. மழு. 9. உழுந்து. என்பன......மானிடப் பிரமாணங்களால் குற்றவாளி என்று நிச்சயிக் கப்பட்ட ஒருவர்தாம் தெய்வப் பிரமாணம் செய்து தம் தூய தன்மையைக் காட்டுவதாகக் கூறினுல் அதனையும் ஏற்றுக்கொள்வர்.33

8·4 இத்தெய்வச் சான்றுள் ஒன்றை மட்டும் பார்ப்போம். "பொன் முதலியவற்ருல் கொடுக்கப்பட்ட அளவில் ஒரு சட்டியும் உழுந்து அளவிலே ஒரு தங்க உருண்டையும், உலோகத் தில் ஒரு மோதிரமும் தயாரித்துக் கொள்ள வேண்டும். வாதி, பிரதிவாதி, பிராட்டு விவாகன் (நீதிபதி) ஆகியோர் குறித்த நாளிலே தானம் பண்ணி, சுசியாய் (சுத்தமாக) வெள்ளையாடை உடுத்திக்கொண்டு பிரமாணம் பண்ணுமிடத் திற்கு வரவேண்டும். இந்திரன் முதல் துர்க்கை வரையில் அங்க பூசையும் தரும தேவதை பூசை யும் சிரசு பத்திரமும் ஹோமங்களும் நடை பெறவேண்டும். தருமதேவதை பூசை செய்கிற இடத்திற்குப் பக்கத்திலே ஒரு அடுப்பு மூட்டிக் குறித்த அளவில் நெய்யையும் நல்லெண்ணெ யையும் கொதிக்க வைத்துப் பிராட்டு விவாகன் அதனைப் பிரார்த்தித்துத் தங்க உழுந்தை அத னுள் போடவேண்டும். அதனைப் பிரமாணம் செய்கிறவன் தன்னிரு விரல்களினுல் எடுக்க வேண்டும். அவ்விரல்களில் ஊறு படாமல் இருந்தால் அவன் சுத்தன். இதில் உண்மை நன்ருகப் புலப்படாவிட்டால் இன்னும் நெய் யையும் எண்ணெயையும் கூட்டிக் கொதிக்க வைத்து மோதிரத்தை அதனுட் போட்டு எடுக் கச் செய்யவேண்டும். அவன் ஏதேனும் மாற் றுப் பொருள் பூசி வந்திருப்பதாக ஐயம் ஏற்பட் டால் அவனை எட்டு நாள் காவலில் வைத்து அம்மாற்று நீங்கும்படி செய்து பிறகு பிரமாணம் செய்யும்படி செய்தல் வேண்டும்".34

8·5 தெய்வச் சான்றுகளுள் ஒன்ருன இக் கொடுமைத் தன்மை நந்தனுர், அரிவாட்டாயர், கோட்புலியார், கலிக்கம்பர், சிறுத்தொண்டர், கண்ணப்பர், திருக்குறிப்புத் தொண்டர் போன்ற கீழ்க்குலத்தைச் சார்ந்த அடியார்கள் வரலாற் றில் வெவ்வேறு சிறுமாற்றங்களுடன் சொல் லப்பட்டுள்ள அதே வேளையில் மநுநீதியின் தெய்வப் பிரமாணம் போலவே காட்சியளிக் கின்றமை மனங்கொள்ளத்தக்க ஒன்ருகும்.

8·6 மேலே கூறிய ஒன்பது வகைப் பிரமா ணங்களுள் சத்தியம் இடுதல் அல்லது ஆணையிடு தல் வசனப் பிரமாணமாகும்...இதில் பிரமாணம் செய்கிறவன் தன் குலத்துக் கேற்றபடி, தான் குற்றம் செய்திருந்தால் இன்ன இன்ன பொருள் கள் அழியும் என்று பிரமாணங்கள் செய்வான். உதாரணமாகப் பிராமணன் தன் வேதாசாரங் கள் குலையுமென்றும், க்ஷத்திரியன் வாகனங் கள் ஆயுதங்கள் அழிந்து போகுமென்றும், வைசியன் தன் பசுக்கள் தானியங்கள் அழிந்து போகுமென்றும் வேளாளன் தன் புண்ணியம் அழிந்து போகுமென்றும் கூறுவார்கள்.35

இந்த வசனப்பிரமாணத்திலேகூட வருண வேறுபாடுக்கேற்ப கடுமை கடுமையின்மை எவ்வளவு விளக்கமாகத் தெளிவுறுகிறது. குய வரான திருநீலகண்டரின் மனைவி, "தீண்டு வீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று சிவன் மீது ஆணையிட்டு நாயனுரை இல்லற இன்பத்தைத் துறக்கவைத்துள்ளார்.

8·7 ஒன்பது வகைத் தெய்வப் பிரமாணங் களுள் முதலாவதாக உள்ள துலைப் பிரமாண மாவது தராசில் இரு கட்சிக்காரர்களையும் வைத்து நிறுப்பதும், குற்றவாளி என்று கருதப் படுபவரை மட்டும் வைத்து நிறுப்பதும் உண்டு ...பிரமாணம் செய்பவன் நாக்கில் சுத்தமான நீரைவிடவேண்டும். அந்நீர் கீழ்நாக்குக்கு வரும்பொழுது முன்நிறுத்த நிலையிலிருந்து அவன் இருந்த தட்டு உயருமானுல் அவன் சுத்தன்; ஒத்திருந்தால் அவன் பொய்யும் மெய் யும் கூடியவன்; தாழ்ந்தால் முழுப்பொயயன்36

அமர்நீதி நாயனுர் என்ற வணிகர் அடியா ரின் கோமணத்தின் எடைக்குச் சமமாகத் தம் குடும்பத்துடன் துலாக்கோல் ஏறியது இதற்குச் சான்ருகும். பல்லவனுல் நாவுக்கரசருக்கு நஞ் சூட்டப்பட்டது விஷப்பிரமாணமாகும். அரிவா ளால் அறுத்துக் கொண்ட அரிவாட்டாயரும் ஏயர்கோன் கலிக்காமரும், மழுவால் வெட்டிக் கொண்ட எறிபத்தரும் மழுப்பிரமாணம் என்ற தெய்வச் சான்றுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர்.

90 பல்லவர்கள் காலத்திலே நாயன்மார்கள் சாதி பேதத்தைப் பற்றி எவ்வளவுதான் இழித்துரைத்திருந்த போதிலும் "சாதி எவ்வளவு வரையில் நிற்றல் வேண்டும் என்பதும் வகுக்கப்பட்டுள்ளது"37

இதனையே நியதியாக ஏற்றுக்கொண்டு உரை கூறுகின்றார் சிவக்கவிமணி, வழக்கறிஞர் சுப்பிரமணிய முதலியார்.

"புலையர் மரப்பில் வந்து சிவத்தொண்டு செய்வோர் **புறத்தொண்டர்கள்** எனப்படுவர். திருக்கோயிற் புறத்து நின்று அன்புடன் கும்பிட்டு ஆடியும் பாடியும் வழிபாடு செய்தலும் பேரிகை முதலிய முகக் கருவிகளுக்குப் போர்வைத் தோலும் விசிவாரும், யாழுக்கும் வீணைக்கும் தந்தியும், அர்ச்சனைக்குக் கோரோசனையும் தருவதும் இவர்கள் செய்யும் திருத்தொண்டுகளாகும். இவர்கள் திருக்குளம் தோண்டி அமைத்தற்கும் உரியர்" 38

இவ்வாறு **மநுநீதி** தவறாது மாநிலத்தை ஆண்ட சோழப் பெருமன்னர் காலத்திலே மநுதர்மமாகிய குல **ஒழுக்கம்** குன்றாத வண்ணம் பாதுகாக்கப்பட்டது.

9·1 மநுதர்ம சாஸ்திரம் சாதி (வருணம்) குறித்து யாது கூறுகின்றது? வேதம் ஓதுதல் ஓதுவித்தல் போன்றவை அந்தணர்க்கும், குடியோம்புதல் மன்னவர்க்கும், விளைபொருள்களை விற்பது வைசியர்க்கும், இம்மூவர்க்கும் அடங்கி அழுக்காறின்றிப் பணி செய்வது நாலாம் குலத்தினர்க்கும் உரிய கடமைகளாக விதிக்கப்பட்டன. இதில் எல்லாத் தர்மங்களும் செயல்களின் குணநலப் பான்மைகளும் நால்வருணத்திற்கும் பண்டு தொட்டு இருந்து வந்திருக்கின்ற ஒழுகலாறுகளும் கூறப்பட்டுள்ளன.

தர்மங்களுக்கு ஆதாரமாக இருப்பவை வேதமும் சிமிதிகளும் தொன்று தொட்டு வந்த ஒழுக்க மரபும் கவலையற்ற மனநிறைவுமாகும்.

"வேதம் சிமிதி (ஸ்மிருதி)களில் சொல்லப்பட்ட அறமுடிபுகளைத் தருக்கவியல் சார்ந்த உலகியல் அறிவைக் கொண்டு சோதித்தறிய முயல்வது கூடாது. ஏனெனில் இவையின்றி சீவர்களுக்குக் கடமைகள் என்பதே இல்லை.

இவ்விரண்டையும் தனது நூலறிவினாலும் தருக்கவாதத் தனித்திறமையினாலும் சோதித்துச் சோதித்து அவமதிப்போன் யாராயினும் அவன் நாத்திகனாகவும் சமூகத்திலிருந்து விலக்கப்படவும் வேண்டியவனுமாகிறான்."

தமிழ் நாட்டிலே நிலவிய சாதிப் பாகுபாட்டை இவ்விதிகள் முற்றாகப் பிரதிபலிக்கவில்லையாயினும் வருணாசிரம தர்மத்துக்கு எத்தகைய மதபலம் இருந்தது என்பதை இவை தெளிவாக்குகின்றன. பொதுவான நால் வருணப் பாகுபாட்டினடிப்படையில் எண்ணற்ற சாதி தருமம் காலக்கிரமத்தில் உருவாகியது39

9·2 கிராம சமூகங்களிலே சாதி தருமம் நிலைபெற்று விளங்குவதற்கு மனுதரும சாஸ்திரம் குறிப்பிட்டது போல 'வேத ஒழுக்கு' என்ற அதிகாரத் தொனியும் கன்மவினைக் கோட்பாடும், மறுபிறப்புக் கொள்கையும் பெரிதும் உதவின. 'வினைப்பயனை யாரால் வெல்ல முடியும்' என்ற நம்பிக்கை வேரூன்றியிருந்தது. இதனால் வருண சாதி தருமங்களை மீறி நடக்கும் அளவிற்குத் தீவிரவாத சக்திகள் அச் சமுதாயத்தில் தோன்ற வாய்ப்பேயில்லை. அப்படித் தோன்றினாலும் சட்டமும் அவற்றை ஈவிரக்கமின்றித் தண்டிக்கவும் தயங்கவில்லை40

9·3 இவ்வாறு வருக்கம், வருணம், சாதி ஆகிய மூன்று வகையான பிரிவுகளும் ஒன்றையொன்று தழுவியும் ஒன்றற்கொன்று ஆதாரமாயும் இயங்கிய 'பொற் காலத்திலேயே' - சோழப்பெருமன்னர் காலத்திலேயே-புலையனை புறத்தொண்டனைச் சித்திரித்தார் "வேளாண் முதல்வரான" சேக்கிழார்.

9·4 'பொற்காலமான' சோழர் காலத்திலே, செழித்து விளங்கியதாகச் சொல்லப்படும் 'கிராமச் சமூகத்திலே, ஒருவர் எவ்வளவுதான் உயர்ந்தவராயினும் அவருக்குச் சமூக வாழ்விலும் சமய வாழ்விலும் பொருளாதார வாழ்விலும் நிர்ணயிக்கப்பட்ட நிலை ஒன்றிருந்தது. அவர் செய்யவேண்டிய குறிப்பிட்ட பணி இருந்தது41. அதுதான் மநுதர்ம நெறியாகும், அதுதான் வேதநெறியாகும். அந்த "வேத நெறி தழைத்தோங்கவே"42 திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்ததாக சேக்கிழார் பாடியுள்ளார்.

9·5 எனவே, சேக்கிழார் மநுதர்மப்படியே தான் உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கும் அரசர்களுக்கும் செல்வர்களுக்கும் எளிதான சோதனைகளையோ சோதனைகள் இன்றியோ முக்தி கொடுத்ததுடன் அவர்கள் அற்புதங்கள் செய்துகாட்டியுள்ளதாகவும் படைத்துள்ளார். மநுதர்மத்திற் கூறப்பட்டுள்ள பிரமாணங்களைப் போல ஜாதிக்குத் தகுந்தவாறு நீதிவேறுபாடு களைக் கூறியுள்ளார். அதாவது தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கும் முன்பு செல்வராக இருந்து ஏழையானவர்கட்கும் மிகக் கடுமையான தண்டனைகளைச் சோதனைகளாகக் கொடுத்துள்ளார்.

அதனால்தான் சிவனடியார்களுக்கு இறைவன் வைத்த சோதனைகள் அனைத்தும் ஒரே சீரான சோதனைகளாக இல்லை என்பதற்கு மநு நீதிக்கொள்கைகளும், விதிக்கொள்கையும், சேக்கிழாரது கருத்துக்களை, உருவாக்கியுள்ளன என்பதே பொருத்தமான காரணமாகும்.

---

## அடிக்குறிப்புகளும் சான்றுதாரங்களும்

1. பெரிய புராணம் - இளையான்குடிமாறர் - பாடல் 4
2. ஷை ஷை பாடல் 5
3. சைவ இலக்கிய வரலாறு-ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை பக்கம் 245
4. பெரிய புராணம் - அதிபத்தர் - பாடல் 14
5. ஷை - அரிவாட்டாயர் பாடல் 7
6. ஷை - திருக்குறிப்புத்தொண்டர் பாடல் 121
7. ஷை - இளையான்குடிமாறர் - பாடல் 6; குங்கலியக்கலயர் - பாடல் 7; கலியர் - பாடல் 8-9 ஆகியனவும் இத்துடன் இணைத்துப் பார்க்கத்தக்கன.
8. ஷை குலச்சிறையார் - பாடல் 4.
9. திருத்தொண்டர் புராணம் - ஸ்ரீகாசிமடம் - திருப்பனந்தாள் வெளியீடு-மூல அட்டவணை
10. K.A. Nilakanta Sastri-STUDIES IN CHOLA HISTORY AND ADMINISTRATION-p 176ல் உள்ள செய்தியை மேற்கோள் காட்டி 'பேரரசும் பெருந்தத்துவமும்' என்ற கட்டுரையில்- பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற நூலில்- பக். 153ல் கலாநிதி க. கைலாசபதி எழுதியிருப்பது ஒப்பு நோக்கற்குரியது.
11. ஆராய்ச்சி மலர் 2. இதழ் 4ல் பக்கம் 426ல் கண்ணப்பரும் கடவுளும் என்ற என் கட்டுரை ஒப்பு நோக்கத்தக்கது.
12. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்-பொது தனித்திருத்தாண்டகம் பாடல் 10-பக்கம் 527. காசிமடத்து வெளியீடு.
13. பெரிய புராணம் - திருநாளைப் போவார் - பாடல் 15.
14. பெரியபுராணம்-திருநாளைப் போவார்- பாடல் 23.
15. அடியும் முடியும் - கலாநிதி க. கைலாசபதி - புலைப்பாடியும் கோபுரவாசலும்-பக்கம் 280.
16. பெரிய புராணம்-அரிவாட்டாயர்-பாடல் 11.
17. ஷை -பூசலார் - பாடல் 16.
18. பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும்-க. கைலாசபதி பேரரசும் பெருந் தத்துவமும் - பக். 169-170.
19. ஷை ஷை பக்கம் 174.
20. ஆறுமுக நாவலர் பெரிய புராணம் (6ம் பதிப்பு) சூசனம் - பக். 167. அடியும் முடியும் - க. கைலாசபதி புலைப்பாடியும் கோபுர வாசலும் - பக். 301 ஒப்பு நோக்கத்தக்கது.
21. மநு விஞ்ஞானேசுவரியம் - சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. P. இராஜகோபாலன் M.A.; I.C.S. - நூன்முகம் பக்கம் V
22. ஷை ஷை பக்கம் VI
23. ஷை ஷை பக்கம் VII
24. ஷை ஷை பக்கம் VIII
25. ஷை ஷை பக்கம் IX
26. ஷை ஷை பக்கம் VI
27. அடியும் முடியும்-க. கைலாசபதி பக்கம் 275
28. ஷை ஷை சான்றுதாரம் பக். 354-355
29. மநு விஞ்ஞானேசுவரியம் - பக்கம் 56.
30. பெரிய புராணம் - தடுத்தாட்கொண்ட புராணம் - பாடல் 59.
31. ஷை ஷை பக்கம் 56.
32. மநு விஞ்ஞானேசுவரியம் - பக்கம் 25.
33. ஷை பக். 76.

34. மநு விஞ்ஞானேசுவரியம்- பக்கம். 98.

35. ௸ பக். 121.

36. ௸ பக். 107.

37. புலைப்பாடியும் கோபுரவாசலும் - பக். 275.

38. சுப்பிரமணிய முதலியார் - சி. கே. திருத்தொண்டர் புராணம் (உரையுடன்) இரண்டாம் பகுதி. கோயம்புத்தூர் 1940 பக். 1397.

39. Mukkerjee R; The Dynamics of a Rural Society Berln 1957 - p. 67.

40. அடியும் முடியும் - க. கைலாசபதி, பக். 299-300

41. Mukkerjee, ibid p. 71, also The Rise and Fall of the East India Compauy - Berlin - 1957 passim.

42. பெரிய புராணம் - திருஞானசம்பந்த சுவாமிகள் — பாடல் 1.

---

# சுந்தரமூர்த்தி நாயனர் காலம்

## கேரளநாட்டு வரலாறுகாட்டும் பாதை

ஏ. வி. சுப்பிரமணிய அய்யர்

சைவ சமயாசாரியர்கள் அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரில், முந்திய இருவரைப் பொறுத்தவரையில் பிறந்த, மறைந்த வருடங்களைத் துல்லியமாகக் கூற முடியாவிட்டாலும், அவர்கள் வாழ்ந்த நூற்றாண்டு, கி. பி. ஏழு என்பது வரலாற்றுச் சான்றுகளால் ஐயமறத் தெரியக்கூடிய முடிபு. நூற்றாண்டு அளவில் இந்த முடிபை தமிழ் அறிஞர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிந்திய இருவராகிய சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் காலத்தைப் பற்றி, அவர்கள் வாழ்ந்த நூற்றாண்டைப் பற்றிகூட கருத்தொருமித்த முடிவு ஏற்படாமல் கருத்து வேறுபாடுகள் இன்றுவரை நிலைத்திருக்கின்றன. இதுகாறும் சுந்தரர் காலத்தைப் பற்றி எழுதியிருக்கும் தமிழறிஞர்கள், வரலாற்றும் பேராசிரியர்கள், பல்லவ சரித்திரத்தின் அடிப்படையில் எழுப்பியிருந்த எழுப்பியிருந்த வாதங்களைச் சுருக்கமாக ஆராய்ந்தும், கேரளநாட்டு வரலாற்றாசிரியர்கள் அங்கே கிடைத்திருக்கும் சாசனங்கள், கல்வெட்டுகள், பிற சான்றுகள், முதலியவற்றைக் கொண்டு செய்திருக்கும் ஆராய்ச்சியின் துணைகொண்டும் ஓரளவு திட்டமான முடிவுக்கு வரமுயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சுந்தரருடைய காலத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள, இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் சான்றுகள் எவை என்பதை முதலில் கவனிக்க வேண்டும். சுந்தரருடைய தேவாரப் பதிகங்களில் அவருடைய வாழ்க்கையின் முக்கியமான சம்பவங்களுக்கு அகச்சான்றுகள் கணிசமான அளவில் கிடைக்கின்றன. அவற்றை விளக்கி பெரிய புராணத்தில், தடுத்தாட் கொண்ட நாயனர் புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம், கழறிற்றறிவார் நாயனர் புராணம், வெள்ளானைச் சருக்கம் ஆகிய நான்கு பகுதிகளில் சுமார் 840 பாடல்களில் சேக்கிழார் விரித்துக்கூறி, தமது நூலை ஓரளவு வரலாற்றுக் களஞ்சியமாகவே சமைத்திருக்கிறார். சுந்தரருடைய காலத்தைக் காட்ட அவருடைய தேவாரப் பதிகங்களில் குறிப்பாக வாசகங்கள் இரண்டு இடங்களில் காணப் பெறுகின்றன. அவைகளும் தெளிவாயில்லை; அவற்றின் பொருளை அறிய பல்லவ வமிச வரலாற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் புரிந்துகொண்டாலும் எந்த பல்லவ அரசரை அவர் பாடியிருக்கிறார் என்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. பெரிய புராணத்திலுங்கூட சுந்தரருடைய காலத்தை நிர்ணயிக்க நேரடியான குறிப்புகளோ சான்றுகளோ இல்லை. எனினும் சேக்கிழார் கூறியிருக்கும் முக்கியமான நிகழ்ச்சிகளும், கருத்துகளும் பாடல்களில் கையாண்டிருக்கும் சொற்றொடர்களும், நுட்பமான சரித்திரக் கண்ணோட்டத்துடன் பார்ப்பவர்களுக்கு சூசகமான வழிகாட்டிகளாக அமைந்திருக்கின்றன. நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியிலும் உமாபதி சிவாசாரியாரின் திருமுறைகண்ட புராணத்திலும் சில குறிப்புகள் சிதறிக்கிடக்கின்றன. சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் ஆலயங்களில் அரசர்களாலும், பிரபுக்களாலும் முதலி மூவரின் திருப்பதியங்கள் பாட நிவந்தங்கள் ஏற்படுத்தியதாக உள்ள பல சாசனங்களும் வேறு சில சாசனங்களும் சுந்தரரின் காலத்தின் பின் எல்லையைக் காட்ட உதவுகின்றன.

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் 'கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான், காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்' என்று தமது காலத்து பல்லவ வேந்தனைப் பாடியிருக்கிறார். திருத்தொண்டத் தொகையில் பாடப் பெற்றவர்களை

யும் சுந்தரரையும் சேர்த்து அறுபத்துமூன்று தனி நாயன்மார்கள் என்று சைவசமய மரபு வரையறுத்திருக்கிறது. ஆகையால் இந்த பல்லவ அரசன் சிறந்த சிவபக்தனுயிருந்திருக்க வேண்டும். வேறுசில நாயன்மார்களைப் பற்றி அவர்களுடைய குணுதிசயங்களையோ, சிவத் தொண்டின் தன்மையையோ குறிப்பாக காட்டியிருப்பது போல் (உதாரணமாக; 'இல்லையே என்னுத இயற்பகைக்கும் அடியேன், வார் கொண்டவன் முலையாள் உமைபங்கன் கழலே மறவாது கல் எறிந்த சாக்கியர்க்கும் அடியேன் என்பதைக் கூறலாம்.) பல்லவ அரசர்க்கு சுந்தரர் அடைமொழி ஒன்றும் அமைக்கவில்லை. அவருடைய சிதம்பரப் பதிகத்திலுள்ள பாட்டு இது,

''கருமையார் தருமனுர்தமர் நம்மைக் கட்டிய
கட்டறுப்பிப்பானை
அருமையாந்தன் னுலகந்தருவானை, மண்ணுலகங்
காவல் பூண்ட
உரிமையாற், பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை, மறுக்கஞ்செய்யும்
பெருமையார் புலியூர் சிற்றம்பலத் தெம்பெருமானை
பெற்ருமன்றே'
கோயில் திருப்பதிகம் - 4 (குறிஞ்சி)

இந்தப் பாட்டில் பல்லவர் என்று அரச வம்சத்தைக் கூறினுலும் ஒரு பல்லவ அரசனைத் தான் சுட்டியிருக்கிருர். திருத்தொண்டத் தொகையில் வரும் கழற்சிங்கனும், இந்தப் பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் பல்லவனும் வெவ்வேறு அரசர்களா? அவ்வாறு இருக்கக் கூடும் என்று தோன்றவில்லை. அநேக பல்லவ அரசர்கள் நீண்டகாலம் ஆண்டிக்கிருர்கள். சைவ மரபின்படி சுந்தரர் 18 ஆண்டுகள்தான் வாழ்ந்தார். இதன் கருத்துப்பொருளை எடுத்துக் கொண்டால், சுந்தரர் அப்பர்போல் நீண்டகாலம் வாழவில்லை என்றுதான் கொள்ளவேண்டும். ஆகவே ஒன்றுக்கு மேற்பட்ட பல்லவ அரசர் காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடுமாயினும், அவர் திருத்தொண்டத் தொகையிலும், சிதம்பரப் பதிகத்திலும் ஒரே பல்லவ அரசரைத்தான் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

சிதம்பரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமானை மனங் கசிந்து உருகி வணங்கிப் பாடுகிருர் சுந்தரர். திருச்சிற்றம்பலத் தெம்பெருமான் பக்தனின் பாடலில் மனத்தைப் பறிகொடுத்து விடுகிருர். இன்னெரு சிறந்த தொண்டராகிய சேரமான் பெருமாளுக்கு வழக்கம்போல் சிலம்பொலி கொடுக்க மறக்கும் அளவுக்கு சிவபெருமான் ஈடுபட்டிருக்கிருர். சேரமான் பெருமாள் சிலம்பொலி வராததால் மனமுடைந்து உடைவாளை எடுத்து தன்னை மாய்த்துக்கொள்ள முயலும் போது, தில்லை ஈசன் தோன்றி,

''மன்னனிடைநங் கூத்தாடல் வந்து வணங்கி
வன்தொண்டன்
ஒன்றும் உணர்வால் நம்மைப் போற்றி உரைசேர்ப்
பதிகம் பாடுதலால்
நின்று கேட்டுவரத் தாழ்த்தோம்''
*(கழறி-புராணம் - 44)*

என்று கூறி அவரை சமாதானம் செய்ததாக சேக்கிழார் பாடுகிருர். நடராசப்பெருமான்மீது ''ஒன்றும் உணர்வால்'' சுந்தரர் பாடும்போது, அந்தப் பாடலில் பல்லவ அரசாட்சியின் நிலையைக் குறிப்பிட வேண்டுமானுல், அந்த நிலைமை அவருடைய மனத்தை உறுத்திக் கொண்டு அதைவிட்டு கணமேனும் அகலாத முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும். சிறந்த சிவபக்தனுகிய பல்லவ அரசனுக்கு சிற்றரசர்கள் திறைகொடாத ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு வருந்தி அது ஒழிய, சிவபெருமானிடத்தில் சுந்தரர் முறையிடும் தொனியை இந்தப் பாட்டில் பார்க்கலாம்.

இவ்விரண்டு குறிப்புகளையும் சேர்த்து ஆராய்ந்தால் எந்த பல்லவ அரசன் சுந்தரர் காலத்தில் ஆண்டவன் என்பதை நாம் ஊகிக்க முடியும். 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன்' என்பது சுந்தரரைப் போன்ற ஒரு கவிஞர் சிவபெருமானிடத்தில் ஈடுபட்டிருக்கும் எந்த பல்லவ அரசனையும் பொதுவாகக் குறிப்பிட சமைக்கக்கூடிய கவிதை வாசகம். 'கடல் சூழ்ந்த உலகெலாம்' என்பது பல இன்னல்களுக்குட்பட்டிருந்த பல்லவ நாடு. இவ்வாறு பாடுவது கவிமரபு 'ஆழி சூழுலகெலாம் பரதனே ஆள' என்று கம்பர் கோசல நாட்டை கைகேயின் வாய்மொழியால் குறிப்பிட்டதை ஒத்தது. ''காடவர்கோன் கழற்சிங்கன்'' என்பதும் கவிதை மரபுக்கேற்ற உபசார மொழி 'கழற் சிங்கன்' என்பதற்கு வீரக் கழலை அணிந்த அல்லது அணியக்கூடிய வீரன் என்று பொருள். தமிழ்க்கவிஞர்கள் அரசர்

களையும், அவர்களுடைய நெருங்கிய சுற்றத்தார்களையும், உண்மையில் அவர்கள் வீரர்களாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி உயர்வு நவிற்சியில் பாடுவது மரபு. உதாரணமாக திருஞானசம்பந்தர், மங்கையர்க்கரசியைப் பாடியிருக்கும் திருவாலவாய் (புறநீர்மைப் பண்) பதிகத்தில் "மண்ணெலா நிகழ மன்னனாய், மன்னு மணிமுடிச் சோழன் மகளாம், பண்ணி நேர்மொழியாள் பாண்டிமா தேவி" என்று வரைந்திருக்கிறார். அக்காலத்தில் சோழ அரச வம்சம் சிதைந்து அதைச் சேர்ந்தவர்கள் சிற்றரசர்களாகவே வாழ்ந்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. இவ்வாறு ஒரு கவி மரபு இருந்ததை சுந்தரரின் திருப்புகலூர் தேவாரப் பதிகம் தெளிவாகக் காட்டுகிறது. முழுதும் கடவுள் வாழ்க்கையிலேயே திளைத்த சமயாசாரியர்களும், தங்கள் பாடல்களில் கவி மரபை ஒதுக்கியதில்லை.

இந்த பல்லவ அரசனைக் குறிக்க சிதம்பர பதிகத்தில் சுந்தரர் சிறப்பானதையும், சரித்திர சம்பந்தமானதாயும், அவனைத் தெரிந்துகொள்ள உதவக்கூடியதாயுமுள்ள ஒரு செய்தியைக் கூறியிருக்கிறார். ஆகையால் திருத்தொண்டத் தொகையிலுள்ள பொதுவான புகழ்ச்சி வாசகத்தை விட இந்தச் செய்தியை வைத்துத்தான் அவர் காலத்து பல்லவ அரசன் யார் என்று தீர்மானித்து, பிற வரலாற்றுச் சான்றுகளால் தெரியக் கூடிய அவனுடைய காலத்தையே சுந்தரரின் காலம் என்று கொள்ள வேண்டும். திருத்தொண்டத் தொகை குறிப்பு, பல போர்களில் வெற்றி பெற்று கீர்த்தி வாய்ந்த ஒரு பல்லவ அரசனைத்தான் காட்டுகிறது என்றும், 'கழற்சிங்கன்' என்ற தொடரிலிருக்கும் 'சிங்கன்' என்பது அவ்அரசனுடைய இயற்பெயரைக் குறிக்கும் என்றும், சுந்தரர் கி. பி. 690 முதல் 720 வரை அரசாண்ட பல்லவ பெருவேந்தனும் காஞ்சி கைலாசநாதர் கோவிலைக் கட்டியவனுமான இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற ராசசிம்மனைத் தான் குறிப்பிடுகிறார் என்றும் பேராசிரியர் எஸ். வையாபுரிபிள்ளை (தமிழ் இலக்கிய சரித்திரம் ஆங்கிலம் பக்கம் 109-110) போன்ற தமிழறிஞர்களும், டாக்டர் டி. வி. மகாலிங்கம் (முந்திய தென் இந்திய சரித்திரத்தில் காஞ்சிபுரம் 121) போன்ற வரலாற்றாசிரியர்களும் கருதியிருக்கிறார்கள். 'சிங்கன்' என்பது நரசிம்மன் என்ற பெயரின் பிற்பகுதி என்றும், சுந்தரரை எடுத்து வளர்த்த குறுநில மன்னராகிய நரசிங்கமுனையரையர், அக்காலத்து வழக்கப்படி தமது பேரரசராகிய நரசிம்மவர்மன் பெயரையே வைத்துக் கொண்டிருப்பது தங்களுடைய கருத்தை வலியுறச் செய்கிறது என்றும் வாதாடியிருக்கிறார்கள். இதை ஏற்றுக் கொள்வதற்கு சில தடைகள் இருக்கின்றன. இரண்டாவது நரசிம்மவர்மன் சிவபக்தியால் தூண்டப்பெற்று காஞ்சி கைலாசநாதர் கோவிலையும் பிற கோவில்களையும் கட்டி புகழ்பெற்றான் என்பது உண்மை. ஆனால் அவன்பல போர்களில்வெற்றி பெற்ற வீரன் என்றோ அல்லது அவனுக்கு எதிர்ப்பு இருந்து சிற்றரசர்கள் திறை செலுத்த மறுத்தார்கள் என்றோ, இதுவரை கிடைத்தச் சான்றுகளிலிருந்து கூறமுடியாது. வரலாற்றுப் பேரறிஞர் பி. டி. சீனிவாசய்யங்கார் இவனைப்பற்றி "இவனொரு பல்லவராஜன் காலத்தில்தான் யாதொரு சண்டையும் நடக்கவில்லை. கோவில் கட்டுவதைத் தவிர இவன் செய்தது வேறொன்றும் இல்லை." (பல்லவர் வரலாறு இரண்டாம் பாகம் 77) என்று சொல்லியிருப்பது சற்று மிகையாக இருந்தாலும் உண்மை. சமீபத்தில் அகப்பட்ட பல பல்லவ சாசனங்களிலிருந்து இந்தக் கருத்தை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இவன் பிறப்பித்த கல்வெட்டுகளில் அவனுடைய வீரத்தை பொதுவாக வானளாவப் புகழப்பெற்றிருப்பதிலிருந்து இவன் பல போர்களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்று ஒரு தமிழறிஞரின் வாதத்தில் வலிமை இல்லை. (பல்லவர் வரலாறு. மா. இராசமாணிக்கம் பிள்ளை - 148). இவனை மனதில் வைத்து சுந்தரர் பாடியிருந்தால் இவன் புகழ் பெற்ற கைலாசநாதர் கோவிலைக் கட்டியதையாவது அல்லது இவன் காலத்தில் நேர்ந்த கொடிய மூன்று வருட பஞ்சத்தையாவது எங்கேயாவது குறிப்பிட்டிருக்கவேண்டும் அல்லவா? சுந்தரரின் சிதம்பரப் பதிகத்தில் காணப்பெறும் நிலைமை இவனுக்குப் பொருந்தாது.

அந்த நிலைமை சுமார் நூறாண்டுகளுக்குப் பின் ஆண்ட தந்திவர்மன் (795-845) காலத்தில், பல வருடங்களுக்கு முன்பு கே. எஸ். சீனிவாசபிள்ளை கூறியது போல் (தமிழ் வரலாறு பிற்

பாகம்-74) ஏற்பட்டதாகக் கருதலாம். இவன் ஆட்சியில் வடக்கேயிருந்து இரட்ட அரசர்கள் காஞ்சி மீது மும்முறை படையெடுத்து நீண்ட போர்களுக்கப்புறம் வெற்றியும் பெற்ருர்கள். கி. பி. 803-804ல் இரட்ட அரசன் மூன்ரும் கோவிந்தனிடம் தோற்ற போதும், அதற்கு முன்னுல் துருவனிடம் அடிவாங்கிய போதும் அவர்களுக்கு அடங்கி தந்திவர்மன் கப்பம் கட்டவும் நேர்ந்தது. தெற்கேயிருந்து பாண்டியன் முதலாவது வரகுணன் வடக்கே படையெடுத்து வந்து சோழ நாட்டையும், தொண்டை நாட்டில் பெண்ணையாற்றங்கரை வரையுள்ள தென்பகுதியையும் பிடித்துக் கொண்டான். இதனுல் தந்திவர்மனின் சிற்றரசர்கள் பலர் திறை கொடுக்காமல் இருந்திருப்பார்கள். சுந்தரர் சிதம்பரப் பதிகத்தில் கூறியிருக்கும் நிலைமை தந்திவர்மன் ஆட்சிக்குத் தான் பொருந்தக்கூடியதாயிருக்கிறது. இவன் மகனுன மூன்ரும் நந்திமர்மனின் ஆட்சி காலத்தின் தொடக்கத்திற்கும் சிறிது பொருந்தலாம். இரட்ட அரசன் மூன்ரும் கோவிந்தனின் (கி. பி. 803-804) வெற்றிக்குப் பிறகு சுந்தரர் இந்தப் பதிகத்தைப் பாடியிருக்கலாம் என்று சீனிவாச பிள்ளை சொல்லியிருப்பது ஒரு நல்ல ஊகம் (தமிழ் வரலாறு பிற்பாகம்-74) அவர் கருதியது போல் சுந்தரர் பாடிய ‘கழற்சிங்க நாயனுர் புராணத்தில் “காடவர் குரிசிலாராங்கழற் பெருசிங்கனுர்தாம், ஆடகமேருவில்லார் அருளினுல் அமரிற் சென்று, கூடலார் முனைகள் சாய, வடபுலங் கவர்ந்து” (கழற்சிங்க புராணம் - 2) என்று பாடியிருப்பது மேலே வரையப்பெற்ற கருத்துக்கு முரண்படாதா என்ற கேள்வி எழலாம். பல ஆண்டுகளாக நடந்த போர்களில் இறுதிவெற்றி இரட்ட அரசருக்கு கிடைத்த போதிலும் இடையிடையே, தந்திவர்மனும் தன்படை பலத்தால் வெற்றிபெற்று சில வடபகுதிகளைத் தற்காலிகமாக தன் வசமாக்கியிருக்க வேண்டும் என்று இதற்கு பொருள் கொள்வது பொருத்தமாயிருக்கும். இவன் ஆட்சியில் பாண்டிய அரசன் தெற்கேயிருந்து நெருங்கி பல போர்களில் வெற்றியடைந்திருந்த போதிலும், தொண்டை மண்டலத்தின் வட பகுதியை இவனே தன் ஆயுள் வரை ஆட்சி செய்தான் என்பது குடிமல்லம் என்ற ஊரில் அகப்பட்ட இவனது ஆட்சியின் 49-வது ஆண்டு கல்வெட்டிலிருந்து புலனுகிறது. (பல்லவர் சரித்திரம் - மூன்ரும் பாகம் பி. டி. சீனிவாசய்யங்கார் - 48)

சிறந்த அகச்சான்ருகிய சிதம்பரப் பதிகத்திற்கு அடுத்தபடியாக, சுந்தரர் சேரமான் பெருமான் நாயனுருடன் கொண்ட நட்பும் அவருடன் சேர்ந்து வாழ்ந்ததும் அவருடைய காலத்தை நிர்ணயிக்க வலிமை மிக்க புறச்சான்ருகும். சுந்தரரை மணமேடையில் சிவபெருமான் தடுத்தாட்கொண்டதையும், பின்னர் பரவையாரையும், சங்கிலியாரையும் ஈசனின் துணையுடன் மணந்து அவ்விரு மண வினைகளில் விளைந்த இன்ப துன்பங்களை அநுபவித்ததையும் தவிர்த்தால், சேர அரசருடன் கொண்ட தொடர்புதான் அவருடைய சமய வாழ்வின் மையமான சம்பவம். சேக்கிழார் இதற்கு மிகுந்த முக்கியத்துவம்கொடுத்து ஆர்வத்துடன் பாடியிருக்கிருர். சுந்தரரும் சேரமான் பெருமானை “கார்கொண்ட தொடை கழறிற்றறிவார்க்கும் அடியேன்” என்று பாணபத்திரர் சம்பவத்தை மனதில் வைத்து திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடுகிருர். இவர்கள் இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்த நண்பர்கள் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட கொள்கை. சுந்தரர் தமது தேவாரத்தில் சேரமான் பெருமாள் நாயனுரைப் பற்றியாவது, சேரமானின் பிரபந்தங்களில் சுந்தரரைப் பற்றியாவது எந்தவித பிரஸ்தாபமும் இல்லையென்றும் அப்படியிருந்தும் சேக்கிழார் இவர்களுடைய தொடர்பையும் நட்பையும் பற்றி பாடியிருக்கிருர் என்றும் ஓரளவு சந்தேகத்தை எழுப்பி பேராசிரியர் வையாபுரி பிள்ளை எழுதியிருக்கிருர். (தமிழ் இலக்கிய வரலாறு, ஆங்கிலம்-III) சுந்தரர் ‘கழறிற்றறிவார்’ என்ற பெயரையே சேக்கிழார் புராணத்திற்குத் தலைப்பாகக் கொடுத்திருக்கிருர். இருந்தபோதிலும் அவருடைய பெயர் ‘பெருமாக்கோதையார்’ என்றும் சேர அரசன் ‘செங்கோற் பொறையன்’ அரசைத் துறந்து தவம் செய்ய போனபோது அமைச்சர்கள் கேட்டுக்கொண்டபடி பெருமாக்கோதையார் அரசு கட்டிலில் ஏறினுர் என்றும் சேக்கிழார் கூறி அவரை ‘சேரர்கோன்’ என்று தெளிவாக வரைந்திருக்கிருர். அத்துடன் சுந்தரமூர்த்தி நாயனுர், தமது திருப்பரங்குன்றம் தேவாரத்தின் 11-வது பாட்டில், “முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்த” என்பதில் சேரமான் பெருமானையும் சேர்த்துக்

கூறியிருப்பது தெளிவாயிருக்கிறது. இந்தப் பாடல் பின்னர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் பேராசிரியர் வையாபுரி பிள்ளை மேலே கூறியிருப்பது முற்றிலும் சரி என்று சொல்வதற்கில்லை. ஆகவே கழறிற்றறிவாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் ஒருவரே என்பதும் அவர்கள் காலமே சுந்தரரின் காலம் என்பதும் சேக்கிழார்க்கு உடன்பாடு. இதுவே வரலாற்று உண்மையுங்கூட. கேரளநாட்டு சரித்திரத்தில் சேரமான் பெருமாளுக்கு இருந்த ஸ்தானத்தையும் காலத்தையும் இனி ஆராய வேண்டும்.

கேரளநாட்டின் சரித்திரத்தில் பெருமாள்களின் ஆட்சியைப் பற்றியும், அவர்கள் காலத்தைப் பற்றியும் ஆதாரமற்று, குழப்பம் ஏற்படுத்தக் கூடிய பல கருத்துக்கள் நிலவி வந்தன. அங்கே சுமார் கி. பி. நான்காம் நூற்றாண்டு முதல், பிறநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பெருமாள்கள் என்பவர்கள் தொடர்ந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செய்தார்கள் என்றும், ஒவ்வொருவரும் 12 வருடங்கள் அரசாட்சி நடத்தியதாயும் இவர்களில் கடைசியானவர் சேரமான்பெருமாளென்றும் அவர் மூன்று தடவையாக 36 ஆண்டுகள் பதவியிலிருந்துவிட்டு இறுதியில் இஸ்லாமியமதத்தை தழுவி மெக்காவிற்கு கப்பலேறினர் என்றும், அவ்வாறு போவதற்கு முன்பு, நாட்டைப் பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் வெவ்வேறு தலைவர்களிடம் அரசுரிமையுடன் ஒப்படைத்துவிட்டு போனார் என்றும் கேரளோற்பத்தி என்ற மலையாள நூலிலும், சில மாறுதல்களுடன் கேரளமஹாத்மியம் என்ற வடமொழி நூலிலும் காணப் பெறுகின்றன. சமீபகாலம் வரை அநேக அறிஞர்கள் இவற்றை சரித்திர உண்மைகள் என்று நம்பியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். கடந்த சில வருடங்களாக கேரள வரலாற்றாசிரியர்கள், சாசனங்கள், கல்வெட்டுகள், பிற சான்றுகள் ஆகியவற்றின் துணையுடன் ஆராய்ச்சி செய்ததில், மேலே கூறப்பெற்ற விஷயங்கள் கற்பனை என்று முடிவு செய்திருக்கிறார்கள். கேரளாவின் வரலாற்றை விரிவாக எழுதியிருக்கும் கே. ஏ. பத்மநாபமேனன், அந்தநாட்டைப் பாண்டியர்களும் சோழர்களும் அடிக்கடிவென்று அவர்கள் பிரதிநிதிகளை அரசாட்சிநடத்த அனுப்பியதைத் தான் இவ்வாறு பெருமாள்கள் ஆட்சியாக கற்பனை செய்திருக்கிறார்கள் என்றும், எந்த கேரள அரசனும் இஸ்லாமிய சமயத்தைத் தழுவவில்லை என்றும் பிற்காலத்தில் கோழிக்கோடைச் சேர்ந்த 'ஜாமரின்'களில் ஒருவர் இஸ்லாமிய மதத்தைத் தழுவியதாகத் தெரிகிறதென்றும் எழுதியிருக்கிறார். வரலாற்றுப் பேராசிரியர் ஏ. சீதரமேனன், பெருமாள்களின் ஆட்சியைப் பற்றி மேற்படி இரண்டு நூல்களிலுள்ளவை முழுவதும் ஆதாரமற்ற கட்டுக்கதைகள் என்று தக்க காரணங்களைக் கூறி தமது கேரள சரித்திரம் என்ற ஆங்கில நூலில் ஒதுக்கியிருக்கிறார்.

சங்ககால சேர அரசர்கள் பெருங் கீர்த்தியுடன் ஆண்டு மறைந்த பிறகு, சுமார் 9-ம் நூற்றாண்டுவரை சேரநாட்டின் வடக்குப்பகுதியின் வரலாற்றைத் தெளிவாகத் தெரியமுடியவில்லை. இதை ஒரு இருண்டகாலமாகத்தான் வரலாற்றுப்புலவர்கள் கருதுகிறார்கள். கி. பி. 9-ம் நூற்றாண்டிலிருந்து சாசனங்கள் முதலிய தக்க சான்றுகளிலிருந்து இந்த இருள் நீங்கி வெளிச்சம் தென்படுகிறது. இக்காலத்தில் கேரளநாட்டின் வடபகுதியில் (தென்பகுதியில் ஆய்குல மன்னர்கள் சங்ககாலத்திலிருந்து பத்தாம் நூற்றாண்டுவரை ஆண்டிருக்கிறார்கள்) குலசேகரவம்சம் தலையெடுத்து அதைச்சேர்ந்த 13 அரசர்கள் கி பி 800 முதல் 1102 வரை ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். இது சேர நாட்டின் இரண்டாவது பேரரசாக வரலாற்று ஆசிரியர்கள் கொண்டிருக்கிறார்கள். இந்த வம்சத்தை ஸ்தாபித்த முதல் அரசர் குலசேகர வர்மன். இவரே தமிழ்நாட்டு வைணவ ஆழ்வார்களில் ஒருவரான குலசேகராழ்வார் என்றும அவர் கி. பி. 800 முதல் 820-வரை ஆண்டார் என்றும் சொல்லப்படுகிறது. நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் தொகுக்கப்பட்டிருக்கும 'பெருமாள் திருமொழியும்' வடமொழியிலுள்ள முகுந்தமாலாவும் இவரால் அருளப்பெற்ற நூல்கள் (கேரள சரித்திரம் [ஆங்கிலம்] ஏ. சீதரமேனன் பக்கம் 123 — 124) குலசேராழ்வார் சேர நாட்டரசராயிருந்தார் என்று வைணவ குரு பரம்பரை நூல்கள் கூறுவதுடன், அவரே தமது பாடல்களில், தம்மை 'கொல்லி காவலன்' 'கூடல் நாயகன்' 'கோழிக்கோன்' என்று கூறிக் கொண்டிருக்கிறார்.

குலசேகரவர்மனுக்கு அடுத்தபடியாக ஆண்டவர் ராசசேகரவர்மன் என்பவர். இவர் கி. பி. 820 முதல் 844 வரை ஆட்சியில் வீற்றிருந்தார். மாதவரின் சங்கர விஜயத்திலும் ஆதிசங்கரரின் சிவானந்தலகரிலும் குறிப்பிடப்பட்ட ராசசேகரன் இவரே என்று கருதப்படுகிறது. இவர் தம் 12-வது ஆட்சி வருடத்தில் (கி. பி.-832) பிறப்பித்த வாளைப் பள்ளி சாசனம், கேரள நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தாமர சாசனங்களில் காலத்தால் முந்தியது என்று சரித்திர ஆசிரியர்கள் கருதுகிறார்கள். இந்த சாசனத்தில் ராசசேகரன் 'ராஜாதிராஜன்' 'பரமேஸ்வரபட்டாரக' என்று அழைக்கப்படுகிறான். (ஏ. எஸ். இராமநாதய்யர் 24வது ஓரியண்டல் மகாநாட்டின் நடவடிக்கைகள். பக்கம் 351) அத்துடன் அந்த சாசனம் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற பிற சாசனங்களிலுள்ள மங்கல மொழியால் ஆரம்பிக்கப்படாமல் 'நம சிவாய' என்ற (பஞ்சாக்கரத் தொடருடன் தொடங்குகிறது) என்ற முக்கியமான செய்தியை சீதர மேனன் வெளியிட்டிருக்கிறார். இதிலிருந்து அவர் சிறந்த சிவபக்தராக இருக்கவேண்டும். இந்த அரசன் ராசசேகரன்தான் சேரமான் பெருமாள் நாயனார் என்று பேராசிரியர் டாக்டர் குஞ்சன்பிள்ளையைப் பின்பற்றி முடிவு கட்டுகிறார் இந்த வரலாற்றாசிரியர் (கேரள சரித்திரம் ஏ. சீதரமேனன் 123-24). பேராசிரியர் எலம்குளம் குஞ்சன்பிள்ளை ராசசேகரன் குலசேகரின் மகன் என்றும், அக்காலத்தில் மக்கட்தாயம் தான் இருந்ததென்றும் கருதுகிறார். இது ஆராய்ச்சிக்குரியது.

தமிழ்நாட்டு இலக்கியம், வரலாறு, சாசனங்கள் ஆகியவைகளிலிருந்து இந்த முடிவைப் பற்றி முற்றிலும் ஆய்ந்து தெளிவதற்கு மார்க்கமில்லை. குலசேகரர் தாம் ஆண்ட நாடுகளைக் குறிப்பிட்டிருப்பது போல், சேரமான் பெருமாள் செய்யாமல், வெறுமனே தாம் அரசனாயிருந்ததை "நானிலம் ஆளினும் நான்மறை சேர், மையார் மிடற்றான் அடிமறவா வரம் வேண்டுவனே" என்று பாடியிருக்கிறார். (பொன் வண்ணத்தந்தாதி - 98). எனினும் பெரிய புராணத்தை நுட்பமாக ஆராய்ந்தால், ராசசேகரன் தான் சேரமான் பெருமாள் நாயனார் என்ற கூற்று சரியானதுதான் என்று தேறலாம்.

அதைக் கவனிக்கும் முன்பு ஒரு விஷயத்தை நாம் குறிப்பிடவேண்டும். தமிழ்நாட்டில் சுமார் கி.பி. ஆறும் நூற்றாண்டில் தோன்றி 10ம் நூற்றாண்டு வரையில் செழித்தோங்கிய சைவ வைணவ பக்தி இயக்கம் கேரள நாட்டிலும் பரவியிருந்தது. கேரள நாட்டின் அரச வம்சங்களும், சமுதாயத்தைச் சார்ந்த பழக்க வழக்கங்களைக்காட்டக் கூடிய மலைநாட்டு நாகரிகமும் வேறாக இருந்த போதிலும், சமயம், மொழி ஆகியவற்றைப் பொறுத்த வரையில், கேரளாவும் தமிழ்நாடும் அக்காலத்தில் ஒன்றாகவேஇருந்தது. மலையாளம் தனி மொழியாக உருவெடுத்தது சுமார் கி. பி. 10-ம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான். வைணவ ஆழ்வார்கள் கோஷ்டியிலும் சைவ நாயன்மார்கள் குழாத்திலும், ஒவ்வொரு கேரள அரசன் முக்கியமான உறுப்பினராயிருப்பதுமன்றி, சிறந்த கவிஞர்களாயுமிருந்து அவரவர்கள் போற்றும் பரம்பொருள்மீது நெஞ்சை உருக்கும் அருட்பாடல்களை இயற்றியிருப்பது, தற்செயலாய் நிகழ்ந்திருந்த போதிலும், ஒரு அற்புதம் என்றே கருத வேண்டும். ஒரே வம்சத்தைச் சேர்ந்து ஒருவர் பின் ஒருவர் ஆண்டவர்களில் முன்னவர் தீவிர திருமால் அடியாராகவும், பின்னவர் சிறந்த சிவனடியாராகவும் இருந்திருப்பது சற்று விந்தையாகத் தோன்றலாம். ஆனால் அந்தக் காலத்தில் (அதாவது 7, 8, 9 நூற்றாண்டுகளில்) இருந்த அரசர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும், ஒரே சமயத்தை பின்பற்றியவர்கள் அல்லர். சிலர் சிவபக்தர்களாகவும் வேறு சிலர் வைணவர்களாகவும், ஒரு சிலர் சமணர்களாகவும் இருந்திருப்பது பல்லவ பாண்டிய சரித்திரங்களிலிருந்து புலனாகிறது. ஆகையால் சேர வம்சத்தைச் சேர்ந்த குலசேகரர் வைணவராயும், அவருக்குப் பின்னர் ஆண்ட ராசசேகரன் என்ற சேரமான் பெருமாள் சைவராயும் இருந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

பெரிய புராணத்தைச் சேர்ந்த கழறிற்றறிவார் நாயனார் புராணத்தில், அவருடைய பெயர் பெருமாக் கோதையார் என்றும் அவருக்கு முன்னிருந்த அரசர் பெயர் செங்கோற்பொறையன் என்றும் சேக்கிழார் குறிப்பிடுகிறார். இவ்விரண்டும் அவர்களுடைய இயற்பெயர்களாகத் தோன்றவில்லை. செங்கோற்பொறையன் என்

பதற்கு நீதி வழுவாமல் பொறுமையே உருவாக இருந்து அரசாட்சி செய்த மன்னன் என்று பொருள். இது குலசேகராழ்வாருக்குப் பொருந்தக்கூடியதாயிருப்பது கவனிக்கத்தக்கது. அவருடைய மனம் நாட்டின் ஆட்சியின் மீது செல்லாமல், ஸ்ரீமதி நாராயணன் மீதும் அவரது திரு அவதாரங்கள் மீதும் எப்போதும் பக்தி செய்து, திருவரங்கம், திருவேங்கடம் முதலிய திருப்பதிகளுக்குப் போய் அவரை வணங்க வேண்டுமென்று ஏங்கியது, என்பது அவ் ஆழ்வாருடைய பாடல்களிலிருந்து புலனாகிறது. அவர் சமய வாழ்வுக்காக அரசைத் துறந்தார் என்பது நம்பக்கூடிய செய்தி. செங்கோற் பொறையனும் அவ்வாறு செய்ததாகத்தான் சேக்கிழார் கூறுகிறார். இவருக்கு அடுத்தபடியாக ராசசேகரன் ஆண்டதாக வரலாற்றுச் செய்தி. பெருமாக் கோதையார் செங்கோற் பொறையனின் மகன் என்று பெரிய புராணம் கூறவில்லை. ஆனால் அவர் இளவரசாக இருந்திருக்கிறார். "உரிமை அரசர் தொழில் புரியார், தெண்ணீர் முடியார் திருவஞ்செக் களத்தில் திருத்தொண்டே புரிவார்" (கழறி - புராணம்-7) என்று சேக்கிழார் பாடுவதால் அவர் இளவரசராக இருந்த போதே, கொடுங்கோளூரைச் சேர்ந்த (Crauganore) திருவஞ்சைக்களத்தில் சிவத்தொண்டு புரிந்துகொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது "உரிமை அரசர் தொழில்" என்பதால் பெருமாக் கோதையார் செங்கோற் பொறையனின் சகோதரியின் மகனாக இருந்திருக்கலாம். சேரவம்சத்தில் பெரும்பாலும் அரசு மருமக்கத்தாய வழியிலேயே இறங்கி வந்திருப்பதால், இளவரசன், அரச கடமையையும் மறந்து புனிதமான சிவத்தொண்டையே செய்து வந்ததால், அவரை 'பெருமாக்கோதையார்' என்று இரண்டு சிறப்பு அடைமொழிகளுடனும் மரியாதைப் பன்மையுடனும் குறிப்பிடுகிறார், கொடுங்கோளூர் என்ற திருவஞ்சைக் களத்திற்கும், மகோதை அல்லது மகோதையபுரம் என்ற பெயரும் உண்டாதலால், பெருமாக்கோதையார் என்பதற்கு மகோதையபுரத்தைச் சேர்ந்த பெரியார் என்ற பொருள் கூறலாம். மகோதை, மாகோதையாகலாம். 'மா'விற்கு அடுத்த ககர மெய்யெழுத்து தடையாயிருக்கலாமோ என்பதற்கு, கவிஞர்களுடைய இதுபோன்ற உரிமைகளையும் நாம் மறந்துவிடக்கூடாது. முன்னவர் அரசு துறந்து போன போது 'சிந்தை மதிநூல் அமைச்சர் சில நாள் ஆய்ந்து" (கழறி-11) பெருமாக்கோதையாரிடம் சென்று அரசு கட்டிலில் ஏறும்படி வேண்டிக்கொள்ள அவரும் சிவபெருமான் சம்மதம் பெற்று இணங்கி அரசாட்சியை ஏற்றுக்கொண்டார். இவர் இளவரசராயிருந்திருக்கும்போது, அமைச்சர்கள் அவரைக் கூப்பிட 'சிலநாள் ஆய்ந்து' ஏன் காலம் தாழ்த்த வேண்டும் என்ற ஐயம் நிகழலாம். துறக்கப் போகும் அரசர், சமயத்தில் தீவிரமாக ஈடுபட்டு வெளியேறுகிறார். இளவரசரும் அவ்வாறே தீவிரமாகக் கடவுள் பணியில் ஈடுபட்டிருந்ததால், அரசு கட்டிலில் உடனே ஏற்றிவிட்டால், அவரும் துறந்துவிட்டால் என்ன செய்வது என்று அமைச்சர்கள் நியாயமாகவே தகுதி சிலநாட்கள் ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். அவர்கள் தயக்கம் முற்றிலும் சரிதான் என்பது பெருமாக்கோதையார் "இன்பம் பெருகும் திருத்தொண்டுக்கிடையூறாக இவர் மொழிந்தார்" (கழறி-13) என்று கூறி சிவபெருமானின் கழுத்தை அறிவேன் என்று பதில் உரைத்ததிலிருந்து புலனாகிறது. அரசு புரியும் போதுஇடையறு சிவபக்தியில் திளைத்து தமது நாட்டை விட்டுப் புறப்பட்டு தில்லைக்குச் சென்று நடராசப் பெருமானை வணங்கிவிட்டு, சிலநாள் கழித்து திருவாரூர் போய் சிவபெருமானே தமக்கு அறிமுகம் செய்வித்த சுந்தரமூர்த்தியின் நட்பைப் பெற்று, அதை தான் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதி அவருடன் பல திருப்பதிகளுக்குத் தலயாத்திரையாகச் சென்றுவிட்டு சேரமான் பெருமாள் திருவஞ்சைக்களம் திரும்பினார். இவற்றை எல்லாம் ஊன்றிக் கவனித்தால் ராசசேகரன்தான் சேரமான் பெருமாள் நாயனார் என்று வரலாற்றுசிரியரின் கருத்து சரியான ஊகமாயிருக்கும் என்று தோன்றுகிறது. ஆகையால் அவரும் சுந்தரரும் சமகாலத்தவர்கள் என்று ஏற்படுகிறது, அவருடைய காலமாகிய கி. பி. 9-ம் நூற்றாண்டின் முற்பகுதியே சுந்தரருடைய காலம் என்று முன்னர் சில தமிழறிஞர்கள் கொண்டது உறுதிப்படுகிறது. இது பல்லவ அரசர் தந்திவர்மன் காலமாகையால் சுந்தரர் குறிப்பிடும் பல்லவ அரசர் தந்திவர்மனாய்த்தான் இருக்கவேண்டும். அவன் சிறந்த சிவபக்தனாயிருந்திருக்கிறான். என்பது திருச்சிராப்பள்ளி பக்கமுள்ள ஆலம்பாக்கம் என்ற ஊரில் (இவ்வூர்

அக்காலத்தில் தந்திவர்வமங்கலம் என்ற பெயருடையது) கைலாசநாதர் கோவில் என்ற ஒரு சிவன் கோவில் கட்டியதிலிருந்து தெரிகிறது. இவனது தகப்பனர் இரண்டாவது நந்திவர்ம பல்லவன் வைணவனுயிருந்த போதிலும் இவன் அச்சமயத்தில் ஈடுபட்டிருந்தாகத் தெரியவில்லை. சிவபக்தனுயிருந்த போதிலும் பிற சமயங்கள் மீதும் அன்பு பூண்டிருந்தான். இவனது மகனுன பெருங்கீர்த்தி வாய்ந்த மூன்ரும் நந்திவர்ம பல்லவன் 'சிவனை முழுதும் மறவாத சிந்தையன்' என்று நந்திக் கதம்பகத்தில் சொல்லப்பட்டிருப்பது போல், சிவபக்தனுகவே இருந்திருக்கிருன்.

தந்திவர்மனது ஆட்சிதொடங்கி 21 வருடங்களுக்குத்தான் கல்வெட்டுகள் காணப் பெறுகின்றன என்றும் அதற்குப்பின் 49வது ஆண்டுவரை அவை அகப்படவில்லை என்றும் ஆகையால் அவன் ஆட்சிகாலத்தில் பெரும் இடைவெளி ஏற்பட்டிருக்கிறது என்றும் இந்த காலத்தில் சோழ அரசன் ஸ்ரீகண்டன் (பாண்டிய அரசன் இரண்டாவது வரகுணனின் தாய்வழிப் பாட்டன்) காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி அரசாட்சி செய்திருக்க வேண்டும் என்றும் ஒரு சரித்திரப் பேராசிரியர் கூறுகிருர். (முற்கால தென்னிந்திய சரித்திரத்தில் காஞ்சிபுரம் — டாக்டர் டி. வி. மகாலிங்கம் — 192). இது உண்மையாயிருந்தால், பிற்கால விசயாலய சோழவம்சம் தலைதூக்குவதற்கு முன்னிருந்த இச்சோழன் பாண்டியனின் பிரதிநிதியாக சில ஆண்டுகள் காஞ்சிபுரத்திலிருந்து ஆட்சி செய்திருக்கலாம். இவ்விஷயங்கள் ஆராய்ச்சிக்குரியுனவாயிருந்த போதிலும், தந்திவர்மன் காலத்தில் சுந்தரர் வாழ்ந்தார் என்ற கருத்துக்கு அவை முரண்பாடாயில்லை. டாக்டர் சி. மீனுட்சி, சுந்தரர் மூன்ரும் நந்திவர்மன் காலத்தவர் (பல்லவர்கள் காலத்திலுள்ள ஆட்சி முறையும் சமுதாய வாழ்வும் - 300) என்று கூறியிருப்பதும் டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை இதை ஏற்றுக்கொண்டு (பல்லவர் வரலாறு198—199) 'கழற்சிங்கன்' என்று சுந்தரர் பாடியிருப்பது இந்த மூன்ரும் நந்திவர்ம பல்லவனைத்தான் என்று கூறுவதும் இப்போது பொருத்தமில்லை. இந்த பல்லவ மாமன்னனின் ஆட்சி கி. பி. 825ல் தொடங்கி 850 வரை நடந்ததாக இவ் ஆசிரியர் கொண்டிருப்பதால் இவ்வாறு கருதியிருக்கிருர். தந்திவர்மனின் ஆட்சி கி. பி. 846 வரை நடைபெற்றது என்பதுதான் வரலாற்ருசிரியரின் இன்றையக் கொள்கை; இவன் ஆட்சியின் 51-வது ஆண்டு கல்வெட்டு ஒன்றும் கிடைத்திருக்கிறது. சுந்தரர் கி. பி. 846க்குப் பின் வாழ்ந்திருந்தால் மூன்ருவது நந்திவர்மன் காலத்திலும் ஒன்றிரண்டு வருடங்கள் இருந்திருக்கலாம். ஆனுல் இது அவரது வாழ்க்கையின் முக்கியமான சம்பவங்கள் நடைபெற்று முடிந்த காலம். சுந்தரரின் பிறப்பு, மறைவு ஆகிய வருடங்களைப் பற்றி எந்தவித தகவல்களும் இல்லை. எனினும் அவர் ஏறக்குறைய கி. பி. 8-வது நூற்ருண்டின் இறுதியில் தோன்றி 9வது நூற்ருண்டின் முற்பாதிவரை வாழ்ந்தார் என்று ஓரளவு திட்டமாகக் கொள்ளலாம். ராசசேகரனின் ஆட்சிக்காலம் கி. பி. 844ல் முடிந்தது என்று கேரள வரலாற்ருசிரியர் எழுதியிருப்பதை முன்னர் குறிப்பிட்டிருக்கிரோம். சேரமான் பெருமாளும் குலசேகரரைப் போல் ஒரு கட்டத்தில் அரசைத் துறந்து சமயவாழ்வில் முற்றிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். அதற்கப்புறம் அவரும் சுந்தரரும் சேர்ந்து சில ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம்.

சேரமான் பெருமாள் நாயனர் புராணத்தின்படி அவர் சுந்தரருடன் தலயாத்திரையில் ஈடுபட்டிருக்கும்போது மதுரைக்குச் சென்ருர். இதைப்பற்றி சேக்கிழார் இரண்டு பாடல்கள் வரைந்திருக்கிருர்.

சேரமான் தோழரும் அச்சேரபிரானும் பணிப்பூண
ஆரமாப்பரை மதுரை ஆலவாயினில், வணங்க
வாரமா வந்தணைய வழுதியார் மனக்காதல்
கூரமா நகர்கோடித்தெதிர்கொண்டு கொடுபுக்கார்
தென்னர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன் மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனுர்
அன்னவர்கள் உடன் கூடஅணைய அவருங்கூடி
மன்னுதிரு ஆலவாய் மணிக்கோயில் வந்தணைந்தார்
கழறி-புராணம் - 91,92

பின்னர் பாண்டியன், சோழன், சேரமான் ஆகிய மூவேந்தர்கள் சுந்தரருடன் போய் பல ஆலயங்களைத் தரிசனம் செய்ததை சேக்கிழார் பெருமிதத்துடனும், ஆர்வத்துடனும் பாடியிருப்பதிலிருந்து, இதை அவர் மிக முக்கியமான நிகழ்ச்சித் தொடராகக் கருதியிருந்தார் என்று புலப்படுகிறது. அப்புறம் சில திருப்பதிகளைத்

தரிசனம் செய்துவிட்டு திருப்பரங்குன்றம் சென்றார்கள். இதைப்பற்றியுள்ள பெரியபுராண பாடல்கள் வருமாறு:-

பரமர் திருப்பறங்குன்றில் சென்று பார்த்திபரோடும்
புரமெத்தார் கோயில் வலங்கொண்டு புகுந்துள்
ளிறைஞ்சி
சிரமலிராலைச் சடையார் திருவடிக்கீழ் ஆட்செய்யும்
அருமையினைத் 'தஞ்சுதும்' என்றாரூரர் பாடுவார்.
கோத்திட்டை என்றெழுத்துக் கோதில் திருப்பதிக
இசை
மூர்த்தியார் தமைவணங்கி முக்சோககளுடன் முன்பே
ஏத்திய வண்தமிழ்மாலை இன்னிசைப் பாடிப் பரவிச்
சாத்தினர் சங்கரனார் தங்கு திருப்பரங்குன்றில்
கழறி - 102, 103

இவை குறிக்கும் சந்தரரின் தேவாரத்தின் முதல் பாடல் "கோத்திட்டையும்" என்று ஆரம்பிக் கிறது. அதன் 11ம் பாடல் இது.

அடிகேள் உமக்காட்செய அஞ்சுதும் என்றமர்
பெருமானை ஆரூரன் அஞ்சி,
முடியால் உலகாண்ட மூவேந்தர்முன்னே மொழிந்
தாலும் ஒர்நான்கும் ஒரொன்றினையும்
படியா இவைகற்று வல்லஅடியார் பரங்குன்றமேயப்
பரமன் அடிக்கே
அடியாகி வானோர்க்கும் ஓர்கோவும் ஆகிக்
குலவேந்தராய் விண்முழுதாழ்பரே.
(திருப்பரங்குனறப் பதிகம் - 11)

முதல் பாட்டில் 'பாத்திபரோடும்' என்று சுந்தரரே குறிப்பிடுவதால் இது சுந்தரர் சேரமான் தொடர்புக்கு இது ஒரு நல்ல அகச் சான்றாகும்.

பாண்டிய அரசன் மகளாரை 'திருவேட்டு முன்னரே' சோழனார் மதுரையில் இருந்ததாகக் கூறப் பட்டிருக்கிறது. இங்கு குறிப்பிட்ட பாண்டியன் கி. பி. 792 முதல் 835-வரை முதலாவது வரகுணனாய் இருத்தல் வேண்டும். அவன் சிறந்த சிவபக்தனானதால் சுந்தரரையும் சேரமான் பெருமாள் நாயனாரையும் தக்கமுறை யில் வரவேற்று உபசரித்து மரியாதை செய்திருக்கிறான். 'சோழனார்' யார் என்று தெரிய வேண்டும். அவர் முதல் வரகுணனின் மகளை மணந்த ஸ்ரீகண்ட சோழர் என்று தெரிகிறது. இவருடைய மகளான அக்கிலா நிம்மதியை வரகுணன் மகன் ஸ்ரீமாரன் ஸ்ரீவல்லபன் மணந்திருக்கிறான். வரகுணன் பல்லவ தந்தி வர்மனைப் போரில் தோற்கடித்த பிறகு ஸ்ரீகண்டன் பாண்டியப் பிரதிநிதியாக சிலகாலம் காஞ்சியிலிருந்து ஆண்டிருக்கிறான் என்று முன்னர் கூறியிருக்கிறோம். இச்சோழர் மதுரையில் தமக்கு மாமனாராகப் போகும் பாண்டியனுடன் இருந்தபோது சுந்தரரையும் சேரமான் பெருமாள் நாயனாரையும் வரவேற்று அவர்களுடன் தலயாத்திரை செய்ததைத்தான் சேக்கிழார் குறிப்பிடுகிறார். மேலே கூறப் பெற்ற சோழ பாண்டிய உறவு இரண்டாவது வரகுணனுக்கப்புறம் ஆண்ட அவன் தம்பியான பரந்தக வீரநாராயண மன்னனின் 45-வது ஆட்சி ஆண்டில் பிறப்பித்த தளவாபுரம சாசனத்திலிருந்து துலங்குவதாக டாக்டர் டி. வி. மகாலிங்கம் மேலே குறிப்பிடப்பெற்ற தமது நூலில் விளக்கியிருக்கிறார்.

சுந்தரர் காலத்தவரான சேரமான் பெருமாள் கி. பி. 9-வது நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்ப தற்கு அகழ் ஆராய்ச்சித் துறையிலிருந்தும் (Archaeological department) சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கொடுங்கோளூர் என்ற மகோதயபுரத்தைச் சேர்ந்த திருவஞ்சைக் களத்தில் சேரமான் பறம்பு என்று சரித்திர பிரசித்திபெற்ற ஒரு மேடு இருக்கிறது. இந்த இடத்தில் இருந்த அரண்மனையில் சேரமான் வசித்து அரசாட்சி செய்ததாகக் கருதப்பெறு கிறது. இந்த பறம்பையும், அதற்குப் பக்கத்தி லுள்ள திருவஞ்சைக்களம் கோவிலுள்ள இரண்டு இடங்களையும் அகழ் ஆராய்ச்சித்துறை வல்லுனர்கள் 1969-70ல் தோண்டி அடித்தளம் வரை குழிகள் வெட்டினதில், சிவப்பு மண் பாண்டத்துண்டுகள், ஓடுகள், சீனாவைச் சேர்ந்த மண்பாண்டவகைகள் கிடைத்தன. இவைகளை நிபுணர்கள் சோதனை செய்து அவை கி. பி. 8-9 நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று முடிவு கட்டியிருக்கிறார்கள். கிடைத்த ஒரு பொருளாவது இந்தக்காலத்திற்கு முந்தியவை அல்ல என்று தீர்மானித்து சேர இரண்டாம் பேரரசை நிறுவின குலசேகரர்தான் இந்த இடத்தில் கொடுங்கோளூர் என்ற மகோதயபுரத்தை ஒரு புது தலைநகராக நிர்மாணித்திருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். (கேரளாவில் நடந்திருக்கும் அகழ் ஆராய்ச்சி டாக்டர் கே. வி. ராமன்—பாளையங்கோட்டை ஆராய்ச்சி மலர்-2 இதழ்-1, பக்கம் 102-103.)

சுந்தரரின் காலத்தின் பின் எல்லையைக் குறிப்பிட ஒரு முக்கியமான சான்று இருக்கிறது. பல்லவ அரசன் தந்திவர்மன் மகனுன மூன்ரும் நந்திவர்மன், தமது 17-ம் ஆட்சி ஆண்டில் பிறப்பித்தச் சாசனம் ஒன்று, திருவல்லம் பில்வநாதசுவாமி கோவிலில் பொறிக்கப்பட்டிருக்கிறதைப் பல வரலாற்ருசியர்கள் எடுத்துக் காட்டியிருக்கிருர்கள் (தென் இந்திய கல்வெட்டுகள் - மூன்ரும் புத்தகம் - 9) அதில் அக்கோவிலுக்கு மூன்று சிற்றூர்கள் தேவதானமாக அளிககப்பட்டிருக்கின்றன என்றும் அவைகளின் வருமானத்திலிருந்து திருப்பதியம் ஓதுவார் உள்ளிட்ட பலருக்கு 2000 காடி நெல்லும், 20 கழஞ்சு பொன்னும் தரப்படவேண்டும் என்றும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது கி. பி. 863ம் வருடத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருப்பதியம் என்று பொதுவாக இருப்பது மூவர் தேவாரத்தைக் குறிக்கும். கி. பி. 863ல் சுந்தரரின் தேவாரம் பிரபலமாகிறது. அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் வாழ்ந்திருக்கவேண்டு என்பது தெளிவு.

மேலே தொகுத்துக் கூறப்பெற்ற செய்திகளிலிருந்தும், இலக்கிய, சாசன சான்றுகளிலிருந்தும், மேற்கோள்களிலிருந்தும் வாதங்களிலிருந்தும் வாதங்களிலிருந்தும் சுந்தரர் எட்டாம் நூற்ருண்டின் இறுதியிலும் ஒன்பதாம் நூற்ருண்டின் முற்பாதியிலும் வாழ்ந்தவர் என்று நிச்சயமாக முடிவு கட்டலாம். இந்தக் காலம் சுமார் கி. பி. 790-850 ஆக இருக்கக்கூடும் என்று ஊகித்தால் அது தவருகாது.

---

Statement of ownership and other particulars Mont Ne wspaper Aaraaichi Tamil & English

FORM IV

(See Rule 8)

1 Place of publication — Palayamkottai, Tamil Nadu.

2 Periodicity of publication — Quarterly.

3 Printer's Name — N. Vanamamalai, Aaraaichi Press.
Whether Citizen of India — Yes
Address — N. Vanamamalai, Aaraaichi, 258, Tiruchendur Road, Palayamkottai, Tamilnadu.

4 Publishers name — N. Vanamamalai
Address — 258, Tiruchendur Road, Palayamkottai, Tamilnadu.

5 Editor's name — N. Vanamamalai,
Address — 258, Tiruchendur Road, Palayamkottai, Tamilnadu.

I, N. Vanamamalai hereby declare that the particulars given alove are true to the best of my knowledge and belief.

Palayamkottai
1-4-74

(Sd) N. Vanamamalai
Publisher.